பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

tamilnenjam.com

மார்ச் 2024

## சோழவந்தான் கவிச்சிங்கம் சொக்கவைக்கும் தமிழ்த்தங்கம்

பக்கம் 10




வடிவமைப்பு சேவைகள்
கல்வி
பாடத்திட்டம்
கையேடுகள்
மீள் பதிப்பு
மொழிபெயர்ப்பு
சஞ்சிகைகள்
மலர்கள்
நூல்
மற்றும் தங்கள் விருப்பத்திற்கேற்ப தட்டச்சு மற்றும் வடிவமைப்பு வேலைகளை தமிழ், சிங்களம், ஆங்கிலம் மற்றும் அரபு மொழிகளில் செய்து கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு..
+94 70 377 0731
designglitz123@gmail.com
DESIGN GLITZ

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

உதயம் 1972 – மார்ச் 2024

627

நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

ஆசிரியர் / வெளியிடுபவர் :

அமின் மொஹமெட்

இணையாசிரியர் :

முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி

நிர்வாக ஆசிரியர் :

சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :

ஹிப்ஸுர் ரஹ்மான்

பாவேந்தல் பாலமுனை பாறூக்

கவிஞர் நெல்லை உலகம்மாள்

பாவலர்மணி இராம வேல்முருகன்

பாவலர் தென்றல் கவி

வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்

கவிஞர் பொன்மணிதாசன்

கவிஞர் ஈழபாரதி

ஆலோசகர்கள் :

பாட்டரசர் கி. பாரதிதாசன்

கவிதாயினி சக்தி ஜோதி

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் நூல்கள் விமர்சனம், மதிப்புரை, அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப மற்றும் அஞ்சல் தொடர்புகளுக்கு...

**இராம வேல்முருகன்**
எண் 12 புங்கஞ்சேரி முதன்மைச்
சாலை வலங்கைமான் 612804
திருவாரூர் மாவட்டம்
தமிழ்நாடு , இந்தியா
தொடர்பு எண்
+91 9952529619 ( கட்செவி)
web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன். படைப்பின்கீழ் படைப்பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.

நூல் விமர்சனம் செய்திட நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல. படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். ஆக்கங்களை செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.



# நெஞ்சோடு நெஞ்சம்

அன்பார்ந்த தமிழ் நெஞ்சங்களுக்கு வணக்கம்!

மகளிர் தினத்தை சிறப்பாகக் கொண்டாடவும், புனித ரமழான் நோன்பை வரவேற்கவும் காத்திருக்கும் ஒரு சிறப்பான மாதத்தில், உங்களோடு மீண்டும் இணைந்திருக்கிறேன். கொண்டாடப் படவேண்டியது மகளிருக்கான நாளை அல்ல.மாண்பு மிக்க மங்கையரைத் தான் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. என்னதான் பெண் விடுதலை, பெண்ணுரிமை,பெண் சுதந்திரம், சமத்துவம் எனப் பெண்ணியம் பேசித் திரிந்தாலும், இன்று வரை பெண்களுக்கு அவை முழுமையாகக் கிடைத்து அதை அனுபவிக்கிறார்களா எனக் கேட்டால் பதில் பூச்சியத்தில் நிற்கிறது. ஒரு சாராருக்கு அவை கிடைத்திருந்தாலுமே, இவைக்குள் சிக்கி இரண்டும் கெட்டான் நிலையில் தவிக்கும் பெண்கள் இவ்வுலகில் நிறையவே உண்டு. தெருவில், அவளது பணியிடத்தில், ஏன் வீட்டில் கூட, பெண்ணுக்கோ பெண் குழந்தைகளுக்கோ பாதுகாப்பில்லை என்பதை உணர்வுபூர்வமாக சிந்திக்கையில், மகளிர் தினக் கொண்டாட்டங்களை விட அவர்களின் பாதுகாப்பே முதன்மையானதென எண்ணத் தோன்றுகிறது. கடுமையான சட்டங்களும், சமூகத்தில் உள்ள நல்லவர்களும் ஒன்று சேர்ந்தால், இதற்கொரு நல்வழி பிறக்கும்.

அத்தோடு, வரப்போகும் நோன்பை கண்ணியப் படுத்தி வரவேற்க காத்திருக்கும் வாசக நெஞ்சங்களுக்கு ஒரு வார்த்தை சொல்லக் கடமைப் பட்டுள்ளேன். நோன்பு எனும் உபவாசத்திற்கான அர்த்தம் வெறுமனே பட்டினி கிடப்பதல்ல. மனதில் நற்சிந்தனைகளுடன், நன்னோக்குடன் இறைவழியில் நேரத்தையும், பணத்தையும் செலவிடுதல் நோன்பிற்கான நற்கூலியைப் பெற்றுக் கொடுக்கும். முடிந்த வரை தானதர்மங்களில் ஈடுபட்டு, நம்மால் என்ன இயலுமோ அதைக் கொடுத்து, ஆத்மார்த்தமாக ஐம்பெரும் கடமைகளில் ஒன்றான நோன்பைப் பேணுவோமாக!

அடுத்த ஏப்ரல் மாதத்துக்கான தமிழ்நெஞ்சம் இதழ், நோன்புப் பெருநாள் சிறப்பிதழாக மலரவிருப்பதால், அதற்கேற்ற ஆக்கங்களை அனுப்பிப், பயன்பெறுவீர்களாக!

அனைத்து மகளிருக்கும் நல்வாழ்த்துகள்!

என்றென்றும் அன்புடன்

தமிழ்நெஞ்சம் அமின்

(ஆசிரியர்)

பட விநயம் : கூகுள்



Dr.ஃபஜிலா ஆசாத்
சர்வதேச வாழ்வியல் ஆலோசகர்

# சந்தர்ப்பங்கள்

ஏன் அதிகம் படித்தோம். ஏன் இத்தனை திறமைகளை வளர்த்து கொண்டோம் என்றிருக்கிறது... திறமைக்கும் படிப்புக்கும் ஏற்ற வேலையும் கிடைக்காமல், கிடைக்கும் வேலையை காம்ப்ராமிஸ்டாக இறங்கி பார்க்கவும் முடியாமல் வேலையில்லா பட்டதாரி என்ற புதிய பட்டத்தோடு எங்கிருந்து மகிழ்ச்சியாக இருப்பது இப்படி புலம்புவார்கள் சிலர்.

கண்ணாடி முன்னால் நின்று தன்னையே பார்த்து படபடக்கும் அழகிய பறவையால் சிறகுகள் விரித்து எல்லையில்லா வானத்திலே பறக்க முடியுமா?!

உங்களுடைய படிப்பும் திறமையும் எந்த சூழ்நிலைக்கும் உங்களை தயார் செய்ய வேண்டுமே தவிர, ‘இதுதான்’, ‘இதற்குள் தான்’ என்று கட்டம் போட்டு வரையறை விதித்து, உங்களை ஒரு இடத்தில் நிறுத்தி விடக் கூடாது. ஒவ்வொரு நிகழ்வும் ஒரு அனுபவம். ஒவ்வொரு வேலையும் ஒரு பாடம். நீங்கள் நினைத்த வேலை, நீங்கள் நினைத்த மாதிரி, நீங்கள் நினைத்த இடத்தில் கிடைக்காமல்

இருக்கலாம். ஆனால் கிடைத்த வேலையை நீங்கள் உணர்வு பூர்வமாக செய்யும் போது நீங்கள் நினைத்ததை சாதிக்கக் கூடிய களம் அங்கு அமையக் கூடும்.

எல்லா நேரமும் சந்தர்ப்பங்கள் அழகிய பூங்கொத்தாக நம் முன் நிற்காது. அப்படி எதிர் பார்த்திருக்கும் போது ஒரு பூந்தோட்டமே உங்கள் முன் இருந்தாலும் உங்களால் இனங்காண முடியாமல் நல்ல சந்தர்ப்பங்கள் பிடிபடாமல் உங்கள் கண் முன்னாலே உங்கள் கை நழுவி சென்று விடக் கூடும்.

இந்த படிப்பு தான் வேண்டும், இந்த வேலை தான் வேண்டும் என தன் இலக்கில் உறுதியாக இருத்தல் தவறில்லை தான். ஆனால் எந்த வேலையும் ஒரு தொடக்கம் தானே தவிர அதுவே முடிவல்ல. நெருகலான ஒரு குறுக்கு சந்தும் பிரதான சாலைக்கான சுலபமான வழியாக இருக்கலாம். வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் என்பார்கள். சின்ன வேலையும் பெரிய சாதனைக்கான குறுக்கு சந்தாக பல நேரம் அமையும்.

இந்த வேலை தான் வேண்டும் என வந்த வேலைகளையெல்லாம விட்டு விட்டு வெறுமனே காத்திட்டிருக்கிற நிமிடங்கள் உங்களை பின்னோக்கி மட்டுமல்ல இந்த உலகமே உங்களை விட்டு விட்டு முன்னோக்கி ஓடிக் கொண்டிருப்பதான ஒரு தாழ்வு உணர்வை, மன அழுத்தத்தை அது உங்களுக்கு ஏற்படுத்தி விடும். அதே நேரம் உங்கள் இலக்கில் பார்வையை வைத்துக் கொண்டு கிடைக்கின்ற வேலையை, நீங்கள் தவிர்க்காமல் இருந்தால் அது உங்களுக்கு ஒரு ‘வார்மிங்-அப்’ பாக, நீங்கள் விரும்பும் வேலைக்கான பயிற்சிக் களமாக, பல அனுபவங்களையும் பக்குவத்தையும் தரக் கூடியதாக அமையும்.

விளையாட்டு வீர்ர்களை பார்த்திருக்கிறீர்களா?.. செஸ் விளையாடுபவர்கள் வாரத்தில் இரண்டு மூன்று நாட்கள் நீச்சல் பயிற்சியில் ஈடுபடுவார்கள். கிரிக்கெட் வீர்ர்கள் கராத்தே, ஓட்டம் என தங்கள் துறைக்கு சம்பந்தம் இல்லாத மற்ற பயிற்சிகளை செய்து கொண்டிருப்பார்கள். ஒவ்வொரு துறையில் உள்ளவர்களும் அவர்கள் துறை சார்ந்த பயிற்சிகளைத் தாண்டி மற்ற பயிற்சிகளையும் செய்து கொண்டே இருப்பார்கள். அது அவர்களுக்கு மாற்று சிந்தனைகளையும், அவர்கள் களத்தில் நின்று ஆடக் கூடிய மனபலத்தையும், உடல் திடத்தையும் கொடுக்கும்.

உடலையும் மனதையும் ஆக்டிவாக வைத்திருக்கக் கூடிய எந்த முயற்சியும் வீண் போகாது. தான் சாதிக்க வேண்டும், வெற்றி பெற வேண்டும் என துடிப்போடு இயங்குபவனுக்கு எந்த சந்தர்ப்பத்திலும் தனக்கான களம் புலப்படும்.

நீங்கள் உண்மையில் ஏதாவது செய்ய நினைத்தால், அதற்கான வழியைக் கண்டு பிடிப்பீர்கள். இல்லையென்றால் எதுவும் செய்யாமல் இருப்பதற்கான காரணங்களைக் கண்டு பிடிப்பீர்கள் என்று அழகாக சொல்கிறார் ‘ஜிம் ரான்’.

அந்த இளைஞனுக்கு சிறுவயதிலிருந்தே திரைப்படத்தில் நடிக்க வேண்டும் என்பதே கனவாக இருந்தது. கண்களில் கனவுகளையும் உள்ளத்தில் உறுதியையும் சுமந்து கொண்டு ஹாலிவுட்டிற்கு வருகிறான். கனவு கண்டு கொண்டிருந்த கனவுத் தொழிற்சாலையை அடைந்ததும் அவன் தனக்கான கதவுகள் திறந்து விட்டது என்ற மகிழ்சியுடன் அங்கிருக்கும் தயாரிப்பு நிறுவனம் ஒன்றிற்கு சென்று தனது விருப்பத்தை தெரிவிக்கிறான்.

அவனை மேலும் கீழும் பார்த்த அந்நிறுவனத்தின் அதிகாரி நடிப்பு தவிர உனக்கு வேறு என்ன தெரியும் என்று கேட்கிறார். அதற்கு அவன் தனக்கு மரவேலை தெரியும் என்று சொல்ல அவன் கையில் ஒரு சுத்தியலைக் கொடுத்து அங்கு நிர்மாணிக்கப் பட்டு வந்த ஒரு திரைப்பட செட்டில் போய் வேலை செய்யச் சொல்கிறார்.

இந்த இடத்தில் வேறு யாரேனும் இருந்தால் என்ன செய்திருப்பார்கள்., நான் நடித்து பெரிய ஸ்டார் ஆகுவதற்கு இவ்வளவு தூரம் வந்திருக்கிறேன். இந்த ஆள் என்னை கார்ப்பென்டர் வேலை பார்க்கச் சொல்கிறாரே என்று கோபப்பட்டுக்கொண்டோ அல்லது அவமானப்பட்டுக்கொண்டோ, போய்யா.. நீயும் உன் வேலையும் என்று மனதிற்குள் குமைந்து கொண்டு வெளியேறி இருப்பார்கள்.

ஆனால் அவனுக்கு அது அவமானமாக தெரியவில்லை. ஹாலிவுட் என்னும் கோட்டைக்குள் நுழையக் கிடைத்த மாபெரும் சந்தர்ப்பமாக தெரிகிறது. தான் திட்டமிட்டபடி நடக்கவில்லையே, தன் கணக்கு தப்பி விட்டதே, ஏன் இவர்கள் இப்படி இருக்கிறார்கள், தனக்கு நேரம் சரியில்லையோ என்று அந்த இளைஞன் தன்னையும் தன் விதியையும், நொந்து கொண்டு புலம்பிக் கொண்டிருக்காமல், என்றாவது ஒரு நாள் தான் நடிகனாவதற்கான சந்தர்ப்பம் கனிந்து வருவதற்காக வெறுமனே காத்தி ருக்காமல், கிடைத்த வேலையை, தன் பொருளாதார தேவையை நிறைவேற்றக் கூடியதாகவும் தன் மனைவியையும் இரண்டு குழந்தைகளையும் ஸப்போர்ட் பண்ணக் கூடியதாகவும், அதே நேரத்தில் தன் கனவிற்கான களமாகவும் உடன் மகிழ்சியோடு ஏற்றுக் கொள்கிறான்.

சில காலம் கழித்து அவன் வேலை செய்யும் நிறுவனம் தயாரிக்க இருக்கும் புதிய படத்திற்கு ஒரு புதுமுகம் தேவை என்று தயாரிப்பாளர் கேட்கும்போது அந்த அதிகாரி இவனை பரிந்துரை செய்கிறார்.

அதற்கு அவர் கூறிய காரணம்தான் மிக முக்கியமானது. ‘இவன் நடிக்க வேண்டுமென்று கேட்டு இங்கு வந்தான். ஆனால் நான் அவனை தச்சு வேலை செய்யச் சொன்னேன். சற்றும் தயங்காமல் உடனே வேலையை ஏற்றுக் கொண்டான். ஆனால், அதைவிட முக்கியமானது என்ன வென்றால், அந்த வேலையை, ஏதோ இந்த வேலைக்குத்தான் ஆசைப்பட்டு சேர்ந்ததுபோல, எந்த முணுமுணுப்பும் இல்லாமல் முழு ஈடுபாட்டுடன் செய்து வருகிறான். இவனுக்கு சந்தர்ப்பம் கொடுத் தால் இவன் சிகரங்கள் தொடுவான்’.

இது ஏதோ கதைக்காக சொல்லப்பட்ட கற்பனையல்ல. அந்த இளைஞன்தான் பின்னாட்களில் ‘என்னைவிட அமெரிக்க ஜனாதிபதியாக இவர்தான் பொருத்தமாக இருக்கிறார்’ என்று ஏர்ஃபோர்ஸ் ஒன் படத்தை பார்த்து விட்டு அன்றைய அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டனால் பாராட்டப் பட்ட ஹாலிவுட் நடிகர் ‘ஹாரிஸன் ஃபோர்ட்’

வெற்றி என்பது நீங்கள் அதை நெருங்க முயற்சி செய்யும்போது நீங்கள் அடையக் கூடியதூரத்தில்தான்இருக்கிறது. என்கிறார் ஸ்டீஃபன் ரிச்சர்ட். வெற்றி உங்களைத் தேடி வரும் எனக் காத்திருப்பதை விட்டு விட்டு, நம்பிக்கையோடு வெற்றியைத் தேடி எட்டி நடை போடுங்கள். வெற்றி உங்களை மகிழ்ச்சியாக அரவணைத்துக் கொள்ளும் அது ஒரு போதும் உங்களை வெறுங்கையாக அனுப்பாது. அதை புரிந்து கொள்ளும் மனதில் மகிழ்ச்சி நிறையும்.



# அழகு என்பது?...

அழகு என்பது இந்த உலகத்தைப் பொறுத்த வரை, வெள்ளை அல்லது சிவந்த நிற மேனியுடன் “சிக்”கென்ற உடல் வாகுடன்நிமிர்ந்தபார்வையுடன்உலவுவதே என்பது தான் இங்கு ஒரு வெளிப்படையான அபிப்பிராயமாக உள்ளது.

உண்மையான அழகு என்ன?

அழகு எங்கிருந்து வெளிப்படுகிறது அழகு... அழகு.. என்று அடித்துக் கொள்கி றோமே.. அழகின் அடிப்படை என்ன? அழகை எங்கெங்கு காண முடியும் என நாம் சிந்தித்திருப்போமா?

நமக்கு பணம் தேடவே நேரம் போதாத வேளையிலே உண்மையான அழகின் தேடல்களுக்கு எங்கே சமயம் கிடைக்கப் போகிறது?

உடலை நல்ல முறையில் சிக்கென்று வைத்துக் கொள்ளவும், புற அழகில் நாட்டம் செலுத்தவும் மட்டுமே நாம் ஒரு நாளைக்கு எவ்வளவு பணம், பொருள் நேரம் செலவிடுகிறோம் தெரியுமா?

அதிகாலையில் ஒவ்வொரு முக்கிய மான நகரங்களை எடுத்துக் கொண்டால் வெண்ணுடைத் தரித்து (டீசர்ட், வெள்ளை கால்சட்டை, வெள்ளை சாக்ஸ், வெள்ளைகேன்வாஸ்) உடலை நல்ல முறையில் ஒரு வடிவமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக கடற்கரையில் மற்றும் பெரிய சாலைகளில் ஓடுவதற்கும் உடற்பயிற்சி செய்வதற்கும் எத்தனை லட்சம் பேர் முயற்சி செய்வதை கண் கூடாக நம்மால் பார்க்க முடியும்.

முக அழகை மேம்படுத்த எத்தனை ஆயிரம் கம்பெனிகள் காஸ்மெட்டிக்ஸ் க்ரீம், ஆயில் என தயாரித்து தமது விற்பனையை முடுக்கி விடுவதற்கு வித்தியாசமான விளம்பரங்களை டெலி விசன், தினசரி பேப்பர்கள் மூலம் மக்களை எட்டச் செய்கிறது.

ஒரு நாளைக்கு கோடிக்கணக்கான பணம் செலவழித்து இந்த முக அழகு க்ரீம், ஆயில் உடலுக்கு தேவையான சோப், காலுக்குத் தேவையான விதவிதமான ஆயூர்வேதிக் க்ரீம் என வாங்கும் நாம் நம்மை அழகு படுத்துவதில் நம் புற அழகை வெளிப்படுத்திக் கொள்வதில் எத்தனை மும்முரமாகிப் போகிறோம்.

தினமும் உடற்பயிற்சி செய்து உடலை பெருக விடாமலும், வடிவமாக வைத்துக் கொள்ளவும் எத்தனையோ வித விதமான உடற்பயிற்சி கருவிகளை வாங்கி உபயோகிக்கிறோம். இதனால் உடற்பயிற்சிக்கென கருவிகள் உருவாகி எத்தனையோ கோடிக் கணக்கில் விற்பனை யாகிறது.

இன்றைய உலகில் அழகு என்ற சொல் கூட ஆரோக்கியத்தைத் தாண்டி தான் யோசிப்பதாக இருக்கிறதே தவிர உடல் ஆரோக்கியம் கூட இரண்டாம் பட்சமாக போய் விடுகிறது.

எங்கு நோக்கினும் அழகிப் போட்டி கள், ஆண்அழகன் போட்டிகள், எத்த னையோ கோடிப் பணத்தை எப்படி யெல்லாமோ சீரழிக்கின்ற நமக்கு, நம்மில் எப்போது உண்மையான அழகை உருவாக்கப் போகிறோம் என்று யோசிக்க நேரங்களை எடுத்துக்கொண்டதுண்டா?

அழகு "அழகு" என நவநாகரீக கலாச்சாரத்தின் உச்சியில் எதை எதை எல்லாமோ தேடிக் கொண்டிருக்கின்ற நாம் நம்மில் எத்தனை பேர் மன சாந்திக்காக அதன் அடிப்படையில் உருவாகும் உண்மையான அழகிற்காக ஏங்கியிருக்கிறோம்? அவசர உலகத்தில் தீப்பிடித்து விட்டதோ என சொல்ல வைக்கும் வேகத்தில் பறந்து கொண்டி ருக்கும் நமக்கு இரண்டு சிறகுகள் இருந்திருந்தால் இதைவிட நன்றாக இருந்திருக்கும் என சிந்திக்கத் தான் முடிகிறதே ஒழிய... இந்த அழகு உபாதையில் அவசர அவசரமாக அழிந்து போக முயற்சி செய்கிறோமே ஒழிய உண்மையான அழகை எப்படி கொண்டு வரப் போகிறோம் என்று சிந்திக்கிறோமா?

## ஓ... என் இனிய கவிதைகளே...

கவிதை நதியில் கால் நனைப்பதும்
கவிதைப் பூவில் தேன் குடிப்பதும்
கவிதை வானில் சிறகடிப்பதும்
எனக்கே எனக்கேயான இன்பங்கள்

அதனால் தானோ..
கவிதைகளைப் பற்றிப் பேசி
விடைபெறுமொரு பொழுதும்
கவிதையாகவே
இனித்து விடுகின்றது எனக்கு

கவிதைகளைக் கலந்தாய்வு
செய்வோரை நான்
இலக்கியத் தூதுவர்களாய் காண்கிறேன்..
இலக்கியக் காவலர்களும் அவர்களே..

சின்னச் சொல்லெடுத்து
மெல்லக் கோர்த்தெடுத்து
கவியாரம் செய்து நான் மகிழும் போது

கவிதை கிலோ
என்ன விலை என்பது போல
விழிநோக்குவோரும் உண்டு
ரமணிசந்திரனின் நாவலில் வரும்
கல்லுளிமங்கனை நான்
அவர்களில் கண்டு கொள்வேன்..

கவிதை எழுதுவதும்
கவிதையை இரசிப்பதும் வரம்....
அந்த வரம்
எல்லோர்க்கும் கிடைப்பதில்லை
கிடைக்காதோரிடம் உனக்கெதற்கு வம்பு
நீ உன் கவிதையை நம்பு
எனச் சொல்லி என் கவிதைகள்
என்னை ஆசுவாசப்படுத்துகின்றன..
நான் மீண்டுமொரு
கவிதையோடு கலந்து விடுகிறேன்..
ஓ... என் இனிய கவிதைகளே....

மக்கொனையூராள்



# சோழவந்தான் கவிச்சிங்கம்
# சொக்கவைக்கும் தமிழ்த்தங்கம்

மதுரை என்றாலே நமக்கு நினைவுக்கு வருவது தமிழ். தமிழின்றி மதுரையில்லை; மதுரையின்றித் தமிழின் வரலாற்றை எழுதிவிட முடியாது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சங்கம் வைத்து நம்மொழியை வளர்த்தவர்கள் மதுரை மக்கள். இன்றும் பல்வேறு பெயர்களில் சங்கம் வைத்து , அறக்கட்டளை வைத்து, மன்றங்கள் வைத்து, புலனக்குழு முகநூல்குழுக்கள் வைத்து மொழியை வளர்த்துவரும் மதுரையில் அதன்பெயரிலேயே தமிழ்மதுரை அறக்கட்டளை எனும் பெயரில் ஒரு அறக்கட்டளை வைத்து , மொழிவளர்க்கும் சான்றோர்களுக்கு விருது வழங்கி , பள்ளி கல்லூரிகளுக்குச் சென்று தமிழ்ப்பற்றை அதிகப்படுத்தும் பணிகளச் செய்துவரும் ஒருவரே இம்மாதச் சிறப்பு விருந்தினர் ஆவார். ஆம் சித்தார்த் பாண்டியன் எனும் புனைப்பெயருடன் வலம்வரும் தூயதமிழ்ப் பற்றாளர் தமிழ்மதுரை அறக்கட்டளை நிறுவுநர் சோழவந்தான் கவிச்சிங்கம் தங்கபாண்டியன் அவர்களுடன் தமிழ்ச்செம்மல் இராம வேல்முருகன் செய்த நேர்காணல் இதோ...

தமிழ்நாட்டரசின் தூய தமிழ்ப் பற்றாளர் - 2022 விருது தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் வழங்கும்தருணம்

***தங்கள் இயற்பெயர் என்ன? ஏன் சித்தார்த் பாண்டியன் என்று எழுதுகிறீர்கள்?***

என் இயற்பெயர் பாண்டியன்தான். ஆனால் தங்கப்பாண்டியன். சித்தார்த் பாண்டியன் என்பது என் புனைப்பெயர். இலக்கிய உலகுக்குள் காலடி எடுத்து வைத்த தருணத்தில் தங்கப்பாண்டியன் என்னும் பெயரில் எழுதுவதை விட வேறு பெயர்களில் எழுதினால் சிறப்பாக இருக்கும் என்று நண்பர்கள் சிலர் ஆலோசனை கூறினார்கள். ஆனாலும் நான் இயற்பெயரை உதறி விட விருப்பமில்லாது இருந்தேன். ஆகவே பாண்டியன் என்னும் அடையாளத்தை அப்படியே வைத்துக் கொண்டு தங்கத்தை மட்டும் கொஞ்சம் மாற்றம் செய்யலாம் என்று எண்ணினேன். சரி தங்கத்திற்கு மாற்றாக அவ்விடத்தில் எதை வைக்கலாம் என்று சிந்தித்தேன். அப்போது எனக்கு மிகவும் பிடித்த புரட்சியாளராகிய புத்தபெருமான் அகக் கண்களில் தோன்றினார். யானும் தங்கம் இருக்கும் இடத்தில் தங்கத்தை விட விலைமதிப்பற்ற புத்தரை வைப்பதே ஏற்றமுடையதாக இருக்கும் என்று முடிவு செய்து அவரின் பெயரை வைத்தேன். அதிலும் அவரது இளமைக்கால பெயராகிய சித்தார்த்தன் என்பதே என்னை ஈர்த்தது. ஆகவே சித்தார்த் பாண்டியன் என்று புனைந்து கொண்டேன்.

**தங்கள் சொந்த ஊர் எது? எங்கே உள்ளது?**

எனது சொந்த ஊர் சங்கம் கண்டு தமிழ் வளர்த்த மதுரை தான். மதுரையின் புறநகர்ப் பகுதியான சோழவந்தான் அருகே திருமால்நத்தம் என்ற கிராமத்தில் தற்போது வசித்து வருகிறேன். இயற்கை எழில் சூழ்ந்த மருதநிலப் பகுதியை உள்ளடக்கிய பகுதி இது என்பதும் மகாத்மா காந்தியடிகள் மதுரை வந்த போது எங்கள் ஊர் வழியே நடந்து சென்று இப்போதைய காந்திகிராமத்தை அடைந்தபோது தான் தனது பழைய ஆடைமுறையை விடுத்து இப்போதைய எளிய கதராடை உடுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

**தங்கள் தந்தையார் பெயரால் விருது வழங்குவதன் நோக்கம் என்ன?**

என்னை இவ்வுலகுக்கு ஈந்த இறைவன் என்பதையும் தாண்டி என் தமிழ் வளர்ச்சிக்கும் மலர்ச்சிக்கும் முதற் காரணமாகவும் முக்கியக் காரணமாகவும் இருந்தது என் தந்தையின் ஊக்கம்தான். அவர் அதிகம் படிக்காதவர். உழவுப் பணி செய்து வந்தவர். உழவையும் வயலையும் அவர் நேசித்த அளவு வேறு எவரும் நேசித்து நான் பார்த்ததில்லை. சிறு வயதில் நான் எழுதும் ஒரு சில கவிதைகள், கதைகளை அவருக்குப் படித்துக் காண்பிப்பேன். அதை மிகவும் ஈடுபாட்டுடன் கேட்பது மட்டுமின்றி அவருக்கு ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் மீண்டும் மீண்டும் வாசிக்கச் சொல்லிக் கேட்பார். முதன்முதலாக நான் ஆறாம் வகுப்பு பயிலும் போது மாநில அளவில் நடைபெற்ற கவிதைப் போட்டியில் முதலிடம் பெற்ற போது அவர் பெற்ற மகிழ்ச்சிக்கு அளவில்லை. அதைப் பலரிடம் கூறி பெருமை கொண்டார். பின் கல்லூரி காலம் வரை எனது படைப்புத் திறனை வளர்ப்பதில் பெரிதும் முனைப்புக் காட்டினார். நான் ஆறாம் வகுப்புகளில் படிக்கும் போதே தினமலர் வெளியிட்ட சிறுவர் மலர், மற்றும் பூந்தளிர் போன்ற இதழ்களை வீட்டிலேயே வந்து தருவதற்கு பணம் கட்டி ஏற்பாடு செய்தார். இப்படியெல்லாம் செய்த அவருக்கு யான் இப்போது தமிழகம் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் அறியப்பட்ட ஒரு கவிஞராக இருப்பதைப் பார்த்து மகிழ்ச்சி கொள்ளும் பேறு வாய்க்கவில்லை. ஏனெனில் கடந்த 2016ல் என் முதல் நூல் வெளியாவதற்கு முன்பே அவருக்கு மறதி குறைபாடு வந்து விட்டது. கடந்த 2021 ல் அவர் காலமான போது ஏறத்தாழ என்னைத் தவிர மற்றவர்களை முழுவதுமாகமறந்துவிட்டார்.இப்படியாக பல இடர்ப்பாடுகளுக்கிடையில் என்னை வளர்த்து ஆளாக்கி என் தமிழையும் வளர்த்து உருவாக்கியவருக்குச் செய்யும் ஒரு காணிக்கையாக அவர் பெயரில் சிறந்த ஆளுமைக்குக்கு விருது வழங்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. இது தந்தையின் மீது மரியாதை கொள்ள வேண்டிய எடுத்துக்காட்டாகவும் வருங் காலச் சந்ததிகளுக்கு அமையும் என்பதால்

வலங்கைமானில் நடைபெற்ற வள்ளலார். 200 கவியரங்கில் கவிச்சிகரம் அமுதன், தமிழ்ச்செம்மல் இராம வேல்முருகன், கவி வித்தகர் பொற்கைப் பாண்டியன் ஆகியோருடன்



இதை முன்னெடுத்து வருகிறேன். ஒரு கூடுதல் செய்தி என்னவென்றால் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் நடித்த பட்டிக்காடா பட்டணமா என்ற திரைப்படத்தில் எனது தந்தை ஒரு காட்சியில் தோன்றியுள்ளார். இது அவருக்கு கலைத்துறையின் மீது மிகுந்த ஆர்வம் இருந்தது என்ப தற்கு ஒரு சான்றாகும். மேலும் ஒவ்வொருவரும் தம் பெற்றோருக்கு இது போல் மரியாதை செய்ய வேண்டும் என்பதையும் இவ்விடத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**தமிழ் மதுரை அறக்கட்டளையின் முதன்மை நோக்கங்கள் யாவை?**

தமிழ் மதுரை அறக்கட்டளை தமிழ் மொழியின் வளர்ச்சியையும் அதன் மூலம் தமிழர்களின் பண்பாட்டு கலை மற்றும் கலாச்சார அடையாளங்களைப் பாதுகாப்பது மற்றும் மீட்டுருவாக்கம் செய்வது, தமிழ்க் கல்வி மற்றும் தமிழ் வழியே பிற மொழி இலக்கியங்களை கற்பிப்பது மற்றும் கற்றுக்கொள்ளச் செய்வது, தமிழை உலகளாவிய அளவில் தமிழரல்லாத அனைத்து மொழி பேசு வோரும் கற்கச் செய்வது, நாட்டுப் புறக் கலைகளுக்கு புத்துயிர் கொடுப்பது, படைப்பாளர்களை, இலக்கியச் செயல் பாட்டாளர்களை கண்டறிந்து அவர்தம் பணியைச் சிறப்பித்து விருதுகள் வழங்கு வது போன்ற அடிப்படை நோக்கங் களை கொண்டது. இதற்காக தமிழ் மதுரை அறக்கட்டளை தனக்கென ஒரு ‘சங்கப்பலகை‘யைத் தோற்றுவித்துள்ளது. இதன் மூலமாக மேற்கண்ட நோக்கங்களை சீராக நிறை வேற்றி வருகிறது.



வாழும் அவ்வை என அன்போடு அழைக்கப்படும் பாவலர் அன்புவள்ளி தங்கவேலன் அம்மையார் அவர்களுடன்

**இதுவரை தங்கள் பதிப்பகம் வெளி யிட்ட நூல்கள் எத்தனை?**

தமிழ் மதுரை அறக்கட்டளை தனது சங்கப்பலகையின் மூலமாக கண்டறியும் சிறந்த படைப்புகளையும், பொருளாதார அடிப்படையில் பின் தங்கியுள்ள படைப்பாளர்களின் படைப்புகளையும், மாணவர்களின் படைப்புகளையும் வெளிக்கொணரும் நோக்கில் 2021ம் ஆண்டு முதல் தமிழ் மதுரை பதிப்பகத்தை தோற்றுவித்து செயல்படுத்தி வருகிறது. 2021 முதல் 2023 வரை ஏறத்தாழ 30 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளது. தற் போது 5 நூல்கள் வெளியிடுவதற்கான அச்சுப்பணிகள் நடந்து வருகிறது. வருடந்தோறும் குறைந்தது ஒரு மாண வரையாவது படைப்பாளியாக அறிமுகப் படுத்த வேண்டும் என்ற குறிக்கோளுடன் இயங்கி வரும் நிலையில் இதுவரை 6 மாணவப் படைப்பாளர்களின் நூல்களை வெளியிட்டுள்ளது. தமிழ் மதுரைப் பதிப்பகத்தின் செவ்விய செயல்பாட்டினைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு முற்போக்கு கலை இலக்கிய மேடை 2023 க்கான கருப்பு கருணா சிறந்த செயல்பாட்டாளர் விருது என்னும் விருதை நமது பதிப்பகத்திற்கு வழங்கிச் சிறப்பித்துள்ளது. அத்துடன் அதே அமைப்பு ஆண்டு தோறும் வழங்கும் அசோகமித்ரன் படைப்பூக்க விருது மற்றும்



தேனியில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சியில் கண்காட்சியைத் தொடங்கி வைத்த கவிச்சிங்கம் அவர்களின் கரங்களால் நூலை வாங்கிக் கொண்ட வாசகர்களில் ஒருவர்

தஞ்சை பிரகாஷ் வளரும் படைப்பாளர் விருது ஒவ்வான்றிலும் தலா இருவருக்கு தமிழ் மதுரை பதிப்பகம் வெளியிட்ட நூல்களுக்காக அந்தந்த நூலாசிரியர்களுக்கு வழங்கியுள்ளது கூடுதல் பெருமையாகும்.

### அதிரல்குறித்து ஒருசில வார்த்தைகள்.

சங்கப் பலகையின் மூலம் கவியரங்கம், பட்டிமன்றம், உரையரங்கம் போன்ற நிகழ்வுகள் அரங்கங்களிலும், மெய்நிகர் நிகழ்வாக இணைய வழியிலும் ஏராளமாக நடத்தப்பட்டு வருகின்றன. ஆயினும் அதை மக்கள் அனைவருக்கும் கொண்டு சென்று சேர்ப்பதற்கு ஒரு ஊடகம் இருப்பின் சிறப்பாக இருக்கும் என்று எண்ணினோம். இதனால் பல புதிய படைப்பாளர்களுக்கு எழுத வேண்டும் என்ற எண்ணம் உண்டாகி புதிய படைப்புகள் தோன்றுவதற்கு வழிவகை உண்டாகும். இக்காரணத்திற்காக 'அதிரல்' என்ற திங்கள் இதழை தொடங்கினோம். இது கடந்த 2023 ஏப்ரலில் துவங்கப் பட்டது. இலக்கிய விரும்பிகள், வாசகர்கள் மத்தியில் அதிரல் நல்ல வரவேற்பை பெற்று வருவது மகிழ்ச்சியைத் தருகிறது. நூல் மற்றும் உள்ளடக்கம் இரண்டிலும் தரம் குறையாமல் அதே நேரத்தில் விலை குறைவாக வழங்குவதே இதன் நோக்கமாக வைத்துள்ளோம். இதனால் இதழை வெளிக்கொணர்வதில் சில இடர்ப்பாடுகளைச் சந்தித்து வருகிறோம் என்றாலும் விட்டு விடாமல் வெற்றியைத் தொடுவோம் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

### ஏன்கல்லூரி மாணவர்பக்கம் செல்கிறீர் கள்?

கல்லூரி மாணவர்கள் என்பவர்கள்



முத்தமிழறிஞருக்கு மலர் அஞ்சலி

வெறும் கல்வி கற்கும் பருவத்தில் மட்டும் உள்ளவர்கள் அல்ல. அவர்கள் விரைவில் இந்நாட்டின் பல நிலைகளிலும் பொறுப்பை ஏற்கப் போகிறவர்கள். அது குடும்பத் தலைவர், தலைவிகளாக, பல் துறை வல்லுனர்களாக, நாட்டின் தலைமைகளாக என இந்நாட்டை வழிநடத்தப் போகும் சிறப்புக்குரிய வர்கள். தலைமைப் பொறுப்புகளில் அமரப்போகிறவர்கள். அவர்களுக்கு இன்றைய காலகட்டத்தில் தாய் மொழிப் பற்றும், தமிழ் மொழி வன்மையும் ஊட்டப்படுகிறதா என்றால் அது தேவையான அளவிற்கு இல்லை என்பதே கள ஆய்வின் வழி உண்மையை உணர்ந்தவர்களின் பதிலாக இருக்கும். இப்போதுள்ள பல மாணவர்களுக்கு தமிழை சரியான உச்சரிப்புடன் வாசிக்கக் கூடத் தெரியவில்லை. ஒற்றுப் பிழையின்றி எழுதத் தெரியவில்லை. தமிழர்களின் திணை வழி மரபு, வாழ்வியல், பண்பாடு குறித்து சரியான புரிதல் இல்லை.

தமிழ் மதுரை அறக்கட்டளையின் 'சங்கப்பலகையும் ' தஞ்சைத் தமிழ் மன்றமும் இணைந்து 2021 ல் மதுரையில் நடத்திய மாபெரும் கவியரங்கம்



இவையெல்லாம் களையப்பட்டாலன்றி இந்நாட்டின் மேன்மையும் வளர்ச்சியும் பற்றிய கனவுகள் ஒரு போதும் வெற்றி பெறப் போவதில்லை. ஆகவே வருங்காலச் சமுதாயத்தின் ஒற்றுமையைப் பேணுவதன் பெருஞ்செயலை நாம் செய்ய வேண்டி உள்ளது. அதற்கு கல்லூரி மாணவர்களிடம் சென்றே ஆக வேண்டும். அவர்களின் மனதில் தமிழ் என்ற உணர்வு நின்றே ஆகவேண்டும். அதை அவர்களுக்குப் புரியச் செய்யும் பெரும்பணியில் வென்றே ஆக வேண்டும்.

**இக்கால மாணவர்களிடம் தமிழ்மீது ஆர்வம்உள்ளதா?**

நிச்சயமாக உள்ளது. ஆனால் அதை தம் உயிராகக் காக்க வேண்டிய முக்கியத்துவத்தை அவர்களுக்குப் புரிய வைக்கத் தான் ஆட்கள் இல்லை. ஆர்வம் இருப்பதை விட அவசியத்தை உணர்த்த வேண்டும். இதுவே இன்றைய தேவை. தமிழ் வெறும் மொழி மட்டுமல்ல, நமது அடையாளம் என்பதையும் நம் அனைவரின் தொப்புள் கொடி இணைப்பு என்பதையும் உணர்த்த வேண்டும். அவர்களுக்கு இருக்கும் ஆர்வத்தை உணர்வாக மாற்ற வேண்டியது நமது கடமையாகும்.

**கவிச்சித்தர் வீரபாண்டியத் தென்னவர் பற்றி..**



கவிச்சித்தர் என்று தாங்களே சொல்கி றீர்கள் அல்லவா அது தான் ஐயா தென்னவனார் அவர்கள். அவர்களுடன் எனக்கு பல்லாண்டு பழக்கமெல்லாம் கிடையாது. ஏறத்தாழ இரண்டு ஆண்டுகள் மட்டுமே பயணித்துள்ளேன். 2018 ல் எனது வெளிச்சத்தில் ஒரு கனவு என்ற நூல் வெளியிட்ட நேரத்தில் கவிஞர் இரா. இரவி அவர்கள் மூலமாக ஐயாவிடம் அறிமுகமானேன். எனது கல்லூரி காலத் திற்கு பிறகு இலக்கிய உலகில் நான் மீண்டும் நடை போடத் தொடங்கியது அது முதல் தான். அவருடைய கவிய ரங்கமே பொது வெளியில் எனது முதல் கவியரங்கம். நான் கவிதை வழங்கும் போதே எங்கே மீண்டும் சொல்லுங்கள் என்று இரண்டு மூன்று அடிகளைத் திரும்பச் சொல்லும்படி பணித்து கேட்டுச் சுவைத்து மகிழ்ந்தார். அப்போதே அங்கே இருந்த கவிஞர்கள் மத்தியில் நமது கவிஞர் பேரவைக்கு நீண்ட காலத்திற்கு பிறகு ஒரு சிறப்பான கவிஞர் கிடைத்துள்ளார் என்று கூறி என்னைத் தட்டிக் கொடுத்தார். தொடர்ந்து கவியரங்குகளுக்கு வாருங்கள் உங்கள் கவிதை இன்னும் வண்ணமுறும். மேலும் சிறப்படைவீர்கள் என்று கூறி வாழ்த்தினார். அந்தப் பெருமகனார்

2023 ல் திருச்சியில் உலகத் தமிழ் கவிஞர் பேரவை வழங்கிய கலைஞர் விருதைப் பெற்ற நிகழ்வில் .





தமிழ் மதுரை அறக்கட்டளையின் ‘சங்கப்பலகை ‘ தொடக்க விழாவில் கவிஞர் மற்றும் அறிஞர் குழாத்துடன்.

தான் எனக்கு ‘கவிச்சிங்கம்‘ என்ற அடைமொழியை வழங்கி அடையாளப் படுத்தியவர். பொதுவாக விருதுகளையும் பட்டங்களையும் போட்டுக் கொள்வதில் பெரிய விருப்பம் காட்டாத எனக்கு அவர் வழங்கிய ‘கவிச்சிங்கம்‘ என்னும் பட்டத்தைப் போட்டுக் கொள்ளும் போது மட்டும் ஒரு வித மகிழ்வும், பெருமிதமும் ஏற்படுகிறது என்பதை யான் மறைக்க விரும்பவில்லை. வரலாற்றில் சித்தார்த் பாண்டியன் என்று யான் நிலைத்திருக்கும் காலம் வரை கவிச்சிங்கம் என்பது அவரையும் நினைவு படுத்திக் கொண்டே இருக்கும். வாள்வீச்சு போன்ற குரல் வீச்சும் கவி வீச்சும் கொண்ட ஒரு ஆசுகவியுடன் பயணிக்க காலம் எமக்கும் ஒரு வாய்ப்பை வழங்கியதற்காக தமிழுக்கு கட்டாயம் நன்றி செலுத்துகிறேன். அவர் போன்ற கவிஞரை, மேதையை, மனிதரை வருங்காலம் இனி ஒரு போதும் பார்க்கப்போவதே இல்லை என்பதே அவருடைய சிறப்புக்கு சான்று கூறும் வார்த்தைகளாக இருக்கும்.

### கவிச்சிகரம் பொற்கைப்பாண்டியன் பற்றி ..

மதுரையின் கவிதைப் படையில் தென்னவனார் உடைவாள் என்றால் இவர் குறுங்கத்தி. உடைவாளை உருவி சண்டையிடும் போது அனைவருக்கும் தெரியுமாறு மின்னி ஒளி வீசிச் சத்தமிடும்.



ஈரோடு, திண்டலில் உள்ள வி. இ.டி. கல்லூரியில் தமிழ் மதுரை அறக்கட்டளை அன்பளிப்பாக வழங்கிய ஐயன் திருவள்ளுவர் சிலையைத் திறந்து வைத்து வணங்கிய தருணம்

ஆனால் குறுங்கத்தி அப்படியல்ல எங்கிருந்து பறந்து வரும், எப்படிப் பாயும், எவ்விடத்தைக் குடையும் என்று யாருக்கும் தெரியாது. கத்தி பாய்ந்த பிறகுதான் தான் குத்தப்பட்டதே எதிரிக்குத் தெரியும். அதைப் போல தென்னவனார் மரபு வழியில் மட்டுமே நின்று கவிதை புனைவதில் விருப்பம் கொண்டவர். ஆனால் எனது அப்பா பொற்கைப் பாண்டியனார் அவர்கள் எல்லா கவிதை வடிவங்களிலும் புகுந்து விளையாடுபவர். குறுங்கத்தியும் வீசுவார். கூர்வேல் கொண்டும் தாக்குவார், மரபு மாறாச் சுரிகை கொண்டும் சுழற்றுவார். இவற்றுக்கெல்லாம் மேலாக சந்தம் கொண்டு சரித்திரம் படைப்பவர். சங்கத்தமிழினை வரும் சந்ததியினர் பற்றிக் கொள்ள வேண்டும், அதன் மேல் வேட்கையை இளையோர் மனதில் பற்ற வைக்க வேண்டும் என்னும் தனியாத தாகம் கொண்டவர். எல்லாவற்றுக்கும் மேலாக என்னை தனது இலக்கிய வாரிசு என்றும் அன்பிற்குரிய மூத்த மகன் என்றும் வாய் நிறைய மட்டுமல்ல மனம் நிறைய வாழ்த்தி மகிழ்பவர். என்னைப் பொறுத்தவரை மதுரையின் கவிதை அழகிக்கு இரு கண்கள் உண்டென்றால் அதில் ஒரு கண் தென்னவனார் அவர்கள். இன்னொரு கண் என் தந்தை பொற்கையார் அவர்கள் தான்.

**முருகு பாண்டியம் எழுதிய அனுபவத்தைப்பகிர்ந்து கொள்ளமுடியுமா?**

இரண்டு புலவர்கள் ஒற்றுமையாக இருந்து பார்த்ததுண்டா என்ற கேள்வியை யாரிடமாவது முன் வைத்தீர்கள் என்றால் நிச்சயமாக இல்லை என்றே பதில் வரக்கூடும். இரண்டு புலவர்கள் இருக்கும் ஊரில் ஒரு காவல் நிலையம் கட்டாயம் இருக்க வேண்டும் என்று கூட நகைச்சுவையாக கூறுவார்கள். அந்த அளவிற்கு கவிஞர்கள் மத்தியில் புலமையிற் சிறந்தவர்கள் மத்தியில் ஒற்றுமை நிலவுவது கடினம். ஆனால் இதையெல்லாம் பொய்யாக்கும்படி இக்காலத்திலும் இரண்டு புலவர்கள் இருக்கிறோம் என்பதை மெய்ப்படுத்துவதற்காகவே முருகு பாண்டியம் என்னும் நூல் எழுதப்பட்டது. இந்த நூலை என்னுடன் இணைந்து எழுதியவர் தமிழ்ச்செம்மல் இராம.வேல்முருகன் அவர்கள். எப்போதும் என் மீது மாறாத பாசம் கொண்டவர். (அவர்மீது நானும் தான்,) கவிஞர்களுக்குள் அவ்வப்போது அந்த கால கட்டத்தில் சில கருத்து மோதல்கள் இருந்த சூழலில் இது போல் அனைவரும் ஒருவருக்கொருவர் இணைந்து இலக்கியங்கள் படைக்க வேண்டும் என்று செயலால் சொன்ன நூல் தான் முருகு பாண்டியாம். இது அந்தாதி வடிவில் எழுதப்பட்டது. அது மட்டுமல்ல, விருத்தத்தில ஒரு முழுநீள நீதி நூலாக யாக்கப்பட்டது. எங்கள் இருவரின் பெயரையும் இணைத்து அதையே நூற்பெயராக வைத்துள்ளோம். வரலாற்றிலும் யாம் பிரிவின்றி வாழ வேண்டும் அல்லவா. அதற்காகத்தான்.

**வள்ளுவர்மேல் ஏன்பாசம் கொண்டுள்ளீர்கள்?**

வள்ளுவர் மேல் யார் தான் பாசம் கொள்ளாமல் இருக்க முடியும். அவர்

மீது அதிகப் பாசம் கொண்டிருப்பதற்கு காரணம் அவர் எனது தாத்தா என்பது தான். எனக்கு மட்டுமல்ல நம் அனைவருக்குமே அவர் பாட்டன்தான். ஒரு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்த சூழலை சற்று எண்ணிப் பாருங்கள். அப்போது இன்று இருப்பது போல் வாகனப் போக்குவரத்தோ, தொழில்நுட்ப கட்டமைப்போ இருந் திருக்க வாய்ப்பில்லை. ஆயினும் உலகத்தைப் பற்றிய பொதுப் பார்வை ஒரு மனிதருக்கு இருந்திருக்கிறதென்றால் பெரும் வியப்பல்லவா. உலகு என்று தொடங்கி உலகோர் அனைவருக்குமான நெறிகளை வகுத்துத் தந்திருக்கிறார். அனைத்து மனித குலத்துக்குமான வாழ்வியல் முறைமையை சுருங்கச் சொல்லி விரித்துரைத்திருக்கிறார். ஒரு மனோதத்துவ வல்லுநர் செய்ய வேண்டிய வேலையை ஒரு புலவர் செய்திருக்கிறார். அப்படி இருக்கும் போது அவரை கொண்டாட வேண்டிய கட்டாயம் நம் அனைவருக்கும் இருக்கிறதல்லவா. 'யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவன் போல் இளங்கோவைப் போல் யாங்கனுமே கண்டதில்லை, வெறும் புகழ்ச்சியில்லை' எனும் பாரதிப் பாட்டனின் வரிகள் நமக்கு உண்மையை உணர்த்துகிறதல்லவா. அதனால் என்னைப் பொறுத்தவரை முன்னோரை போற்ற வேண்டிய கடமை நம் அனைவருக்கும் உள்ளது. அந்த வகையில் வள்ளுவத் தாத்தன் நமது அடையாளம், நம் தமிழின் அடையாளம், தமிழரின் பெருமை. அந்த அடையாளத்தை அடையாளப் படுத்த வேண்டியது வரலாற்று அவசியம். அது போன்றே நமது பாட்டி ஔவையையும் நாம் கொண்டாட வேண்டும் என்பதும் நமது அதிமுக்கியத் தேவை.

### தூய தமிழ்ப் பற்றாளர் விருதுபெற்றது குறித்து என்ன நினைக்கிறீர்கள்?

தூய தமிழ்ப் பற்றாளர் விருது - 2022 பெற்றது உண்மையில் மகிழ்ச்சியளிக்கிறது. காரணம், உண்மையாகவே தமிழுக்கும், தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும், தமிழ் இலக்கியத்துக்கும் உழைப்பை நல்கும் ஒருவருக்கு இது போன்ற ஊக்குவிப்பு தருவது அவர்களுடைய பணியை இன்னும் சீரும் சிறப்புமாக செவ்வனே செய்வதற்கு வழிவகுக்கும். தமிழுக்கு உழைத்து என்ன கண்டீர்கள் என்பது போன்ற தான வெற்று கேள்விகளுக்கு இடமளிக்காது. அரசின் அங்கீகாரம் என்பது தமிழர்களின் ஏகோபித்த அங்கீகாரம் என்றே பொருள்படும். அரசு என்பது மக்களின் ஒருங்கிணைந்த மையப்புள்ளி என்னும் போது, அதன் மூலம் கிடைக்கும் விருது என்பதும் மக்களின் விருதாகவே

கோவை ஸ்ரீ கிருஷ்ணா கல்லூரியுடன் தமிழ் மதுரை சங்கப்பலகை இணைந்து நடத்திய கவியரங்க நிகழ்வில் கல்லூரி புல முதன்மையர், பேராசிரியர்கள் மாணவர்களுடன்





வலங்கமானில் நடைபெற்ற வள்ளலார் - 200 கவியரங்கம்

கருதப்பட வேண்டும். எண்ணற்ற அமைப்புகள் விருதுகள் வழங்கினாலும் அரசின் விருதைப் பெறும் போது ஒரு கூடுதல் அங்கீகாரம் கிடைக்கத் தான் செய்கிறது. அதிலும் மற்ற அரசு விருதுகள் விருதாளரின் தமிழ்ப்பணிகளுக்கான சான்றுகளின் அடிப்படையில் மட்டும் வழங்கப்படும் போது இவ்விருது தனிப்பட்ட திடீர் அலைபேசி உரையாடல் சோதனையையும் உள்ளடக்கியுள்ளது எனும் போது உள்ளபடியே இன்னும் ஒரு படி மேலானதாகிறது. ஆகவே தமிழக அரசின் தூய தமிழ்ப்பற்றாளராக அடையாளப்பட்டிருப்பது பெரும் மகிழ்ச்சியே. இது எனது தமிழ்ப் பணியை மேலும் ஊக்கப்படுத்தும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

### விருது என்பது என்ன?

விருது என்பது என்னைப் பொறுத்த வரை ஒருவரின் உண்மையான பொதுநலப் பணிக்கு அதாவது சமூகப்பணிக்கு வழங்கப்படும் பெருமிதம் மற்றும் ஊக்குவிப்பாகும். அது அவர்கள் பணியாற்றும் துறையில் மேலும் சிறப்பாக பணியாற்றிட உந்துதலைத் தரும். இதனால் சமூகம் முன்னேற்றம் பெறும். புதிய புதிய சிந்தனைகளும் செயல்களும் சாதனைகளும் உருப்பெறும். வரலாற்றில் நாடு முதன்மை பெறும்.

திரைப்படப் பாடலாசிரியர் கவிஞர் விக்டர்தாஸ் அவர்களுடன்



### விருது தற்போது வழங்கப் படுகிறதா? கேட்டுப் பெறப்படுகிறதா?

அது எனக்குத் தெரியவில்லை. நாட்டில் பல்வேறு விதமான கருத்துகள் உலா வருகின்றன. ஆயினும் இக்குற்றச்சாட்டு அரசு முதல் அமைப்புகள் வரை அனைத்து மட்டத்திலும் இருந்து வருகிறது. அதே சமயம் ஒருவருக்கு ஒரு விருது கிடைக்கும் பொழுது அவ்விருதுக்கு அவர் முற்றிலும் தகுதியானவர் தானா என்பதை அதே துறையில் இயங்கும் மற்றவர்களால் எளிதாக கணித்து விட முடியும். அப்போது அவ்விருது உண்மையாகவே ஏற்றுக் கொள்ளக் கூடிய, தகுதியுடைய ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்தால், சிறப்பானதெனத் தகுதிபெறும் அல்லது விமர்சனங்களைச் சந்திக்கும். இருப்பினும் விருதுகள் வழங்கப்படுவதில்லை. கேட்டு வாங்கப்படுகின்றன என்பதிலும் உண்மை இல்லாமல் இருப்பதில்லை. அப்படி ஒரு நிலை இருந்தால் அது களையப்படுவதே வருங்காலத்து வளர்ச்சிக்கு நல்லது. எனினும் யான் விருது பெற்ற போது முற்றிலும் தகுதியானவர்களுக்கே அது வழங்கப்பட்டிருக்கிறது என்பதை காண முடிந்தது. காரணம் அதில் மூத்தவர் களுடன் எனக்குத் தெரிந்த தமிழ்த் தொண்டாற்றும் மிக இளையவர்களும், மாணவர்களும் கூட அடங்கியிருந்தனர். இது பாராட்டுக்குரியதாகும்.

### திரைப்பட நடிகரான அனுபவம் எப்படி இருந்தது?



தமிழ்நாட்டரசின் தூய தமிழ்ப் பற்றாளர் விருது பெற்றமையை ஒட்டி மதுரையில் நடைபெற்ற பாராட்டுவிழாவில் மதுரை மாநகரத் துணை மேயர் உள்ளிட்ட ஆளுமைகள் கவிஞர்கள் நினைவுப் பரிசு வழங்கும் காட்சி

அது ஒரு சிறப்பான அனுபவம் என்றே சொல்ல வேண்டும். பெரும்பாலும் நடிகர்களையும் அவரது நடிப்பினையும் திரையிலேயே பார்த்து மகிழ்ந்த நமக்கு நம்மையே ஒரு நடிகராக திரையில் காணும் போது ஏற்படும் மகிழ்ச்சிக்கு அளவுகோல் இருக்காது. உண்மையில் சேந்தன் திரைப்படத்திற்கு பாடல் எழுதவே ஒப்புக் கொண்டேன். ஆனால் இயக்குனர் தங்களுக்குப் பொருத்தமான ஒரு பாத்திரம் இருக்கிறது நடியுங்கள் என்றார். ஆனால் நானோ முதலில் நடிப்பதற்கு மறுக்கவே செய்தேன். ஆயினும் இயக்குனர் கட்டாயப்படுத்தி நடிக்க வைத்தார். தங்களுக்கு இப்ப பாத்திரம் மிகவும் கனகச்சிதமாக இருக்கும் என்று வற்புறுத்தினார். அது உண்மைதான் ஒரு காவல்துறை ஆய்வாளராக என்னை நானே திரையில் பார்க்கும் போது ஒரு கணம் மிரண்டு தான் போனேன். நாம் தான் நடித்துள்ளோமா என்ற ஐயம் கூட ஏற்பட்டது. திரைப்படம் என்பது ஒரு மாய உலகம் என்பதையும் தாண்டி அது மற்றொரு உலகம் என்பதை உணர்ந்தேன். ஏன் இன்று வரை பலர் திரைப்படக் கனவுடனேயே திரிகிறார்கள் என்பதை

தொன்மைமிகு மணப்பாறை தமிழ் மன்றம் வழங்கிய இலக்கியக் குரிசில் விருது பெறும்போது





தமிழ்நாடு முற்போக்கு கலை இலக்கிய மேடை கடந்த திசம்பரில் தமிழ் மதுரை அறக்கட்டளையின் கீழ் இயங்கும் ‘தமிழ் மதுரை பதிப்பகத்திற்கு ‘ சிறந்த செயற்பாட்டாளர் விருது வழங்கி கௌரவித்த தருணம்

அப்போது உணர்ந்தேன். சேந்தன் வெளி வரும் போது நிச்சயம் நீங்களும் அதை உணர்வீர்கள். இலக்கிய உலகம் தாண்டி கலை உலகில் இன்னொரு பயணத்திற்கு வாய்ப்பு வழங்கிய சீதளாதேவி சினி கிரியேஷன்ஸ் நிறுவனத்திற்கும் இயக்குன ருக்கும் நன்றி தெரிவித்தே ஆக வேண்டும்.

**இதுவரை தாங்கள் எழுதியுள்ள நூல் கள் எத்தனை? சொல்லமுடியுமா?**

இதுவரை பத்து நூல்கள் வெளிவந்துள் ளன. தமிழ் ஏந்தி உலகாள்வோம், வெளிச்சத்தில் ஒரு கனவு, தமிழ் கொண்டு புரட்சி செய், முருகு பாண்டியம், சித்திரக்கூடு, சொல்வண்டி, கவியரங்கக் கவிதைகள், பெரிய புராணத்தில் இயற்கை வருணனை, படையல் மலர்கள், ரதி மூலம். இதில் பெரிய புராணத்தில் இயற்கை வருணனை என்பது ஆய்வு நூல், வெளிச்சத்தில் ஒரு கனவு ஒரு கற்பனைக் கவிதைப் புனைவு. மற்றவை கவிதைகள். இதில் சித்திரக்கூடு என்னும் நூல் பாண்டிச்சேரி மத்தியப் பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட கல்லூரிகளில் முதுகலைத் தமிழ் முதலா மாண்டு மாணவர்களுக்குப் பாடமாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

**எதிர்காலத் திட்டம் என்ன?**

நிறைய இலக்கியங்கள் படைக்க வேண்டும். இலக்கியங்கள் படைப்போ ருக்கு உதவிகள் புரிய வேண்டும். புதிய படைப்பாளிகளைக் கண்டறிந்து தமிழ் கூறும் நல்லுலகிற்கு அறிமுகம் செய்ய வேண்டும். ஆவணக் காப்பகம் ஒன்று தொடங்கி பல்வேறுபட்ட கலை, இலக்கியப் பண்பாட்டு ஆக்கங்களையும் அடையாளங்களையும் ஆவணப் படுத்த வேண்டும். தமிழ் வழிக் கல்வியை உறுதிப் படுத்தி மக்களை அதை நோக்கி ஈர்க்கும் வகையில் சில திட்டங்கள் உள்ளது. அதை நெறிப்படுத்தி நடைமுறைப் படுத்த வேண்டும். வள்ளுவர் சிலைகள் அமைப்பதை தொடர்ந்து பல இடங்க ளுக்கும் விரிவு படுத்த வேண்டும். இன்னும் பல திட்டங்கள் எண்ணத்தில் உள்ளது, அவை அனைத்தும் செயல் வண்ணத்தில்

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி அருகே உள்ள விராலிப்பட்டி கிராமத்தில் இவ்வாண்டு (2024) தமிழ் மதுரை அறக்கட்டளை தமிழர் திருநாளை ஒட்டிக் கொண்டடிய ‘பண்பாட்டுப் பொங்கல் விழா ‘ வில் ...



காண வேண்டும். உயர்ந்த ஒற்றை இலக்குடன் செயல்பட்டு தமிழுக்கு உலகின் உயர்ந்த மொழி என்னும் மகுடம் கிடைக்கச் செய்ய வேண்டும். இவற்றை வென்றெடுக்க எங்கள் உயரிய செயல்களுக்கு பெருந்தன்மையுடன் தன்னலம் கருதாமல் உதவும் நல்லவர்கள் செல்வந்தர்கள் புரவலர்களாக முன்வர வேண்டும்.

**வளரும் கவிஞர்களுக்கும் இளைஞர் களுக்கும் தங்கள் அறிவுரை என்ன?**

கவிஞர்களுக்குச் சொல்லும் முன் இளை ஞர்களுக்குச் சொல்ல வேண்டும். அவர் கள் இன்றைய சூழலில் 'விட்டொழிக்க வேண்டிய விடங்களை விட்டொழித்து, கெட்ட டொழிக்க வேண்டிய கேடுகளின் கட்டொழித்து, நட்டெடுக்க வேண்டிய நலம் பல நட்டு வைத்து, தொட்டெடுக்க வேண்டிய வெற்றியை தொடர்ந்தெடுக்க வேண்டும். 'கல்வி என்பதும் ஒழுக்கம் என்பதும் இரு விழியாகப் பேண வேண்டும். பெற்றோரை பேணுதல் என்னும் கடமையில் தவறக்கூடாது. நாட்டையும் வீட்டையும் ஒன்று போலக் காண வேண்டும், அங்கனமே பேண வேண்டும். இந்த நற்செயல்களை இளைஞர்கள் வென்றெடுப்பதற்கு தேவை யானவற்றை கவிஞர்கள் தங்கள் கவிதையிலே சுட்ட வேண்டும். இப்போ தெல்லாம் ஒரு கவியரங்கத்தில் கலந்து கொண்டு 18 அடிகளில் ஒரு கவிதை புனைந்து அரங்கேற்றி விட்டாலே கவிமாமணி, கவிச்சக்கரவர்த்தி என்னும் விருதுகள் எல்லாம் வழங்கப்பட்டு விடுகிறது. பத்தாயிரம் பாக்கள் யாத்த கம்பனின் பட்டத்தை வெறும் பத்தடிக் கவிதை பெற்றுத் தந்து விடுகிறது. ஆகவே வளரும் கவிஞர்கள் தற்போது வழங்கப்படும் விருதுகள் கண்டு தன்வயம் இழந்து விடக்கூடாது. இன்னும் இன்னும் உயரம் இருக்கிறது என்னும் எண்ணம் கொண்டு எழுதுதல் வேண்டும். மூத்த கவிஞர்களிடம் கருத்துக்களைப் பகிர்ந்து ஐயங்களைத் தீர்த்துக் கொண்டு முன்னேற வேண்டும். புதுக்கவிதைகள் புனைபவராகவே இருப்பினும் மரபின் கூறுகளை சற்றாவது அறிந்து கொள்ள வேண்டும். சங்க இலக்கியங்களையும், சரித்திரச் சான்றுகளையும் கொஞ்சம் தொட்டுப் பார்க்க வேண்டும். நிறையப் படிக்க வேண்டும், அப்படியே நிறையப் படைக்க வேண்டும். நாடு நலம் பெறும் ஒன்றே நம் சிந்தனையாய் வெளிப்பட வேண்டும்.

**தமிழ்நெஞ்சம் இதழ் குறித்த தங்கள் பார்வை ..**

தமிழ்நெஞ்சம் உண்மையிலேயே தமிழர்கள் நெஞ்சம் தான். தமிழுக்கும் தமிழர்கட்கும் கொஞ்ச நஞ்சமின்றி அரிய தொண்டினை பல்லாண்டுகளாக ஆற்றி வருகிறது. பிரான்ஸ் நாட்டிலிருந்து வெளிவரும் இதழானாலும் தமிழகத்தில் எல்லோர் நெஞ்சங்களிலும் தமிழையும் மகிழ்ச்சியையும் தவழ விடுகிறது. ஆயிரக் கணக்கான தமிழ்ப் படைப்பாளர்களின் படைப்புகளை உலகெங்கும் கடவுச்சீட்டு இல்லாமல் பயணிக்க வைக்கிறது. உலகத் தமிழர்களின் ஒருங்கிணைப்புப் பாலமாகிறது. பல அறிஞர்களை உலக மெங்கும் அறிமுகம் செய்து அடையாளம் காணச் செய்கிறது. சுருங்கச் சொன்னால் 'வஞ்சமில்லா நெஞ்சமும் துஞ்சலில்லா தொண்டதும்; விஞ்சுதமிழ் நெஞ்சமது ஆம்' என்பேன். இதன் ஆசிரியர் அமின் அவர்கள் மரபுக் கவிதைகள் இயற்றுவதில் வல்லவர். அது போன்றே தமிழ் நெஞ்சத்தையும் வல்லமையுடன் நடத்தி வருகிறார். வாழ்க.

நன்றி, வெல்க தமிழ்.

# சுமைகள்



– சுந்தரிமணியன்
புதூர்

காலையில் எழும்போதே கால்களை ஊனமுடியாமல் வலதுகுதிக்காலில் மட்டும் வலி விண் விண்ணென்று தெறித்தது. கால்களை ஊனமுடியாமல் எழுந்த பூர்ணா வுக்கு எதற்குத்தான் இந்தக் குதிக்கால் இப்படி வலிக்கிறதோ தெரியலையே? என நினைத்துக் கொண்டே கடிகாரத்தைப் பார்த்தாள். மணி ஆறாகி ஐந்து நிமிடம் ஆகியிருந்தது. வேகவேகமாக துடைப்பத்தை எடுத்துக் கொண்டு முன்வாசல் பெருக்கித் தண்ணீர் தெளித்தாள். பக்கத்துத் தெருவில் பால்பண்ணைக்குப் போய் பால் வாங்க வேண்டும்.தலைமுடியைச்சரிசெய்து கொண்டு பால் வாங்கி வந்தாள். சிங்கில் நிறைந்திருக்கும் பாத்திரங்களைத் துலக்கிவிட்டு, பல்தேய்த்து முகம் கழுவி பாத்ரூமை விட்டு வெளியே வந்து மணியைப் பார்த்தாள் மணி ஆறு நாற்பது. அடுப்பில் பால் காய்ச்சினாள். நினைவுகள் தன்னையும் அறியாமல் பின்னோக்கி நகர்ந் தன. மாமனார் உயிரோடு இருந்தால் ஐந்து நிமிடம் எழுந்திரிக்கத் தாமதம் ஆனாலும் மகனும் மருமகளும் படுத்திருக்கும் அறையின் கதவைத் தட்டி,

“எந்திரிம்மா. மணி ஆறாச்சு”

என்று கத்துவார். அவர் கத்திய கத்தலில் திடுக்கிட்டு விழிக்கும் பூர்ணாவுக்கு, ஒரு நாளைக்காவது தனது மனைவியை எழுப்பி, வாசல் தெளிக்கச் சொல்லக்கூடாதா? என்ற எண்ணம் மேலிட்டாலும் அதை வெளியில் சொல்லாது மனதிற்குள்ளேயே புதைத்துக் கொள்வாள். சொன்னாலும் தனது கணவனைப் போன்ற கல்நெஞ்சக் காரர்களுக்குத் தனது வலி புரியாது. பிரச்சினைதான் பெரிதாகும்.

திருமணமாகிவந்தபுதிதில்வீட்டிலிருந்த நாத்தனார் பிள்ளைகளுக்கெல்லாம் மாங்கு மாங்கென்று வேலை பார்த்துச் செய்தவளுக்கு, தனக்கென்று குழந்தை பிறந்தவுடன் வீட்டுவேலை பார்த்து, எல்லோருக்கும் பார்ப்பது சிரமமாக இருந்ததுடன் தனது குழந்தைகளைக் கவனிக்க முடியாமல் போனது. தனது கணவனிடம் எவ்வளவு சொன்னாலும் அவன் அதைக் காதிலேயே வாங்கவில்லை. நாத்தனார் பிள்ளைகள் இருவரில் ஒருவன் கல்லூரியிலும் இன்னொரு பெண் பத்தாம் வகுப்பும் படித்து வந்தாள். போதாக்குறைக்கு நாத்தனார் மூன்றாவது பையனையும் இங்கே தங்கவைக்க பிளான்

செய்தாள். இவள் எவ்வளவோ தனது கணவனிடம் மன்றாடிப் பார்த்தாள். என்னால் மூன்று பேரையும் பார்க்க முடியாது உங்க அக்காவிடம் சொல்லுங்கள் என்று. ஆனால் அவன்,

“உன்னால் பார்க்கமுடியாவிட்டால் நீ சொல்லு. என்னால் சொல்ல முடியாது” என்றான்.

அவன் இப்படிச் சொல்வதைக் கேட்ட பிறகு அவளால் மனஉளைச்சலில் இரவு முழுவதும் தூங்கமுடியவில்லை. ஏன் உயிர் வாழ்கிறோம்? பேசாமல் தற்கொலை செய்து கொள்வோமா? உள்ளுக்குள் பல்வேறு எண்ணக் குமுறல்கள் எழுந்து உடலையும் மனதையும் சோர்வடையச் செய்தன. நான் நாத்தனாரிடம் பேசினால் அவள் எத்தனை ஜாடைப்பேச்சு பேசுவாள் என்று தெரியாது. சண்டை பெரிதாகிவிடும். மாமியார் அதைவிட மோசம். என் குழந்தையைப் பார்ப்பேனா? அல்லது வருசம்பூரா இவர்கள் பிள்ளைகளையே பார்த்துக்கொண்டிருப்பேனா? திருமணமாகி இரண்டாண்டுகள் இவர் களுக்குப் பார்த்தாகிவிட்டது? என்ன செய்வது? எனக்கான வாழ்க்கையை நான் எப்போதுதான் வாழ்வேன்? இந்தக் கேள்வி அவள் மனதுக்குள் எழுந்து கண்களிலிருந்து கண்ணீர் அருவியாய்க் கொட்டியது.

திருமணமாகி வந்த நாளிலிருந்து தனது கணவனிடம் கூட தனியே பேசமுடியாத வீட்டின் சூழல் ஒரு பக்கம் என்றால், மனைவியைப் பேசவே விடாமல் வாயை அடக்கும் கணவனின் கொடூர குணங்கள் அவள் மனதை வெகுவாகப் பாதித்தன. மலர் போன்ற மென்மையான அவளின் மனது காயம்பட்டுப் போனது. என்றைக்காவது தனது அம்மா வீட்டிற்குப் போகலாம் என்றால் மூஞ்சியைத் தூக்கும் மாமியார், மாமனாரின் செயல்களும் கணவனின் குணமும் அவள் ஆறுதல் தேடக்கூட வழியில்லாமல் செய்தன. அப்போதெல்லாம் அவள் குழந்தைகளைப் பார்த்து மட்டுமே ஆறுதல் அடைவாள். அவளுக்கு அடிக்கடி தற்கொலை எண்ணம் வரும் போதெல்லாம் தனது குழந்தைகளைப் பார்த்து அமைதி பெறுவாள்.

இப்படித்தான் பூர்ணாவின் வாழ்வு நகர்ந்தது. வழக்கமாக ஒரு நாள் மாலையில் தெருவில் வரும் நல்ல தண்ணியை வயதான மூதாட்டி ஒருவர் பிடித்து வைக்க மாமியார் தூக்கி வந்தாள். அதைப் பார்த்த நாத்தனார் மகன்,

“எதற்கு ஆச்சியைத் தண்ணீர் பிடிக்கச் சொல்கிறீர்கள்? நீங்கள் சென்று பிடிக்கவேண்டியதுதானே?” என்றான். அதைக் கேட்ட பூர்ணாவுக்கு வந்த ஆத்திரத்தில்,

“அதைக் கேட்க நீ யார்? உன் வேலை எதுவோ, அதை மட்டும் பார்” என்றாள் கோபத்தில்,

“இது என் ஆச்சி வீடு. நான் கேட்கத்தான் செய்வேன்” என்று ஆணித்தரமாய்க்கூற,

“உன் அதிகாரத்த உன் வீட்டில் போய் வைத்துக்கொள்” என்று சொல்ல, பூர்ணாவுக்கும் அவனுக்கும் சண்டை முத்திப்போனது. வேடிக்கை பார்த்த மாமனாரும், மாமியாரும் ஒன்றுமே சொல்லாமல் நகர்ந்தனர். தன் கணவர் வந்த பிறகு நடந்த விசயங்களைக் கூற, அவர் எதுவும் பேசாமல் நகர, பூர்ணாவுக்கு ஆத்திரம் பொங்கியது.

“அவனைத் தட்டிக் கேட்கக்கூடாதா?” கோபத்தில் வார்த்தையும் துக்கமும் தொண்டையை அடைக்க,

“கேட்போம். பேசாமல் இரு தாயே” என்று நகர்ந்த கணவனின் மலுப்பல் அவளுக்கு வெறுப்பைத்தான் கொடுத்தது. தன் முன்னாடியே கூப்பிட்டுத் தட்டிக் கேட்காத கணவரின் குணமும் தூண்டி விட்ட நாத்தானாரின் சாமார்த்தியமும் தெரிந்திருந்தாலும் அதைக் கேள்வி கேட்காத கணவரின் கண்மூடித்தனமான பற்றும் குடும்ப வாழ்க்கையின் மேல் அளவுகடந்த வெறுப்பைக் கொடுத்தன.

வருடக்கணக்காய் உட்கார்ந்து இவர் அக்கா பிள்ளைகளுக்குச் சமைத்துப் போடவேண்டும், அதைத் துளிக்கூட எண்ணாத, என்னை யார் பேசினாலும் வேடிக்கை பார்க்கக்கூடிய இவருடன் வாழவேண்டுமா? எல்லாம் என் தலையெழுத்து. நான் எதற்காக வாழவேண்டும்? என் குழந்தைகளுக்காக மட்டுமே இந்தத் துன்பத்தையெல்லாம் பொறுத்துக் கொள்கிறேன்.

காலையில் எழுந்ததில் ஆரம்பித்து, இரவு வரை வேலைதான். மாமியார் மாலையில் ஒரு நேரம் தண்ணீர் பிடிப்பது தவிர எந்த வேலையும் செய்வதில்லை. கதைப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு காலையில் காப்பி குடித்தவுடன் வாசிக்க ஆரம்பிக்கிறவள். காலை டிபன் முடித்து பூர்ணா கிச்சனை விட்டு வெளியில் வரும்போதுதான், கணவனுக்குப் பரிமாற எழுந்து வருவாள். வீட்டிற்கு வரும் பலரும்,

“ஏன் உன் மாமியார் காலையிலேயே கதைப் புத்தகம் படிக்கிறார்கள். வீட்டில் வேறு வேலையில்லையா? உனக்கு சமையலில் உதவலாம் அல்லவா?” என்று உறவினர்கள் பூர்ணாவிடம் கேட்டதுண்டு.

‘‘அவர்கள் டீச்சர் வேலை பார்த்த வர்கள் என்பதால் இப்படிப் பழகியிருக்கி றார்கள். நான் வருவதற்கு முன்பு மாமானாரின் அத்தை எல்லா வேலையும் பார்த்திருக்கிறார்கள். இப்பொழுது நான் பார்க்கிறேன். அதனால் அப்படியே பழகிவிட்டார்கள்.’’ என்று சொல்லி சமாளிப்பாள். இன்னுமொரு கொடுமை மாமியாருக்குப் பென்சன் வருவதால் அவருக்கு மட்டுமே டூத்பேஸ்ட். மற்றவர்கள் எல்லோருக்கும் வீட்டில் பல்பொடி தான். வந்த புதிதில் இது விந்தை யாகப்படவே,

“ஏன் எல்லோருக்கும் பேஸ்ட் வாங்கக் கூடாதா? உங்க அம்மாவுக்கு மட்டும் என்ன ஸ்பெசல்?” என்று கேட்டபிறகே அவளுக்கு டூத்பேஸ்ட் கிடைத்தது. தனது அப்பா வீட்டில் கஷ்டம் தெரியாமல் வளர்ந்தவளுக்கு புகுந்த வீட்டினரின் பாகுபாடு வேதனையைத் தந்தது.

“பூர்ணாவின் மனது இப்படித்தான் இன்னும் அசைபோடுகிறது. ‘‘இன்று மாமனார் இறந்து போனாலும் மாமி யாரைக் கண்ணும் கருத்துமாய் நான்தான் பார்த்துக் கொள்கிறேன். என்னுடன் சண்டை போட்ட பேரனோ, வளர்த்த பேத்தியோ வந்து பார்க்கவில்லை. என்றாவது உடல்நிலை சரியில்லாமல் போகும் சமயம் வந்து எட்டிப் பார்ப்பார்கள். அவ்வளவுதான். மகள்களே அப்பா போனவுடன் தாயைப் புறக்கணித்தனர். ஆனால் இன்னும் மாமியார் மகள்களின் மேலும் தான் வளர்த்த மகளின் பிள்ளைகளின் மேலும் அளவுகடந்த பிரியத்தைக் காட்டுவார். ஆனால் நான் மட்டும் இன்னும் அந்நியப் பெண்ணாகவே எனது கணவனாலும் மாமியாராலும் உணரப்படுகிறேன். உணர்த்தப்படுகிறேன். இந்த நிலை எப்போது மாறும்? புகுந்தவீடென்பது வலி மிகுந்த சுமையாகவே எனக்கு இன்னும் இருக்கிறது”.



# காதல் வரம்


ஜனனி சுந்தர்
ஹைதராபாத்


மாதவன் கௌசல்யா தம்பதியினர் அழகான நடுத்தர வர்க்கத்தை சேர்ந்தவர்கள். மாதவனின் நீண்ட நாள் உழைப்புக்கு பிறகு பணி ஓய்வு பெற்று வீட்டில் பொழுதை இனிமையாக கழித்துக் கொண்டிருக்கிறார். மாதவன் சிறந்த உழைப்பாளியும் நேர்மையானவரும்..

ஆனால் சற்று முன்கோபக்காரர். அவரது பணி சுமை காரணமாக அனைவரிடமும் எப்போதும் சற்று கடிந்த முகத்துடனே காணப்படுவார். கௌசல்யாவை சிறு வயதில் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார். இவரிடம் பேசுவதற்கு கூட பயப்படுவாள் கௌசல்யா. தனது தேவைகளை பிள்ளைகள் மூலமாக பூர்த்தி செய்து கொள்வாள். கணவனை எதிர்த்துப் பேச தெரியாத பெண்ணாக 50 திருமண ஆண்டுகளை கடந்து விட்டாள். பிள்ளைகள் படிப்பு, மாமியார் மாமனார் என்றே அவள் வாழ்க்கை இருந்ததினால், இதைப் பற்றி அவள் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

இப்பொழுது பிள்ளைகளும் வளர்ந்து படிப்பு முடித்து திருமணமும் ஆகி விட்டது. மாமியார் மாமனாரும் வைகுண்ட பிராப்த்தி அடைந்து விட்டார்கள். இவளுக்கு அந்த குடும்பத்தில் இருந்த, இவளை புரிந்து கொண்டவர்கள் தனது பிள்ளைகள் மட்டுமே. மாமியாரிடமும் இவள் வாங்காத பேச்சு இல்லை. பிள்ளைகள் வெளியூரில் இருந்ததினால் தனிமையை மிகவும் உணர்ந்தால் கௌசல்யா. ஆனால் கௌசல்யா பிள்ளைகளை மிகவும் கட்டுக்கோப்பாக வளர்ந்திருந்தாள். தன் மகளுக்கு கணவன் வீட்டில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை பற்றி நன்றாக கற்றுக் கொடுத்து அனுப்பி வைத்திருந்தாள். அதேபோல தன் மருமகளையும் தன் சொந்த மகளை போல் நடத்தி வந்தாள். (கௌசல்யாவிற்கு இப்பொழுது உள்ள மாமியாருக்கு இருக்கக்கூடிய ஒரு சுபாவமும் இன்று வரை வரவில்லை... மிகவும் சாந்த ஸ்வரூபி) என்பது குறிப்பிடத்தக்கதாக இருந்தது. தனது நிலைமையை யோசித்துக் கொண்டே கௌசல்யா தனது அன்றாட பணிகளை செய்து கொண்டே இருப்பாள்.

மாதவன் இப்பொழுது பணி ஓய்வு பெற்று வீட்டிலேயே இருப்பதால், அவர்களுக்குள் சிறிது அதிகமாகவே சண்டை வரப்பட்டது. பெண், மருமகள் கொடுக்கும் தைரியத்தினால் கணவனை 50 ஆண்டுகளுக்குப் பிறகு, எதிர்த்து கேள்வி கேட்க ஆரம்பித்தாள்.

மாதவன் தனது நாட்களை நண்பர்களுடன் பேசுவது கேளிக்கை என்று கழித்துக் கொண்டிருந்தார். கௌசல்யாவோ வீட்டிலேயே அடைந்து கிடந்தாள். இதனால் மன அழுத்தத்திற்கு ஆளான கௌசல்யாக்கும் மாதவனுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு, கௌசல்யா தனது மகள் வீட்டிற்கு சென்று விட்டாள். மாதவனும் அவளை தடுத்து நிறுத்தவில்லை. அவரது ஈகோ அவரை

தடுத்து நிறுத்தியது. இரண்டு நாட்கள் வெளியில் உணவு வாங்கி சாப்பிட்டார் மாதவன். அதற்கு மேல் சமாளிக்க முடியவில்லை மாதவனால். மூன்றாம் நாள் காலையில் சர்க்கரை டப்பாவை தேடியும் கிடைக்கவில்லை. கௌ, கௌ என்று, கூப்பிடத் தொடங்கி அவள் இல்லை என்பதை புரிந்து கொண்டார்.

கௌசல்யா மிகவும் இளகின மனம் படைத்தவள். மகள் வீட்டிற்கு சென்று விட்டாளே தவிர, இவரைப் பற்றின ஞாபகத்திலேயே இருந்தாள். இரவில் சரியாக தூங்குவதுமில்லை. மாதவன் தூங்கி இருப்பாரா, சாப்பிட்டு இருப்பாரா என்றெல்லாம் புலம்பியப்படியே தனக்குள் அழுதும், அலுத்தும் கொண்டாள் .இங்கே மகள் விதவிதமாக சமைத்துக் கொடுக்க, இவளுக்கோ மாதவன் மீதே சிந்தனை. மாதவன் அவ்வப்பொழுது தனது மருமகள் வீட்டிற்கு சென்று, அங்கே உணவு சாப்பிட்டு வருகிறார் என்ற செய்தி தெரிந்து, தனது மருமகளுக்கு போன் செய்து, மாமாவிற்கு காரம் சற்று குறைச்சலாக போடு, அவருக்கு கூட்டு பிடிக்காது குழம்பு செய்து கொடு இரவில் சீக்கிரம் தூங்க சொல் என்றெல்லாம் கட்டளை இட்டுக் கொண்டிருந்தாள். மருமகளுக்கு இவர்களது பிரிவை தாங்கிக் கொள்ள முடியாமல் தனது கணவனிடம் இருவரையும் நாம்தான் சேர்த்து வைக்க வேண்டும் என்று சொல்ல ஆரம்பித்தாள் ..

அதற்குள் மாதவன் தனது மகளுக்கு போன் செய்து, அவருக்கே உரிய பாணியில் உன் அம்மா எப்பொழுது இங்கே வருவதாக இருக்கிறாள்.? வரப்போகிறாளா இல்லையா என்று கேட்டிருக்கிறார். (தனக்கு மனைவியை பார்க்க வேண்டும் என்ற ஆசையினால்) ...

மருமகளும்,மகளும் பேசி இருவரையும் சமாதானம் செய்யப் போவதாக முடிவு எடுத்தனர். மாதவனின் மனசு சற்றே தளர்ந்து தனது மருமகளிடம் தன் மனைவியைப் பற்றி, மிகவும் பெருமையாக வாழ்க்கையிலேயே முதன் முறையாக பேசி உள்ளார். (மனைவியின் பிரிவு இவ்வாறு அவரை யோசிக்க வைத்தது) மாதவனுக்கு தனிமையின் நிலைமை புரிய ஆரம்பித்தது. எவ்வளவு பேர் அருகில் இருந்தாலும், மருமகள் வேளா வேளைக்கு அனைத்தையும் கையில் கொண்டு வந்து கொடுத்தாலும்.. தன் மனைவி சமைத்தது போல் இல்லை என்ற எண்ணம் அவரது உள் மனசில் ஆழமாக பதிந்திருந்தது. தனக்கு உடனடியாக மனைவியை பார்க்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது.

அங்கே கௌசல்யாவிற்கும் அதே எண்ணம் தோன்றியது அவளுக்கு மகள் வீட்டில் இருப்பு கொள்ளவில்லை. இரண்டு மூன்று தெருக்கள் தள்ளி தான் இருவரின் வீடும் இருந்தன... மாதவன் மனைவி இருக்கும் தெரு வழியாக, வாலிபனைப் போன்று நடைப்பயிற்சி செய்து வருகிறேன் என்று கூறி அதே தெருவில் காலையில் செல்வார். காலையில் வாசல் தெளித்துக் கொண்டிருக்கும் மனைவி, இவரைப் பார்த்து கண்டும் காணாமல் கதவை சாத்திக்கொண்டு உள்ளே போவாள். இதையே இரண்டு மூன்று தினங்களுக்கு இருவரும் வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

இந்தப் பிரிவு அவர்களுக்குள் புது காதலை முளைக்க செய்தது. ஒரு நாள் அதேபோல் காலை வேளையில் கௌசல்யா வாசல் தெளிக்க கதவைத் திறந்த போது கையில் பூங்கொத்துடன் மாதவன் நின்று கொண்டிருந்தார். கௌசல்யாவிற்கு ஒரே வெட்கம். புடவை தலைப்பால் முகத்தை மூடிக்கொண்டு உள்ளே செல்ல முயற்சித்தாள். மாதவன் அவள் கைகளைப் பிடித்தபடி... அவளை தன் பக்கம் இழுத்து கொண்டார். ‘அண்ணலும் நோக்கினான்,

அவளும் நோக்கினாள்‘ அந்தக் காதலில்.. இருவர் கண்களிலிருந்தும் தானாக நீர் பெருகியது. பேசுவதற்கு வார்த்தை இல்லை. இதைப் பார்த்த மகள், மருமகன் கிண்டல் செய்வதை பார்த்துவிட்டு உடனடியாக அவர்கள் வீட்டை விட்டு கிளம்பி தங்கள் வீட்டிற்கு வந்தனர்.

கௌசல்யா வீடு திரும்பியவுடன், அந்த வீடு அவள் விட்டு சென்றதைப் போலே இல்லை. எங்கெங்கிலும் துணி, தூசி என்று வீடே இரண்டாக மாறி யிருந்தது. இதையெல்லாம் பார்த்து புலம்பியப்படியே ..

கௌசல்யா வேலைகளை செய்ய தொடங்கி விட்டாள். என்றும் இல்லாத திருநாளாக இன்று தனக்குள் பூட்டிக் கிடந்த காதலுடன், கௌசல்யாவை கட்டியணைத்து நெற்றியில் முத்தமிட்டார் மாதவன். இது என்ன புதுசு என்று அந்த இடத்தை விட்டு நகர்ந்து போனாள் கௌசல்யா.. மாதவனும் வேடிக்கையாக ‘அன்று காதல் பண்ணியதும் உந்தன் கன்னம் கிள்ளியதும், இப்போதும் நிறம் மாறாமல் எந்தன் நெஞ்சில் நிற்கிறது‘ என்று பாடி தனது காதலை வெளிப்படுத்தினார் ..

கௌசல்யா மிகவும் நெகிழ்ந்து போனாள். என்ன ஒரு அருமையான மாற்றம் தன் கணவனிடம் ..

தனக்கென்று எதையும் கேட்காதவள் கௌசல்யா.. தனது குடும்பத்திற்காகவே வாழ்நாளை கழித்த கௌசல்யாவை அவள் இஷ்டம் படி எங்கேனும் அழைத்துச் செல்ல வேண்டும் என்று மாதவன் ஆசைப்பட்டார். தனது பென்ஷன் பணத்தை மொத்தமும் மனைவியின் ஆசையை நிறைவேற்ற வேண்டும் என்று உறுதி கொண்டார். உடனடியாக விமானத்தில் டிக்கெட்ஸ் புக் செய்து உயரப் பறந்து சென்றார்கள் இருவரும். விமானத்தில் இருவரும் தங்களது இளமைக் கால நிகழ்வுகளும் பிள்ளைகளைப் பற்றியும் அசைபோட்டுக் கொண்டே சென்றார்கள். மாதவன் இதுவரை நடந்து கொண்டதற்காக மனைவியிடம் அன்பாக மன்னிப்பும் கேட்டுக்கொண்டார் ..

கௌசல்யா தனக்கே உரிய பாணியில், ‘உங்களுக்கு அழகே உங்கள் கோபம் தான்‘ என்று சொல்லி மாதவனை இப்பொழுதும் சந்தோஷப்படுத்தினாள்... வீட்டிற்கு திரும்பிய பிறகும், கௌசல்யாவின் அன்றாட வேலைகளில் தனது பங்கை அதிகமாக கொடுத்தார். சில நாட்களில் கௌசல்யாவை உட்கார வைத்து அனைத்து வேலைகளையும் இவரே அவளுக்காக செய்து கொடுத்தார். இரு துருவங்களாக இருந்து அவர்கள் சமீபத்தில் மீண்டும் மலர்ந்த மாதவனின் காதலால் தங்களது வாழ்க்கையை காலை நடை பயிற்சி கோயில் சுற்றுலா என அனுபவிக்க தொடங்கி புதிய காதலுடன் புத்துணர்ச்சியுடன் புது வாழ்க்கையை தொடங்கி இருக்கிறார்கள். இருவருக்கும் முகத்தில் சுருக்கம் வந்தாலும் மனதில் வரவில்லை .

இளமைக்கால காதல் என்பது கட்டா யம் செய்தே ஆக வேண்டும் என்பதற்காக காமத்துடன் சேர்ந்த காதலாகவே பெரும் பாலும் இருக்கிறது. ஆனால் முதுமை காதல் என்பது அதாவது நமது 45 50 வயதுக்கு மேல் உள்ள காதல், மிகவும் அழகாகவும் உன்னதமாகவும் இருக்கிறது. அதுவரைக்கும் மனைவியை வொர்கிங் மெஷின்னாக பார்த்த கணவன் ..தனது முதுமை காலத்தில் அவளைப் புரிந்து கொண்டு புதிதாக மலர்ந்த காதலுடன் பயணிக்கின்றான்.

வயது தாண்டி அவர்களுக்குள் பூத்த காதல், உடல் தாண்டி உள்ளம் நிறைந்த காதலாகவும், அனுபவத்துடனும் முதிர்ச்சி

*யுடன் காணப்பட்டு... அதில் இருவரின் உணர்வுகளும் சங்கமிக்கிறது...*

*முத்தங்கள் பரிமாறாமல் நித்தம் நித்தம் தோளோடு தோல் சாய்ந்து, உணர்வுகளை பரிமாறிக் கொள்ளும் முதுமை காதலின் அழகே தனி! !*

*'இளமையில் மனைவியின் காவலன் கணவன். முதுமையில் கணவனின் ஊன்று கோல் மனைவி.*

*தாங்கிப் பிடிக்கத் துணை இருந்தால், தள்ளாடும் முதுமையும் இளமையே... காலம் கரைந்த பின்னும் கூந்தல் நரைத்த பின்னும் அன்பில் மாற்றம் இல்லையே ..*

*காதல் என்றுமே தனி அழகு தான், இளமையில் தொடங்கி முதுமை வரை தொடங்கும் காதல் ஒரு வரமே... "காதலை காதலிப்போம் நம் இறுதி மூச்சு உள்ளவரை""*

# துளிப்பாக்கள்

✶

கடற்கரையில் பாத சுவடுகளோடு
பாவ சுவடுகளும்
பிரிந்த காதல்கள்!

✶

எப்படியோ மெல்ல மெல்ல
முன்னேறி விடுகிறது
பட்டம்!

✶

மழை பெய்ய ஆரம்பித்ததும்
அங்கங்கே முளைக்கிறது
குடை கடைகள்!

✶

நன்றி கெட்டவன்
கடைசிவரை சொல்லவே இல்லை
நண்பனின் மரணம்!

✶

யானை சவாரி வாய்ப்பில்லை
தனிக்குடித்தனத்தில்
தாத்தா பாட்டி!

✶

சொந்தம் பந்தம் எதுவுமில்லை
ஆனாலும் ஆசிர்வதித்தனுப்புகிறது
யானை!

✶

தனக்கு மட்டும் சீட்டு
கிடைக்காத துரதிஷ்டக்காரன்
கிளி ஜோசியன்!

✶

யார் விதை போட்டது
நாடெங்கும் முளைத்துக்கிடக்கிறது
சாதிகள்!

✶

அமைதி தருகிறது
தொடர் அலைகளின் சத்தம்
கரையில் காதலர்கள்!

✶

போதையில்லை
நன்றாகவே தள்ளாடுகிறான்
ரயில் பயணம்!

✶

தவறாய் தெரியவில்லை
ஓதிய பின் அறுபடும்
ஆடு கோழிகள்!

✶

ரேசன் கார்டில் பெயரில்லை
ஒன்றாகவே குடித்தனம்
மாடுகள்!


✶

விடிய விடிய புகைகிறது
பழைய தரித்திரங்கள்
போகி!

✶

கோடீஸ்வரன் ஆனதும்
தூக்கம் வரவில்லை
நள்ளிரவு கனவு!

– மகிழை.சிவகார்த்தி



# மனதோரச் சாரலாய் சிறு ஊடல்

தேன்சுவைக்கும் வண்டுகள்
இதழ்களையே நாடுகிறதே

தேவதையின் அம்சமிவள்
காதலனிடம் அடைக்கலமானாளே

அன்பால் கட்டுண்டாள்
அரவணைத்தே ஆட்கொண்டாளே

சிணுங்களில் இதயமும்
இன்பம் ஆனதே

உணர்வினில் சிலிர்த்தே
உறவாகி உயிர்த்தாளே

வதனமும் மெருகேறிட
வஞ்சியும் வாஞ்சையானாளே

மாலையிட்ட மன்னவனின்
மார்பில் சாய்ந்தாளே

நாணமது விலகிடவே
கூடலும் இதமானதே

மனதோரச் சாரலாய்
சிறு ஊடலே

காதலின்பம் பெருகிடவே
காணாமல் போனதே

இமைகளின் படபடப்பில்
இளமையும் இனிதானதே

ஒன்றான உள்ளங்கள்
விலகிடாத பந்தமானதே....

பெ.வெங்கட லட்சுமி காந்தன்.
விருதுநகர்





# தொடுவானம் தூரமில்லை

நல்லதே நடந்திடும்
நலன்கள் பெருகிடும்
நல்லதை நினைத்தே
நாளும் வாழ்ந்திடு

நன்றி மறவாமல்
நன்னெறி பழகிடு
நன்மைகள் செய்தே
நடுநிலைமையை நாடிடு

உழைப்பே உயர்வென
உனக்கும் ஊருக்கும்
உண்மையாய் உறைந்திடு
உழைப்பாளரை போற்றிடு

தஞ்சம் என்றே
தயவு வேண்டுவோருக்கு
தர்மம் செய்திடு
துவசித்திடு வஞ்சகரையே

தரணியில் என்றும்
தலைநிமிர்ந்து வாழ்ந்திடு
தண்ணொளி பரப்பும்
தங்கக் கதிராகிடு

பணியை செவ்வனே
பணிந்தே முடித்தே
பகலவனாய் ஒளி
பரப்பச் செய்திடு

உழைப்பின் மேன்மையை
உணவின் தேவையை
உரக்கச் சொல்லிடு
உதவிக்கு உரமிடு

பாதையை செப்பனிட்டு
பார்வையை மாற்றிடு
பாரெங்கும் சிறந்திட
பாடுபட்டு நிலைத்திடு

வானமே எல்லையாய்
வாழ்க்கையில் இலக்கிடு
தொட்டதெல்லாம் துலங்கிடும்...
தொடுவானம் தூரமில்லை

கவிஞர் இரஜகை நிலவன்
மும்பை





# தன்முனைக் கவிதை தோற்றமும் - வளர்ச்சியும் 2

அன்புச்செல்வி சுப்புராஜு
பட்டாபிராம், சென்னை

எம்மொழியும் எம் மொழியே
எனும் எம் கூற்றாய்
எம் மொழியினின்றும்
எம்மொழிக்கும் வரவு வைப்போம்

**எழுத்தாளர் சாந்தா தத்**

நானிலு கவிதை வகைமையினால் வெகுவாக ஈர்க்கப்பட்ட கவிச்சுடர் கா.ந. கல்யாண சுந்தரம் ஐயா அவர்களுக்கு இவ்வடிவில் தமிழில் சுயமாக எழுத வேண்டும் என்ற ஆவல் பெருகிக் கொண்டே சென்றது. உடனே அவர் சில நானிலு கவிதைகளைத் தமிழில் எழுதி முகநூலில் அவரின் சுவற்றில் பதிவிட்டார். அக்கவிதைகளுக்குக் கிடைத்த வரவேற்பு ஐயா அவர்களை அடுத்தொரு படிக்கல்லுக்கு அழைத்துச் சென்றது.

இந்நானிலு கவிதை வடிவத்தினை கவிச்சுடர் ஐயா அவர்களைத் தொடர்ந்து பெருமளவில் எழுதிய கவிஞர்கள் அன்புச்செல்வி சுப்புராஜு, துரை. அனுராசு, சாரதா க சந்தோஷ், ஜென்ஸி செல்வராஜ், இளவல் ஹரிஹரன் ஆகியோரை நிர்வாகிகளாகக் கொண்டு கவிச்சுடர் கா.ந. கல்யாணசுந்தரம் ஐயா அவர்களின் தலைமையில் 13.11.2017 அன்று தெலுங்கு நானிலு தழுவிய தமிழ் மொழிக்கேற்ற சிறு மாற்றங்களுடன், 'தன்முனைக் கவிதைகள் குழுமம்' முகநூலில் துவங்கப்பட்டது.

தமிழ் மொழிக்கேற்ப சிறு மாற்றங்கள் என்றால் என்ன என்று உங்களில் சிலருக்கு ஒரு ஐயம் ஏற்படலாம். சொல்கிறேன்.

'தெலுங்கு மூல நானிலு வடிவம்' இருபது முதல் இருபத்தைந்து எழுத்துக்களுக்குள் எழுதுவது. தெலுங்கில் கூட்டெழுத்துக்கள் மிக, மிக அதிகம். அதனால் மிகக் குறைந்த எழுத்துக்களில், அடர்த்திமிகு நானிலு கவிதைகள் எழுதுவது எளிதாக கைகூடியது. ஆனால் தமிழில் தனித்தனி எழுத்துக்களாக உள்ளதால், நானிலு கவிதைகளை தமிழில் எழுதும் பொழுது எழுத்துக்களின் எண்ணிக்கை அதிகரிப்பது இயல்பான ஒன்றாகியது. சொல்லும், எழுத்தும் விரிவடையும் பொழுது அவற்றை முற்றிலும் நானிலு இலக்கணத்திற்குள் வரையறுக்க இயலாது! நானிலு அடித்தளம் ஆயினும் சற்று மாறுபட்ட வடிவமாக 'தன்முனைக் கவிதை' என்று பெயரிடப்பட்டு தமிழில் அறிமுகமானது.

எதனால் 'தன்முனைக் கவிதை' என்று பெயரிடப்பட்டது என்பதன் விளக்கமாக கவிச்சுடர் கா.ந.கல்யாணசுந்தரம் ஐயா அவர்கள் 'தெலுங்கு வடிவ நானிலுவை தமிழில் முழுக்க, முழுக்க புதிய வடிவமைப்பில் பெயர் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் எனது ஆழ்மனதில் எழுந்தது. தன்னிலிருந்து

முனைப்போடு எழும் இந்த ஆக்கபூர்வ கவிதைகள் முன்னிலைப் பொருளையும், நம்மோடு இயங்கும் மனிதத்தையும் சுட்டி எழுதப்படுவதால் தன்முனைக் கவிதைகள் என்று பெயரிட்டேன்' என்பார். (ஆதாரம் நான்... நீ... இந்த உலகம்) நமக்கு முன்னிருக்கும் அனைத்தையும் மனிதத்துடன் உணர்வது என்பது அவ்வளவு எளிதல்ல. அது ஒரு தவம், பெரும் உயிர்ப்பு. அத்தகைய பெரும் கருத்துக்களை குறுவடிவில் சொல்லக் கூடிய தன்முனைக் கவிதைகள் முகநூலில் அறிமுகம் ஆன புதிதில் அவற்றின் இலக்கண வரையறையாகக் கொள்ளப்பட்டவை பின்வருமாறு:

- நான்கு வரிகளில் அடர்த்தி மிகு கவிதை
- இயற்கை, அறிவியல், வாழ்வியல், சமூகம், உறவுகள், உணர்வுகள் அனைத்திலும் 'நான், நீ' என்ற குறியீடு கொண்டு எழுத வேண்டும்.
- முதல் இரண்டு வரிகள் ஒரு செய்தி யின் குறியீடாகவும், அடுத்த இரண்டு வரிகள் அதனைச் சார்ந்தோ, முரணா கவோ அமையலாம்


இவ்வரையறையில் கவிஞர் வதிலை பிரபா எழுதிய கவிதை

ரொட்டித் துண்டுக்கு
ஏங்குகிறவன் முன்னே
கண்ணாடிப் பெட்டிக்குள்
ஊறும் எறும்பு

**வதிலைபிரபா**

செய்திக்குள் எவ்வளவு அடர்த்தி பாருங்கள். வாசித்ததும் எளிதாக கடந்து செல்லவிடாமல், கசியும் மனதுடன் மீண்டும் வாசிக்கத் தூண்டுகிறதல்லவா இந்தக் கவிதை. ஒருவன் பசியின் கொடுமை தாங்காமல் அல்லாடுகிறான். எவ்வாறேனும் ஒரு சிறு ரொட்டி துண்டாவது கிடைத்து விடாதா என்று ஏங்குகிறான். அங்குமிங்கும் அலைபாயும் அவனின் பார்வையில் படுகிறது கடையில் ரொட்டி துண்டுகளை அடுக்கி வைக்கும் கண்ணாடிப் பெட்டி. பரிதாபம் என்னவென்றால் கண்ணாடிப்பெட்டி காலி யாக இருக்கிறது. உதிர்ந்த துகள்கள் அல்லது சிறு துணுக்கு எதாவது கிடைக்குமா என்று உற்று நோக்க ஒரு சிறு எறும்பு மட்டும் ஊர்ந்து கொண்டிருக்கிறது. இப்போது அப்பசியானவனின் மனநிலை எவ்விதம் இருக்கும்? இந்த எறும்புக்காவது பசி தீர்ந்து இருக்கும், நல்லது என்கிற வகையிலா... அல்லது இதன் பசி தீர்ந்து விட்டது, என் பசி என்னாவது என்ற ஆதங்கமுடனா... உனக்கு மட்டும் வயிறு நிறைந்து விட்டதா எனும் பொறமையுடனா... அல்லது நீயும் என் போல் பசியுடன் உணவுக்கு அலைகிறாயா எனும் கருணை / நட்புடனா... வாசிப்பாளரின் மனநிலையைப் பொறுத்து பல விதத்திலும் சிந்திக்கச் செய்யும் இப்படிப்பட்ட கருத்து / செய்தி அடர்த்தியுடன் எழுதப்படும் தன்முனைக் கவிதைகளே காலத்தில் நிலைத்து நிற்கும்.

இவ்விதமாக அறிமுகமான தன்முனைக் கவிதைகள் வெகு விரைவில் கவிஞர் களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. தமிழில் எழுத்து வரையறை இல்லாமல் சொற்கள் வரையறை என்று அறிமுகம் ஆனாலும்கூட பலரும் நானிலு வடிவத்தினை ஒத்து 24 - 27 எழுத்துக்களுக்குள் எழுதி மிகவும் ஆர்வத்துடன் தன்முனைக் கவிதை குழுமத்தில் பதிவிட்டார்கள். அதன் தொடர்ச்சியாக 'தன்முனைக் கவிதை' புதியதோர் உச்சம் தொட்டது. அது என்னவென்று அடுத்த கட்டுரையில் பார்ப்போம்.




தன்முனை இயைபுக் கவிதைகள்
(முதல் நூல்)
தொகுப்பாசிரியர்
அன்புச்செல்வி சுப்பராஜ்
அன்பின் சங்கமம் வெளியீடு

46 கவிஞர்கள் எழுதிய தன்முனை இயைபுக் கவிதைகள் முதல் நூல் அருமையாக வந்துள்ளது. மூன்று அடிகள் ஹைக்கூ, நான்கு அடிகள் தன்முனைக் கவிதைகள் என்று பலரும் பல்வேறு விதங்களில் கவிதைகள் படைத்து வரும் நிலையில் தன்முனைக் கவிதைகளில் இயைபு வருமாறு எழுதுவதை அறிமுகப்படுத்தி தன்முனை இயைபுக் கவிதைகள் என்று புதிய வடிவம் அமைத்து அதற்கான ஒரு அறிமுகத் தளமாக முதல் நூலை தொகுப்பு நூலாக கொண்டு வந்துள்ள சகோதரி அன்புச்செல்வி சுப்புராஜு அவர்களுக்கு மனமார்ந்த பாராட்டுகள்.

நூலின் சிறப்பிற்குச் சிறப்பு சேர்க்கும் மணிமகுடமாக ஏறத்தாழ 12 பக்கங்களில் வாழ்த்துரை வழங்கியுள்ளார் கவிச்சுடர் கா. ந கல்யாணசுந்தரம் ஐயா அவர்கள். ஒரு நூலின் சிறப்பு அதற்கு வழங்கப்படும் வாழ்த்துரை, அணிந்துரை, விமர்சனங்களில் வெளிப்படும் என்பது கண் கூடு. அதற்கு ஐயா அவர்களின் வாழ்த்துரை ஒரு உதாரணம்

தன்முனை இயைபுக் கவிதையின் சிறப்பினை ஒரு கவிதை வடிவம் எப்படி இருக்க வேண்டும் என்று முத்தான மூன்று வாழ்த்துப்பாக்களில் வடித்துள்ளனர் கவிஞர் இளைய பாரதி கந்தகப் பூக்கள், கவிஞர் இளவல் ஹரிஹரன் மற்றும் கவிஞர் வாசன் சாவி.

ஒரு கவிதை நூல் என்பது அதன் இலக்கணத்திற்கு உட்பட்டு அமைவதே சிறப்பு. அதிலும் குறிப்பாக புத்தம்புது வடிவங்களில் கவிதைகள் எழுத வேண்டும் எனில் அதற்கான வழிமுறை, வரியமைப்பு, பொருள் அமைப்பு ஆகியவை எங்கனம் இருக்க வேண்டும் என்று கவிஞர்களும் வாசகர்களும் புரிந்துகொள்ள வேண்டும் என்ற பெரு நோக்கில் தன் நேச உரையில் அன்புச்செல்வி சுப்புராஜு அவர்கள் குறிப்பிட்டு இருப்பது அவரின் தேர்ந்த நல்லறிவையும் அவரின் பாணியையும் மற்ற கவிஞர்களை ஊக்கு விக்கும் பெருந்தன்மையையும் எடுத்துக் காட்டுகிறது. ஒரு கவிதை வடிவம் அனைவருக்கும் சென்று சேர வேண்டும் என்ற உயரிய நோக்கில் செயல்படும் பெருந்தமிழ் கவிஞர்களின் நேசமிகுப் பங்களிப்பை இந்நூலில் பதிவு செய்துள் ளார்.

பாட்டியின் பெயர் சொல்லும் பெயர்த்தி சு. பிரவந்திகாவின் தன்முனை இயைபுக் கவிதைகள் முதலாவதாக இடம் பெற்றுள்ளது சிறார் இலக்கியவானின்

செல்லம்மா பிரவந்திகா ஒரு கவிதையில்

வளரும் குழந்தைகளிடம்
வேண்டும் பணிவு
தவறை தட்டிக் கேட்பதில்
கொள்ள வேண்டும் துணிவு

என்று இன்றைய சிறார்கள் சிறந்த வழிகாட்டியாகவும் குழந்தைகளின் மன முதிர்ச்சியை வெளிப்படுத்தும் விதமாக எழுதியுள்ளார் பாராட்டுகள்.

விழுதெறியும் ஆலமரம்
பழுதறியா வேப்பமரம்
தொழுதறியும் அரசமரம்
எழுத்தறியும் தாலமரம்

கவிஞர் ம. ஞானசம்பந்தன் அந்தாதி கவிதைகளை அழகுற எழுதியுள்ளார். அதிலும் குறிப்பாக மரங்களின் வகைப் பாடுகளாக தகவாக எழுதியுள்ளார்.

விதைத்தது முளைத்தது
முளைத்தது கிளைத்தது
கிளைத்தது சளைத்தது
சளைத்தது தழைத்தது என்று

பல்வேறு வகைமையான கவிதைகளை சுவாரசியமாக எழுதி வரும் கவிஞர் வாசன் சாவி அவர்கள் இருப்பின் தகவமைப்பை அழகாக வடித்துள்ளார்

அன்னை தந்தையை
அறவே மறந்தாய்
ஆலய தெய்வங்களின்
அருளை துறந்தாய்

கவிஞர் சிவகாமசுந்தரி நாகமணி அவர்கள் அன்னை, தந்தை தான் முன்னறி தெய்வம் அவர்களை மறந்தால் இறைவனின் அருள் கிடைக்காது என்று அருமையாக எழுதியுள்ளார்

ஊதுபை வாங்கியதால்
வியாபாரி மகிழ்ந்தான்
அது ஊதி உடைபட
குழந்தையும் நெகிழ்ந்தான்

சிறு குழந்தையின் பலூன் அனுபவத்தை அழகாக கவிதையாக்கியுள்ள கவிஞர் கிருஷ்ணநாதன்

அடுத்தது மனதை தொட்ட கவிதையாக

லட்சியங்கள் பின்
ஓடினேன் அன்று
என் சுயத்தை
தேடுகிறேன் இன்று

கவிஞர் இந்துமதி அவர்கள் இன்றைய வாழ்வியலின் நிதர்சனத்தை இந்த பியர் பிரஷர்னு சொல்வதைக் குறித்து மிக அழகாக இந்த கவிதையில் எழுதியுள்ளார்.

நாட்டின் வளமை
புட்டியில் புதுமை
வீட்டில் கொடுமை
வட்டிலில் வறுமை

கவிஞர் இரா.இராஜாமணி அவர்கள் எந்த கட்சி ஆட்சிக்கு வந்தாலும் தீராத டாஸ்மாக் அவலத்தை மிக அழகாக பதிவு செய்துள்ளார்

மூலிகை வகைகளில்
எவ்வளவோ மகத்துவம்
பயனறிந்து பாவித்தால்
அவற்றிலிருக்கும் மருத்துவம்

கவிஞர் சோ ஸ்ரீதரன் அவர்கள் நம் பாரம்பரிய வாழ்வியலில் நம்மை சுற்றி உள்ள மூலிகைகள் மூலம் கை மருந்தாகவே பல நோய்கள் குணமாகியதை கவிதையாக வடித்துள்ளார் வாழ்வியல் கவிதை அருமை

மௌனமாய் இருப்பதாய்
காட்டிக் கொள்கிறார்
கண்களால் பேசியே
என்னை கொல்கிறாய்

கவிஞர் அய்ஷத் அப்சத் அவர்கள் காதலின் சிறப்பை உணர்ந்து பேசாமல் பேசும் நயனமொழியை நயமாக எழுதி யுள்ளார்.

கண்ணின் ஓரம்
கசியும் ஈரம்
காட்டும் மனதைக்
குடையும் பாரம்

கவிஞர் ஜாய் சத்யா அவர்கள் நான்கு வரிகளில் பல்வேறு விதமான பொருள் படும்படி அற்புதமாக எழுதியுள்ளார்.

மனமுவந்து செய்வோம்
உறுப்பு தானம்
மனித நேயம்
தொடட்டும் வானம்

கவிஞர் தன்ராஜ் பாப்பணன் அவர்கள் இறந்த பின்னும் வாழும் மனிதநேயம் மிக்க செயலாய் உறுப்பு தானம் இருக்கும் என்று நயம்பட எழுதியுள்ளார்.

திட்டம் தீட்டி வாழ்வாய்
தெளிவும் நிறைவும் பெற்றே
எட்டும் கனவை வெல்வாய்
என்றும் ஆழ்ந்து கற்றே

கவிஞர் முனைவர் ஒசூர் மணிமேகலை அவர்கள் ஆழ்ந்து கற்றலின் சிறப்பை, வாழ்வின் இலக்கை அடைய தெளிவான நல்லறிவும் ஆய்ந்து அறிந்து திட்டமிட்டு செய்நேர்த்தியுடன் செயல்படும் போது வெற்றி பெற முடியும் என்று கூறுகிறார்.

கண்கள் விழித்து
இமைக்கா பொழுதுகள்
அவளின் நினைவு
நேசத்தின் விழுதுகள்

கவிஞர் க.அய்யம்மாள் அவர்கள் காதலில் உறக்கம் தொலைத்தாலும் நேசமும், பாசமும் ஆலம் விழுது போல் நீளும் என்று எழுதியுள்ளார்.

ஆசை வெளிச்சத்தில்
விட்டில்கள் ஆனோம்
விடியல் வந்தப் பின்
வாழ்க்கையைக் காணோம்

கவிஞர் தங்க ஆரோக்கிய தாசன் அவர்கள் அப்படி நடக்கும், இப்படி நடக்கும்என்றுபலவிதஎதிர்பார்ப்புகளுக்கு மயங்கி விட்டில் பூச்சியாக ஆசைகளுக்கு ஆட்பட்டதால் உண்மை உணரும் போது தொலைந்து போவது வாழ்க்கை என்று எதார்த்தத்தை எழுதியுள்ளார்.

மறைந்தே விட்டன
மகரந்தச் சோலைகள்
வெப்பத்தில் உருகிடும்
நீண்ட சாலைகள்

கவிஞர் சகோதரி அமலஜெயந்தி அவர்கள் கான்கிரீட் காடுகளில் மரித்துப் போன சோலைகளை வேதனையுடன் எழுதி யுள்ளார்.

நீர் மேல் எழுத்தாய்
உலக வாழ்க்கை
நீந்தி மறுகரை அடைவதற்குள்
எத்தனை எத்தனை வேட்கை

கவிஞர் Dr. ஜலீலா முஸம்மில் அவர்கள் வாழ்க்கையில் எத்தனை ஆசைகள் எத்தனை போராட்டங்கள் செய்தாலும் யாருக்கும் இந்த உலக வாழ்க்கை நிலையானதில்லை என்று எழுதியுள்ளார்.

முள்ளிடை மலரெனக் காதல்
சட்டென மலர்ந்திடுமே
மலர்ந்ததும் கற்றதும் உற்றதும்
மற்றதும் மறைந்திடுமே

கவிஞர் க. பிரபாவதி அவர்கள் காதலின் மகோன்னதத்தை பல தடைகள் தாண்டி ஒரு நொடியில் காதல் பூத்தவுடன் மற்ற எல்லாம் கல்வி உட்பட உறவும், நட்பும் கூட மறந்து மறைந்து கொள்கின்றன என்று அழகாக எழுதியுள்ளார்.

பார்த்த சிகரங்கள்
தன்னம்பிக்கை ஊட்டும்
பயணித்த பள்ளத்தாக்குகள்
பக்குவத்தை நாட்டும்

கவிஞர் கவிநிலா மோகன் அவர்கள் இயற்கையே நம் வாழ்க்கை வழிகாட்டி யாகவும் இருப்பதை நயம்பட எழுதி யுள்ளார்.

முயற்சி இல்லை என்றால்
வாசலே தொலைதூரம்
முயன்றால் உயர்ந்த வானம்
கூட தொடு தூரம்

கவிஞர் இலாவண்யா மணிமுத்து அவர்கள் முயற்சி இல்லாதவருக்கு எதுவுமே எட்டா தூரம் ஆனால் முயற்சி இருந்தால் வானமும் தொடுதூரமே என்று தன்னம்பிக்கை வரிகள் எழுதியுள்ளார்.

மழலையின் தேன்மொழியில்
சிந்திடும் பாடல்
அலை போல் பெருகிடும்
ஆனந்தத்தின் தேடல்

கவிஞர் வித்யா கார்த்திக் அவர்கள் மழலைமொழியை விட பேரானந்தம் ஏது என்று எழுதியுள்ளார்.

இராகமும் தாளமும்
இணைந்த இன்னிசை
அதிகாலைப் பொழுதுகளில்
இசைத்திடும் குயிலிசை

கவிஞர் த.பூர்ணிமா அவர்கள் விடியற் காலை எழுவது உடல் நலனை மட்டு மல்லாமல் குயிலோசையில் மனநலமும் கூடும் என்று எழுதியுள்ளார்.

நிலவைக் காட்டி குழந்தைக்கு
அறிவுச்சோறு ஊட்டியது அன்று
அலைபேசியை காட்டி
வெளியுலகை மறக்கடித்தது இன்று

கவிஞர் லட்சுமி செந்தில் அவர்கள் இன்றைய வாழ்வியல் முரணால் பால்யம் தொலைத்த குழந்தைகள், ஆளுமை தொலைத்த பெற்றோர்கள் என்று இன்றைய நிலையை அழகாய் வடித்துள்ளார்.

காற்றின் திசையை
கண்கள் அறியாது
காலத்தின் கணக்கு
யாருக்கும் புரியாது

கவிஞர் ஜனனி குமார் அவர்கள் கண்கள் அறியா விட்டாலும் காற்று வீசுவதை மறுக்க முடியாது. அதேபோல் காலத்தின் கணக்கு புரியாவிட்டாலும் வாழ்தல் என்பது நடந்து கொண்டே இருக்கும் என்று அழுத்தமாக வடித்துள்ளார்.

குற்றமற்ற பனுவல்களை
கற்றல் வேண்டும்
வாழ்க்கையில் அந்நெறியிலே
நிற்றல் வேண்டும்

கவிஞர் கோ. பவித்ரா அவர்கள் நன்னூல்களை கற்று அந்நெறியிலேயே வாழ்தலும் நல்லது என்று கூறியுள்ளார்.

ஆசானின் உரையில்
ஊறும் கல்வியது
வாழ்வில் உயர
நடத்தும் வேள்வியது

கவிஞர் நல்லாசிரியர் சா.சையத் முகம்மது அவர்கள் கல்விச்சாலையில் ஆசியர்கள் கற்பித்தல் எனும் வேள்விதனை செப்பமுற செய்கையில் அதன் முழு பலனும் சிறந்த மாணவர்களுக்கு சென்று சேர்ந்திடும் என்பதை தெளிவாக, ஆழமாக கூறியுள்ளார்.

திறமைகள் பல இருந்தாலும்
ஆயத்தம் செய் பலமுறை
உன்னால் முடியும் சாதனையை
தொடரும் நாளைய தலைமுறை

கவிஞர் க.குணசேகரன் அவர்கள் வாழ்க்கையில் வெற்றி பெற திறமையுடன் விடாமுயற்சியும் அவசியம் என்று அழகாக எழுதியுள்ளார்.

தத்துவங்களைச் சொல்லி
சென்றார் ஓஷோ
ஹைக்கூ கவிதைகளைப்
பயில வைத்தார் பாஷோ

கவிஞர் சாந்தி சரவணன் அவர்கள் ஹைக்கூ கவிதைகளும் தத்துவம் செறிந்த வையே என்பதை அழகாக ஒப்பீடு செய்து எழுதியுள்ளார்.

அம்மாவின் கைவண்ணம்
அழகான கோலம்
நினைவுகளின் வரவில்
அது ஒரு காலம்

கவிஞர் வ.சு. வசந்தா அவர்கள் எழுதியுள்ள இந்த கவிதை நிகழ் காலத்தில் இல்லாமல் போன அம்மா வண்ணங்களில் வரைந்து வைத்த கோலத்தையோ பழைய நோட்டுப் புத்தகங்களில் வரைந்து வைத்த கோலங்களை பார்க்கையில் அம்மாவின் அருகாமை நினைவுகளில் வரும் என்பதை நெகிழ்ச்சியாக எழுதியுள்ளார்.

மனதில் மறக்க முடியாத
மகிழ்ச்சி பிறப்பு
வாழ்வில் மறுக்க இயலாத
நிகழ்ச்சி இறப்பு

கவிஞர் மு.சு.பொன்.வீட்டாத்தாள் அவர்கள் பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில் இருக்கும் வாழ்க்கையில் மறக்க முடியாத மகிழ்ச்சியும் ஒரு நாள் மறுக்க முடியாது சென்று விடும் என்று அழகாக எழுதியுள்ளார்.

உழைத்துக் களைத்த
தொழிலாளியின் உறக்கம்
அவர் மீது வரட்டுமே
கொஞ்சம் இரக்கம்

கவிஞர் இரா. சிவானந்தம் அவர்கள் மனிதனுக்கு அடிப்படை தேவைகளில் முக்கியமான உறக்கம் கூட தொழிலாளிக்கு மறுக்கப்படும் இழிநிலையை இன்றைக்கும் தொழிலாளர்கள் படும் வேதனைகளின் ஒரு துளியாய் எழுதியுள்ளார்.

உணர்வின் மொழியே
உலகின் அந்தம்
தமிழின் அழகே
தாயின் சந்தம்

கவிஞர் செல்வராஜா கிருஸ்ணகுமாரன் அவர்கள் உணர்வுகள் மொழியாய் மலர்ந்தாலும் அதன் தாய்மொழியாய் நிற்பது நம் தமிழ் மொழியே என்று அழகுற அமைத்துள்ளார்.

தட்டிக் கொடுத்தால்
தன்னம்பிக்கை கூடும்
முட்டிக் கொண்டால்
முரண்பாடு கூடும்

கவிஞர் இரா.கவிதா அவர்கள் ஒருவரை வெற்றிபெற வைக்க பாராட்டுக்களின் அவசியத்தை அழகாக எழுதியுள்ளார்.

பேதங்கள் இல்லாத
இயற்கையின் கொடை
பிரித்தாலும் மனிதனின்
செயற்கையாய் தடை

கவிஞர் நாகலட்சுமி ராஜகோபால் அவர்கள் இயற்கைக்கு முரண்பட்டு வாழ முற்பட்டதால் நாம் படும் துயரங்கள் அதிகம் என்பதை கவிதை ஆக்கியுள்ளார்

காலை உணவில் நிகழ்கிறது
சமூக மாற்றம்
காழ்ப்புணர்ச்சியில் எழுகிறது
கழிப்பறை நாற்றம்

கவிஞர் பாசி மு சாகுல் ஹமீது அவர்கள் இந்த கவிதையில் ஊடக கேவலங்களை ஊடகம் மறந்த தர்மங்களை சாடும் விதமாக எழுதியுள்ளார்

தொலைவிலிருந்த உறவுகளை
இணைத்தது தொலைபேசி
அருகிலிருக்கும் உறவுகளையும்
பிரிக்கிறது அலைபேசி

கவிஞர் உமா அவர்கள் இன்றைய வாழ்வியல் முறையை மிக அழகாக கவிதை ஆக்கியுள்ளார்

உதிர்ந்த மலர்
காம்பில் அமராது
தொலைத்த தருணம்
மீண்டும் வராது

கவிஞர் ரேவதி பிரபாகரன் அவர்கள் தனது கவிதை மூலம் இந்த கணம் மட்டுமே உண்மை இந்த கணத்தில் வாழ்தல் என்பதுதான் வாழ்தலின் பொருளே என்பதை மிக அழகாக தன் கவிதையில் எழுதி உள்ளார்

நிலவில் கால்
பதித்தான் சந்திராயன்
உலகமே உற்று நோக்கும்
தன்னிகரில்லா மந்திராயன்

சந்திர மண்டலத்திலும் கால் பதித்த உன்னத தருணத்தை அழகாக கவிதை யாக்கி உள்ளார் அன்புச்செல்வி சுப்புராஜூ அவர்கள்

அடுத்து எனக்கு மிகவும் பிடித்த கவிதை

உனக்கும் எனக்கும் இடையே
ஊடாடும் பிணக்குகள்
பிழையாகி போகும்
வாழ்வியல் கணக்குகள்

என்று மிக எளிமையாக எந்த ஒரு உறவானாலும் இருவருக்கும் இடையே ஏற்படும் பிணக்குகள் சரி செய்யப் படாவிட்டால் வாழ்க்கையே கசந்து விடும் என்பதை மிக எளிமையாக வெற்றிகரமான வாழ்வியல் சூட்சுமத்தை கவிதையாக்கியுள்ளார் அன்பு சகோதரி கவிஞர் அன்புச்செல்வி சுப்புராஜூ அவர்கள்

பல்சுவை உணர்வுகள் நிறைந்த தன்முனை இயைபுக் கவிதைகள் தொகுப்பு நூல் மிகவும் அருமையாக வந்துள்ளது. இந்நூலில் இடம்பெற்றுள்ள அனைத்து கவிஞர்களும் மென்மேலும் தங்கள் படைப்புகளைத் தொடர்ந்து வெளியிட மனம் நிறைந்த வாழ்த்துகள் .

நூல் விமர்சனம் :
**கவிஞர் மா.சாந்தாதேவி**
அக்குயோகா மருத்துவர் &
பாரம்பரிய வாழ்வியல் பயிற்றுநர்,
சென்னை




# கண்சிமிட்டும் பூக்கள்

இளையதீபன் மகாலிங்கம்

## நூல்விமர்சனம்

கண், காது, நாக்கு, மூக்கு, தோல் என்ற ஐம்பொறிகளில் கண்ணுக்கு மட்டும் முதலிடம் எப்போதும் உண்டு. மற்ற உறுப்புகளில் குறைகள் இருப்பினும் அவை பெரிய பாதிப்பைத் தருமென்று இந்த உலகம் எடுத்துக் கொள்ளாது. ஆனால் கண் என்பது மிக முக்கியமான உறுப்பாகவே கருதப்படுகிறது. அத்தகைய கண் பெரும்பாலும் எல்லா உயிர்களிடத்தும் இருக்கும். அந்தக் கண் பார்க்கும் செயலை மட்டும் செய்வதோடு நின்றுவிடுவதில்லை. நம் உணர்ச்சிகளை எதிரே உள்ளவர்களிடம் காட்டும் கண்ணாடியாகவும் கண்ணே அமைந்துள்ளது. கோபம், கருணை, அன்பு, வெறுப்பு, பாசம் மட்டுமின்றிக் காதலைக் காட்டும் அற்புதத்தையும் செய்கிறது.

''கண்ணாலே பேசிப் பேசிக் கொல்லாதே'' என்பார் தஞ்சை இராமையாதாஸ். “கண்ணே கலைமானே” என்பார் கவியரசு கண்ணதாசன். கண்கள் இமைத்தல் என்பது ஒரு சாதாரண செயல். கண்ணைச் சிமிட்டுதல் என்பது செயற்கையாகக் கண்ணை இமைத்தலாகும். சிறு குழந்தைகள் அப்பாவியாக நம்மைப் பார்த்து கண்களை அடிக்கடி மூடித்திறந்தால் அழகாக இருக்கும். இதுவே கண்ணைச் சிமிட்டுதல் ஆகும். கண்கள் உள்ளோர் சிமிட்டலாம். இல்லாதோர் எங்ஙனம் சிமிட்ட இயலும்? இங்கே இளையதீபன் பூக்கள் கண்களைச் சிமிட்டுகின்றன என்கிறார். கண்சிமிட்டும் பூக்கள் என்ற நூலை அழகாகப் படைத்துள்ளார்

பூக்கள் இந்த உலகத்தில் இறைவனால் படைக்கப்பட்ட அற்புதமான படைப்புகள். தாவரங்கள் இந்த உலகத்தில் பல்கிப் பெருகக் காரணமாக இருப்பவை பூக்களே. பூக்களில் மகரந்தச் சேர்க்கை நடைபெறக் காரணமாக இருக்கும் வண்ணத்துப் பூச்சிகளையும் வண்டுகளையும் தன் பக்கம் ஈர்க்கும்பொருட்டு பூக்கள் பலவண்ணங்களில் இருப்பதுண்டு. அவ்வண்ணங்களின் மேல் கொண்ட ஈர்ப்பால் பூச்சிகள் அவற்றை நோக்கிச் செல்லும். இதனையே பூக்கள் கண்சிமிட்டுகின்றன எனக் கொள்ளலாம். இங்கே இளையதீபன் நம்மைப் பார்த்துக் கண்சிமிட்டுகிறார். எதற்காகக் கண்சிமிட்டுகிறார்? பார்ப்போம்.

அட்டையில் கண்சிமிட்டும் பூக்கள் எனத் தலைப்பிட்டு ஒரு சிறுமியின் படத்தையும் ஒரு வண்ணத்துப்பூச்சியின் படத்தையும் போட்டுள்ளார். இங்கே சிறுமியே பூ வாக மாறி வண்ணத்துப் பூச்சியைப் பார்த்துக் கண்சிமிட்டுகிறாள். இளையதீபன்மகாலிங்கம்அவர்கள்அறுபது வயதை எட்டியுள்ளதை நினைவூட்டும் விதமாகவும் கொண்டாடும் விதமாகவும் அறுபது குறுங்கவிதைகளை எழுதி அவற்றை இந்நூலில் கொடுத்துள்ளார். சிறந்த மரபுக் கவிஞர்; தமிழ்ப்புலவர்; புதுக்கவிதையின் யுத்திகள் தெரிந்தவர். மேடையில் கவி தையை அழகாக வெளிப்படுத்தும் திறன் கொண்டவர். ஆன்மிகச் சொற்பொழி வாளர்; சைவசமயத்தின் கூறுகளை அழகாக எடுத்துரைக்கும் ஞானம் கொண்டவர். திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்த மான நூல்களைப் பதிப்பிக்கும் பணிகளைச் செவ்வனே செய்பவர். அவருடைய இன்னொரு மனத்தை வெளிக்காட்டும் கண்ணாடியாக இந்நூல் அமைந்துள்ளது.

அற்புதமாக எழுதப்பட்ட அறுபது குறுங்கவிதைகள்; படிக்கும்போதே நம் மனத்துள் வந்து அமர்ந்து கொள்கின்றன.

“கடைசி வரை
அளந்தறிய முடியாமலேயே
கடந்து விடுகின்றன
நமக்கான உறவுகள்”

இப்படித்தான் முதல்கவிதையே கடைசி என்று தொடங்குகிறது. அருமை யான தத்துவத்தைக் காட்டுகிறது. யதார்த்தமான வாழ்க்கை உண்மை. சாகும்வரை அனுபவமே வாழ்க்கையாகக் கடந்துசெல்வதைக் காட்டும் கவிதை.

வெற்றி என்பது சிலருக்கு எளிதில் வரும். சிலருக்கு முயன்று பெற்றால்தான் வரும். தேனைக் கடையிலும் வாங்கலாம். மலைமீது ஏறியும் பெறலாம். முன்னதும் இனிக்கும்; பின்னதும் இனிக்கும் என்றா லும் சற்றுக் கூடுதல் சுவை நாமே மலைமீது ஏறிப் பெறும் தேனுக்குண்டு. இதையே கவிஞர்

“முயன்று பெற்ற
வெற்றிக் கனிக்கே
சுவை அதிகம்” என்கிறார்.

மனிதனாக இருப்பதென்பது எல்லாரா லும் இயலாது. சிலர் சிங்கமாகவும் சிலர் யானையாகவும், சிலர் மானாகவும் இருப்பர். ஒருசிலர் மட்டுமே மனிதனாக இருப்பர். இந்த மனிதப்பண்புகள் தானாக வருவதில்லை. ஒவ்வொருவருடைய குடும்பச்சூழல் வளரும் சூழல் பணி யாற்றும் இடம் நண்பர்கள் இவையனைத் தையும் வைத்தே மனிதனின் குணம் தீர்மானிக்கப்படுகிறது என்பதை

“மனிதப் பண்புகள்
பட்டை தீட்டும் பட்டறை
குடும்பம்” என்ற கவிதை காட்டுகிறது.

இக்கால இளைஞர்கள் வேண்டாத பண்புகளை விரைந்து கற்பதையும் தொலைக் காட்சித்தொடர்கள நம்நேரத் தைத் தின்பதையும் நூல்களின் சிறப்பு பற்றியும் பட்டாசு, நதிகள், கவிதைகள் என்று இளையதீபனாரின் உள்ளம் சிற கடித்துப் பறக்கின்றன..

All that glitters is not gol எனும் ஆங்கிலத் தொடரை மொழிபெயர்த்தாற்போல்

“மெய்ம்மையின் வெளிச்சம்
வெளிப்படாத வரை
பொய்கள்
மினுமினுக்கவே செய்யும்’’ என்ற கவிதை காணப்படுகிறது.

# வளர்த்தவர்கள்

நாங்கள் நாய் வளர்த்தோம்
அது குரைப்பது இரவில்
தங்களுக்கு தொந்தரவென்றுக்
குரையோ குரையெனக் குரைத்தார்கள்

நாங்கள் மயில் வளர்த்தோம்
அதன் அகவல் தங்களை
அச்சுறுத்துவதாகக் கூறி
ஆட்டமாய் ஆடினார்கள்

நாங்கள் நரி வளர்த்தோம்
தந்திரமாக அதை எங்கள்
வீட்டை விட்டே ஓட வைத்தார்கள்.

நாங்கள் பூனை வளர்த்தோம்
தங்கள் வீட்டு எலிகளின்
வலிபற்றி ஜீவகாருண்ய
பாடம் நடத்தினார்கள்.

நாங்கள் பசு வளர்த்தோம்
அது கொசு உற்பத்தி செய்வதாக
குற்றம் சுமத்தினார்கள்

நாங்கள் கோழி வளர்த்தோம்
அவர்கள் வீட்டைச்சுற்றி
பாம்புகள் உலவுவதாகக் கூறி
உபத்திரவம் செய்தார்கள்.

இப்படியே எல்லாவற்றிற்கும்
தடைபோட்டு எங்களில்
ஆத்திரம் வளர்க்கத் தூண்டினார்கள்
ஆனால் நாங்களோ
எங்களால் ஆன பொறுமையை மட்டும்
தளராமல் வளர்த்தோம்

துண்டிக்க முடியாத
எங்கள் பொறுமையின்
வளர்ச்சியைத் தடை செய்ய முடியாமல்
இப்போது அவர்கள் எங்கள் மேல்
பொறாமையை வளர்க்கிறார்கள்

**மெய்யன் நடராஜ்**

"குட்டக் குட்டக்
குனியும் சாதி ..!
நானல்ல என்கிறது வெட்ட வெட்ட
முளைக்கும் நகம்" நல்ல சிந்தனை.

இவ்வாறு நிறைய கவிதைகள் வாழ்க்கைத் தத்துவத்தைக் கடத்துவன வாகவும் தன்னம்பிக்கையை வளர்ப்பவனவாகவும் உள்ளன. மாணவர்கள் இளைஞர்கள் முதியோர் என அனைவரையும் கவரும் வண்ணம் நெஞ்சில் பதியும்வண்ணம் கவிதைகள் உள்ளன என்பதே இந்நூலின் சிறப்பு.

அதற்குள் அகவை அறுபதாகிவிட்டதா என்று நாம் ஆச்சர்யப்பட வேண்டியுள்ளது கவிதை இருபதிலேயேதான் உள்ளது. எவ்வளவு வயதானாலும் கவிஞர்களுக்கு மனம் இளமையாகவே இருக்கும் என்பதற்கு இக் கவிதைகளே சாட்சியாக நிற்கின்றன.

"தேனும் பாலுமாய்
திகட்டாத் திரவியமாய்
அள்ளக் குறையாத
அட்சயப் பாத்திரமாய் ...
ஏடுகளில் எழுச்சி மிகு இலக்கியங்கள்
ஏனோ மனம்
அதன் பக்கம் செல்ல மறுக்கிறது" என கவிதை இலக்கியங்கள் மட்டுமல்ல. இந்தக் கவிதைநூலைப் படிக்காமல் செல்பவர்கள் மனமும் இதற்குப் பொருந்தும்.

இதுபோல் நிறைய நூல்களை எழுதிச் சிறப்புறத் தமிழ்நெஞ்சம் வாழ்த்துகிறது

## ஔவையின் நல்வழியும் தன்முனை இயைபுக்கவிதைகளும்

**வெண்பா – 1**

சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் – மேதினியில்
இட்டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ள படி . *(பாடல் 2)*

**பொருள்:** *பிறப்பினால் சாதியில்லை. இல்லாதவர்களுக்கு உதவுவோர் உயர்ந்த சாதியாக இருந்தும் யாருக்கும் உதவாதவர்கள் தாழ்ந்த சாதி என குணத்தால் இரண்டு சாதிகள் மட்டுமே உள்ளன.*

**தன்முனை இயைபுக்கவிதை**

> **இருப்பதோ உலகிலே**
> **இருவகை குலங்கள்**
> **அளிப்போர் உயர்குலம் ,**
> **மறுப்போர் இழிகுலம்**

**வெண்பா – 2**

ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே – ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்(கு) ஒப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு! *(பாடல் 12)*

**பொருள்**

*உழுது பயிர் செய்தலே உலகில் உயர்வான தொழிலாகும். உரிமை உடைய தொழில். அரசாட்சி போன்ற பிறபணிகள் கூட உரிமையற்றவையே! குற்றமும் வரலாம்!*

**தன்முனை இயைபுக்கவிதை.**

> **உழுதே பயிர்செய்தால்**
> **உரிமையோடு வாழலாம்!**
> **அரசாளும் பணியிலும்**
> **அவலங்கள் நேரலாம்!**

**வெண்பா – 3**

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைக்கும்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் – கூடுவிட்டிங்கு
ஆவி போயினபின் யாரே அனுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம் *(பாடல் 22)*

**பொருள்:** *உடல் உழைத்தும் உண்ணாமலும் ஏழைக்குக் கொடுத்தாமலும் சேர்த்துவைத்த பணம், இறந்தபிறகு யாரோதான் பயன்படுத்துவார்! இருக்கும் போதே அறம் செய்க!*

**தன்முனை இயையுக்கவிதை.**

> **வருந்தி உழைத்த பணம்,**
> **வரியோர்க்கு ஈயாப் பணம்**
> **இறந்து படுத்த பின்னால்**
> **யாரிடமோ சேரும் பணம்**

**வெண்பா – 4**

ஆறிடும் மேடும் மடுவும்போல் ஆஞ்செல்வம்
மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர் – சோறிடும்
தண்ணீரும் வாரும் தருமமே சார்பாக,
உண்ணீர்மை வீறும் உயர்ந்து *(பாடல் 32)*

**பொருள்**

*ஆற்று வெள்ளத்தினால் மேடும் பள்ளமாக மாறலாம், அது போல செல்வம் உயரலாம், குறையலாம், ஆதலால் வருந்தி வந்தோர்க்கு சோறிடுங்கள், நீர் கொடுங்கள். மனம் நிறைவடையக் காண்பீர்கள்!*

**தன்முனை இயைபுக் கவிதை**

> **பள்ளமும் மேடும்,**
> **வெள்ளத்தால் மாற்றம்**
> **இல்லார்க்குச் சோறிடல்,**
> **இன்பத்தின் தோற்றம்,**

**திருமதி இரா.இராஜாமணி**
ஈரோடு.



# உளி பேசும் மொழி

12

**நெல்லை க. சோமசுந்தரி**
(கவிஞர், எழுத்தாளர் & தொல்லியல் ஆர்வலர்),
சென்னை, தமிழ்நாடு

'அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல' என்ற வள்ளுவன் வாக்கிற்கேற்ப நிலம் ஆனது, தன்னை பிளந்து வெட்டி எடுப்பவர்க்கும் நன்மையே வழங்குகிறது. அதன் தன்மையானது பொறுமையுடன் இருப்பது மட்டுமின்றி தன்னை நிந்திப்ப வரையும் பாதுகாக்கிறது. அதாவது, இப் புவியில்வாழும்ஒவ்வொருஉயிரினங்களும் தன்னைக் காலநிலை மற்றும் பருவ நிலைகளான வெப்பம், குளிர், காற்று மற்றும் மழை போன்ற இயற்கையின் சீற்றங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ள ஒரு உறைவிடத்தைச் சார்ந்திருக்கிறது. அவ்வகையில் மனித இனமானது தனது உறைவிடத்தை அமைப்பதற்கு மட்டு மின்றி வாழ்வதற்கு மிக அவசியத் தேவைக்கும் நிலத்தைத் தோண்டி அதன் மேலே பல அடுக்குகளில் கட்டிடங்களை அமைக்கிறான். தன்னைத் தோண்டிக் காயப்படுத்தினாலும் நிலமானது அவனைப் பாதுகாக்கிறது.

மேலும் மனித ஜீவராசிகள் வாழ்வ தற்குத் தேவையான உணவினை உருவாக் குவதற்கு மண்ணைக் கீறி விதையானது விதைக்கப்படுகிறது. அந்நிலையிலும் நிலமானது விதைக்கு உயிர் கொடுப்பது மட்டுமின்றி அவை செடியாக வளர்ந்து விருட்சமாக உருவெடுத்து அனைத்து புவி வாழ் உயிரினங்களுக்கும் உணவினை நல்குவதற்குத்துணைபுரிகிறது. அவ்வழியே இப்பூமிப் பந்தின் உயிர்ப்பு நிலையைத் தொடர்ந்து பேணிப் பாதுகாக்கிறது. இந்தப் பெருமைமிகு சிறப்பினாலேயே நிலமானது உயிரினங்கள் அனைத்திற்கும் இன்றியமையாத பஞ்சபூதங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

பஞ்ச பூதங்களில் ஒன்றான நிலத்தினை உருவாக்கி பல நூற்றாண்டுகளுக்கு முன், நம் தமிழகத்தில் உள்ள பழம்பெருமை வாய்ந்த நகரங்களில் ஒன்றான



காஞ்சிபுரத்தில் ஒரு ஆலயமானது எழுப்பப்பட்டுள்ளது. காஞ்சி நகரமே கோயில் களின் நகரம் என்ற சிறப்பைப் பெற்றது. இந்நகரத்தில் நூற்றுக்கணக்கான ஆலயங்கள் அமையப்பெற்றுள்ளது என்பது நகரத்தின் தனிச்சிறப்பு ஆகும். இங்கு அமைந்துள்ள ஒவ்வொரு ஆலயமும் கலை நயமிக்க சிற்பங்களுடன் மிக நேர்த்தியான கட்டிடக் கலையுடன் கட்டப்பட்டுள்ளது.

காஞ்சி நகரம் என்றதும் நம் அனைவருக்கும் நினைவில் வருவது பட்டாடைகள். காலம் தொன்று தொட்டு காஞ்சிப் பட்டாடைகள் பல நாடுகளால் போற்றப்படுகிறது. அதன் சிறப்பானது கடல் கடந்தும் பேசப்படுகிறது. பட்டு நெசவினில் மிகவும் சிறப்பு வாய்ந்தது பட்டுப்புடவைகள். ஒவ்வொரு பட்டுப் புடவையும் கலை நயமிக்க அழகியல்களுடன் படைக்கப் படுகிறது. அது இன்றும் காலத்திற்கேற்ற நாகரீக மாற்றங்களுடன் இணைந்து கலையின் தாக்கம் மேலும் சிறக்கும் படி



நெய்யப்படுகிறது. அவ்வகையில் காஞ்சி நகரமானது பண்டைய காலந்தொட்டு இன்றளவும் கலைகளின் கூடாரமாகவேத் திகழ்கிறது. இந்நகரத்தைச் சுற்றியுள்ள பகுதியில் சிற்பக்கூடங்களும், கலையில் சிறந்த சிற்பங்களை வடிக்கக்கூடிய தலை சிறந்த சிற்பிகளும் நிறைந்து காணப்படுகிறார்கள். இந்த சிற்பிகளின் முன்னோர்களுக்கு முன்னோர்களே பல நூற்றாண்டுகளுக்கு முன் பல கலைப் பொக்கிஷமான ஆலயங்களைக் கலை நுணுக்கத்துடன் அமைத்துள்ளனர்.

பண்டைய காலங்களில் நகரங் களானது ஆலயங்களைப் பற்றியே அமையப் பெற்றுள்ளது. ஆனால் காஞ்சிபுரத்தின் சிறப்பானது நகர் முழுமையும் ஆலயங்களில் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆலயமும் வெவ்வேறு காலகட்டங்களில் ஏறத்தாழ நூற்றாண்டுகளுக்கு இடைவெளியில் கட்டப்பட்டதாக இருப்பினும் ஒவ்வொரு ஆலயத்தின் கட்டிடக் கலையிலுள்ள அமைப்பு மற்றும் தெய்வச் சிற்பங்களின் அமைப்பு அனைத்தும் ஒரே விதமான அடிப்படை ஆலயக் கட்டிட விதிகளை பின்பற்றி கட்டப்பட்டுள்ளது. இன்றுள்ள பல தொழில்நுட்ப வசதிகள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு இல்லை என்பது நாம் அனைவரும் அறிந்ததே. அங்ஙனம் அக்கலையின் நுணுக்கமானது அடுத்தடுத்து தலைமுறையினருக்குச் சரியான விதத்தில் கடத்தப்பட்டுள்ளதை நம்மால் அறிய முடிகிறது. மேலும் அவ்வாறு கொண்டுச் செல்லப்பட்ட கலையின் அறிவானது, தகுந்த முறையில் உள்வாங்கி உணர்ந்து அந்தந்த காலகட்டங்களில் வாழ்ந்த இளைய தலைமுறை கற்றதனாலேயே இது சாத்தியமாயிருக்கும். ஏனெனில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் பல அடுக்கு மாடங்களைக் கொண்டு மிகப் பிரம்மாண்டமான மற்றும் எழில் மிகு சிற்பங்களுடன் கூடிய கோபுர வாயில்களை அமைப்பது என்பது எவ்வளவு கடினமானப் பணி என்பதனை நம்மால் உணர முடியும். இப்பணியானது எந்தவிதமான நூல்களைப் படித்து அறிந்து கொண்டுகட்டமைக்கப்படவில்லை. தனது முந்தைய தலைமுறையினரிடமிருந்து செவி வழியாகவோ அல்லது கட்டிடக்கலையின் நுட்பங்களை அவை கட்டப்படும் போது அருகிலிருந்து கவனித்து உணர்ந்த தனாலேயே கற்ற அறிவாகும்.



அவ்வகையில் அக்கால மனிதர்களின் கட்டிடக் கலைக்கும், சிற்ப கலைக்கும், கலை அழகியலுக்கும் கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தை நம்மால் இதன் மூலம் அறிய முடியும். அதன் வழியே, அக்கால மன்னர்கள் மற்றும் அன்று வாழ்ந்த மக்களின் கலையுணர்வை வெளிப்படுத்தும் விதமாகவே காஞ்சிபுரத்தின் அனைத்துப் பகுதிகளுமே ஆலயங்களின் அணிவரிசையாக வீற்றிருப்பதைக் கொண்டு நம்மால் உணர முடியும்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த கோயில்களின் நகரத்தின் மணிமகுடமாக விளங்கும் மற்றும் பஞ்சபூதத் தலங்களுள் ஒன்றாக திகழும் ஏகாம்பரேஸ்வரர் ஆலயத்தினைப் பற்றியும் அதன் சிறப்புகளைப் பற்றியும் நாம் அறிய உள்ளோம். அதனைத் தொடர்ந்து அறிந்து கொள்ள உளி பேசும் மொழியுடன் தொடருங்கள்.

- உளியின் மொழி தொடரும்.



மிக அருமையான கட்டுரை. சிதம்பர இரகசியம் குறித்த அற்புதமான விளக்கம். துவக்கத்தில் இரகசியம் என்பது என்ன எனும் கருத்துடன்! அலைகள் போல் அடுக்கடுக்காய் எத்தனை தகவல்கள்! அத்தனையும் நேர்த்தியான முறையில் கோர்த்த. அரிய படங்களுடன் உளி பேசும் மொழி எனும் அழகான தலைப்பு முகப்புப் பதக்கமாய் ஒளிரும் நாமக்கல் மணி மாலை உங்கள்இக் கட்டுரை! உங்களைப் போன்றே அழகு! நெஞ்சு நிறைப் பாராட்டுகள் தோழி

சாந்தாதத்

# நடிகர்கள்



சிரிக்கின்றார் நண்பராக திருந்திடாது நடிக்கின்றார்
அரக்கமனம் படைத்தவராம் அடிக்கடியே குணம் மாறி
தரத்தினிலே குறைந்திடுவார் தடம்மாறும் இதயத்தார்
கரம்கொடுப்பார் போன்றவராய்க் கழுத்தறுப்பார்... தீயவராம்

புறம்கூறி முதுகுக்குப் புறத்தாலே பேசிடுவார்
அறமற்றச் செயலதுவை ஆங்கவரும் செய்திடுவார்
குறைகூறி மனம்கெடுப்பார் கூடியிருப்பார்... இவரென்றும்
கறையான உள்ளமதைக் கடுகளவும் குறைத்திடாரே

கள்ளமொழி பேசிடுவார் கனிவுடனே அவர்நடப்பார்
துள்ளிடுவார் துடிதுடிப்பார் தூண்போல அவர்நெஞ்சம்
முள்ளெனவே தைத்திடுவார் முகமதுவோ சிரித்திடுமே
தள்ளிடுவோம் தரமில்லா அவர்நட்பை நகர்ந்திடுவோம்.

தென்றல் கவி ( தமிழ்ச்சிட்டு )



# பெண்ணுடல் வதை

முதலில் சமூக மட்டத்தில் பெண்ணுடல் தொடக்கம் பெண்ணின கற்புகள் புனிதப்பொருளாக காட்சிப் படுத்தப்பட்ட மடைமை சித்தாந்தம் தகர்த்தெறியப்படுமானால் இனம், மதம், மொழி மற்றும் மேலாதிக்க மேட்டுக்குடி தனத்தின் மூலமான பெண்ணடிமை அடக்குமுறைமை ஒழிக்கப்படலாமோ என்னமோ???

பெண்ணுடல் மதத்தினும் இனத்தினும் இன்னும் சமூகத்தினதும் புனித பாண்டம் என்ற சிந்தனை வறட்சிக் கண்ணோட்டத்தின் விளைவுதான் ஒரு சமூகத்தின் அல்லது ஒரு தரப்பாரின் பெண்ணுடலை அசிங்கமாக துன்புறுத்தி அச்சமூகத்தை அவமானப்படுத்தியதான கௌரவ இழுக்கை உண்டாக்கிய மமதை மேலிடத் தொடங்குகின்றது.

வரலாற்றின் நெடுகிலும் குறிப்பாக யுத்தங்களில் இந்த பெண்வதைக் கலாசாரம் தொடர்ந்து வந்துள்ளது. இந்த கலாசாரம் உண்மையில் ஆணாதிக்க அடக்குமுறையை சார்ந்த உளவியல் மற்றும் உடலியல் பண்பென்ற அறிவாண்மையை எமது சமூகதின் பொதுப்புத்தி ஆமோதிப்பு ஏற்க மறுப்பதுதான் வேடிக்கை.

யுத்தக்களிப்பு தொடக்கம் பழிவாங்கல் பிடிவாத மனோவியல் வரை; எச்சங்களாக எஞ்சி இருப்பது பெண்ணுடல் வதையின் மீதங்கள் மட்டுமே. நாகரீக வளர்ச்சியில் ஆடை கலாசாரத்தின் விளைவு ஆண், பெண் பாலினத்தின் பாலியல் உறுப்பின் மூடுதல் மீதான பேர்ராட்சத தோற்ற விம்பத்தை சமூக அரங்கில் உண்டாக்கி பல்காலமாகிட்டு. பெண்ணுடல் கொண்ட நவீன வியாபார விளம்பரங்களும், சினிமா பார்வையும் பெண்ணை ஒரு உற்பத்திப் பண்டமாக காண்பிக்க விளைவு பெரிய வெற்றியை வணிக ரீதியாக முதலாளித்துவ சிந்தனைக்கு அளித்துள்ளதை யாரும் மறுக்க முடியாது.

குறிப்பாக பெண்ணை நிர்வாணப் படுத்துதல் என்பதுதான் தற்கால முற்போக்கு சிந்தனை என்ற அடிமட்ட சிந்தனை வறட்சியின் விளைவு பெண் குழந்தை தொடக்கம் கிழவிகள் வரை ஆபாச கண்ணோட்டத்தில் ஆண்களின் பார்வையை மழுங்கடித்துள்ளது. இதன் பாரதூரமான விளைவுகளை சமகால உலகில் அன்றாடம் நாம் எதிர்கொண்ட வண்ணமே உள்ளோம்.

புவியின் சக விலங்குகள் போல் மனிதனும் ஆடையணியா தோலுடல் தேகத்தோடு வாழப்பழகி இருந்து இருந்தால் ஒருவேளை ஆணாதிக்கமாகவும் அவமானத்தின் சின்னமாகவும் கருதப்படும் பெண்ணுடல் வதை கலாசாரம் இல்லாமல் இருந்திருக்குமோ????

**என் ஆஷா பாலின்**

# வாமனப்பிஞ்சுகள்

தமிழ் இலக்கிய உலகில் தமிழைப் படித்து முன்னேறிய நண்பர்களைவிட மற்ற பாடங்களைக் கற்றுத்தேறியவர்களே ஆள்கிறார்கள் என்பதை மெய்ப்பிக்கும் விதமாக ஒரு பொறியாளரின் கவிதை நூல் ஒன்று விமர்சனத்திற்காக வந்தது.. பெயர் என்னவோ வாமனப் பிஞ்சுகள்; வாமனத்தனம் இல்லை. அழகான நூறு கவிதைகள் வெவ்வேறு தலைப்புகளில் சிறகுவிரித்துச் சிரிக்கின்றன. பல கவிதை கள் யதார்த்தமான கவிதைகள்; சில கவிதைகள் சுருக்கென்று நெஞ்சைத் துளைக்க வேறு சில கவிதைகள் தென்றல் போல நம்மைத் தழுவிச் செல்கின்றன. தெரிந்த தலைப்புகளேயானாலும் சலிப்பு தட்டவில்லை.

தன்னலமற்ற தொண்டால் இந்தியா வில் உயர்ந்து நோபல் பரிசு பெற்ற வெளிநாட்டு அம்மையார் தெரசா அவர் களுடைய பிறந்தநாளையும் நாம் காந்தி ஜெயந்தி போல் கொண்டாட வேண்டும் என்ற கவிஞரினுடைய எண்ணம் அவரது கவிதையில் இவ்வாறு

கிருட்டிணன் செயந்தி
காந்தி செயந்தி போல்
அவசியம் வேண்டும்
தெரசா செயந்தி.

பொதுவாகத்தினமும்பேருந்துகளிலோ அல்லது தொடர்வண்டியிலோ வேலைக்கு செல்லக் கூடியவர்கள் சாலை ஓரங்களில் வேடிக்கை பார்த்துக் கொண்டே செல்லும் பொழுது பலவிதமான எண்ண ஓட்டங்கள் அவர்களுக்குள்ளே வந்து செல்வதை தவிர்க்க இயலாது. அவ்வாறு செல்லும் பொழுது நமக்கு பல கவிதைகள், கதைக்கருக்கள் கிடைக்கும். ஆனால் அவற்றையெல்லாம் நாம் கவிதையாகவோ கதையாகவோ மாற்றுவது என்பது சற்றே சிரமமான விடயம்தான் . அதனைத் தமது கவிதையிலே மிக அழகாக கவிஞர்,

"சாலையைப் படித்தபடியே
பயணிக்கிறது மனசு
அலுவல் நோக்கியே காலை நேரத்தை"

என்று காட்டுகிறார்.

வாழ்க்கையில் ஆணும் பெண்ணும் இணைந்து பயணித்துக் கொண்டிருக்கும் பொழுது இருவரில் ஒருவர் பிரிந்து சென்றால் அது மிகவும் கடினமான விடயமாக மற்றொரு வருக்கு இருக்கும் என்பது எதார்த்தமான உண்மை. பெரும்பாலும் ஆணை இழந்த பெண் வாழ்க்கையை எதிர்கொண்டு செல்வது சுலபமாக இருக்கின்ற அதே நேரத்தில் பெண்ணை இழந்த ஆண் அந்த வாழ்க்கையை மிகச் சுலபமாக எடுத்துச் செல்ல இயலாது என்பதனை மிக அழகாக தனது கவிதையில் அம்மாவை இழந்த அப்பா மாற்றுத்திறனாளி ஆனார் என்று குறிப்பிடுகின்றார்.



"அம்மா இறந்தபிறகு மனதளவில்
மாற்றுத் திறனாளியாகிப் போன அப்பா"

அரசு பள்ளிகளின் உடைய நிலைமையை மிக அழகாகக் தனது கவிதைகளில் காட்டுகின்றார். அரசுப் பள்ளியிலே பணியாற்றக்கூடிய ஆசிரியர்களுக்கு மிக அதிகமான ஊதியம் வழங்கப்படுகிற அதே நேரத்தில் தனியார் பள்ளிகளில் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் ஊதி யம் குறைவு. தனியார்பள்ளிகளில்மாணவர்கள் கல்வி பயில்வதற்கான வசதிகள் நிரம்பி இருக்கக்கூடிய அதே நேரத்தில் அரசுப் பள்ளிகளில் அந்த வசதி சற்று குறைவு என்பதுதான் உண்மை. அரசுப் பள்ளிகளைப் பராமரிப்பது பொதுப்பணித் துறையின் கடமை என்பதால் பல இடங்களில் அந்தப் பராமரிப்புப் பணிகள் நடைபெறுவது இல்லை. தலைமை ஆசிரியர்களே அந்த ஊரில் இருக்கக்கூடிய ஊராட்சி மன்ற தலைவரை அணுகி ஒரு சில பணிகளை முன்னெடுத்துச் செல்வது ஆங்காங்கே நடைபெறுகிறது. எனினும் பெரும்பாலான பள்ளிகள் வசதிக்குறைவுடன் இருப்பதை நாம் காண முடிகிறது. ஆனாலும் கல்வி தரத்தில் ஒருபோதும் அவர்கள் குறைந்தவர்கள் இல்லை என்பதை அங்கிருந்து வெளியே வரக்கூடிய மாணவர்களின் நிலை காட்டுகிறது. இன்று பெரிய பணியில் இருக்கக்கூடிய அதிகாரிகள் எல்லாம் முன்னொரு காலத்தில் அரசு பள்ளியிலேயே படித்தவர்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும் என்பதை இவருடைய இந்த கவிதை காட்டுகிறது.

உலகத்தரமிக்க ஆளுமைகளை
உற்பத்தி செய்துகொண்டே
இருக்கின்றன
வலுவான வசதியற்று
மரத்தடியில் இயங்குகின்ற
அரசுப் பள்ளிகள்

கடவுள் மறுப்பு கொள்கை என்பது நாம் வாழும் காலத்திலேயே கடவுளை உணர முடியவில்லை என்பதற்காக அந்த மறுப்பாளர்கள் சொல்லக்கூடிய கொள்கையாகும். மிக நீண்ட காலமாக இருக்கக்கூடிய ஒரு நம்பிக்கையை நாம் வாழும் காலத்திலேயே அது இல்லை என்று நாம் நிரூபித்து விட முடியாது என்பதை உணராதவர்கள் கடவுள் என்ற கொள்கை, கடவுள் என்ற ஒன்று இல்லை என்று சொல்லி வருகிறார்கள். ஆனால் கடவுள் உண்டு என்று சொல்பவர்களுக்கு அதனை நிரூபிக்க வேண்டிய அவசியம் ஒருபோதும் இல்லை. ஏனெனில் அது ஒரு நம்பிக்கை; எனினும் இந்தக் கவிஞர் கடவுள் இருப்பதையும் கூட ஒரு நேரத்தில் விஞ்ஞானிகள் நிரூபிக்க இயலும் என்பதை தனது கவிதையில் குறிப்பிடுகின்றார். அணு என்பதை ஆக்கவும் முடியாது அழிக்கவும் முடியாது என்று ஒரு விஞ்ஞானி கூறிய பொழுது அவருக்கு நோபல் பரிசு கிடைத்தது. அதே நேரத்தில் அணுவை உடைக்க முடியும் அதிலிருந்து சக்தியைப் பெற முடியும் என்று இன்னொரு விஞ்ஞானி நிரூபித்த பொழுது அவருக்கும் நோபல் பரிசு கிடைத்தது. ஒன்று இல்லை என்பதை முடியும் என்று நிரூபிக்கப்படும் பொழுது அது அங்கீகரிக்கப்படுகிறது. அதைப்போலவே கடவுள் உண்டு என்பதையும் ஒரு காலத்தில் நிரூபிக்க இயலும் என்பதன்மேல் அசைக்க முடியாத நம்பிக்கையை இந்தக் கவிஞர் வைத்துள்ளார் என்பதை அவருடைய இந்த கவிதை காட்டுகிறது.

ஒருவேளை
வருங்கால விஞ்ஞானத்திற்கு
சாத்தியமாகலாம்
கடவுளின் புற இருப்பு
நிச்சயமாகலாம்.

உலகில் உள்ள எல்லா மரங்களும்

பயனுள்ள மரங்கள் என்று சொல்லி விட முடியாது. ஒரு சில மரங்கள் அவற்றினுடைய அனைத்து பாகங்களை யும் பயன்படுத்தும் விதமாக அமைந்து விடுகிறது. தென்னை மரம் பனைமரம் போன்றவற்றைப் போலவே வாழைமரம் மிகவும் ஒரு பயனுள்ள மரமாக மனித குலத்துக்கு விளங்குகிறது. வாழை மரத் தினுடைய அனைத்து பகுதிகளும் பயனுள்ளதாகவே உள்ளன என்றால் அது மிகையாகாது. வாழை இலை உணவு உண்ணப் பயன்படுகிறது. வாழைக்காய் வாழைப்பழம் இவை இரண்டுமே மனிதன் பயன்படுத்தக்கூடிய காய் மற்றும் கனிகள் ஆகும். வாழைப்பூ உணவாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. வாழை மட்டை பதப்படுத்தப்பட்டு அவையும் பயன் படுத்தப்படுகிறது. வாழைத்தண்டு உண வாகவும் மருந்து பொருளாகவும் பயன் படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு வாழை மரத்தின் அனைத்து பகுதிகளுமே மனிதனுக்கு பயன்படக்கூடியதாக இருக் கிறது. இவ்வாறு ஒவ்வொரு மனிதனும் மற்றவர்களுக்கு உதவக்கூடியவனாக இருக்க வேண்டும் என்பதற்கு ஒரு மிகச்சிறந்த உதாரணமாக வாழை மரத்தை கவிஞர்கள் சொல்வது உண்டு. அந்த வாழை மரமானது எப்படி உதவுகிறது? வாழையடி வாழையாக உதவுகிறது . ஒரு மரம் அது மட்டும் உதவுவது இல்லை அதனுடைய சந்ததியும் மற்றவர்களுக்கு உதவுவதாக இருக்கிறது. அது ஒருபோதும் தன்னுடைய உதவி செய்யும் குணத்தை நிறுத்துவதில்லை என்பதைக் காட்டுவதற்காகவே வாழை மரத்தை தியாகத்தின் உருவமாகவும் மற்றவர்களுக்கு உதவி செய்யக் கூடிய வர்களுக்கு உவமையாகவும் பயன் படுத்துவது வழக்கம். அதைத்தான் இந்தக் கவிஞரும் வாழையடி வாழையாக வாழ உதவுகிறது என்று தனது கவிதையிலே குறிப்பிடுகின்றார்.

"வாழையடி வாழையாக
வாழ வைக்கும் வாழை"

இவ்வாறு நூல் நெடுக நிறைய கவிதை களை நாம் காண இயலுகிறது அனைத்து கவிதைகளையும் திறனாய்வு செய்து விட முடியாது அவ்வாறு செய்தால் நீங்கள் இந்த நூலை படிப்பதற்கான சூழல் எழாது என்பதால் அனைத்து கவிதைகளும் இங்கே குறிப்பிடப்படவில்லை. எழுச்சி ஊட்டக்கூடிய கவிதைகள், தலைவர்களைப் பற்றிய கவிதைகள், காதல் கவிதைகள், சமூகக் கவிதைகள் என கவிதைகளுடைய பலவிதமான பரிமாணங்களையும் இந்த நூலிலேயே காண இயலுகிறது. முதல் முயற்சியிலேயே கவிஞர் சிரா.செல்வகுமார் தேர்ச்சி பெற்றுள்ளார் என்பதை அவருடைய கவிதைகள் காட்டுகின்றன. மென்மேலும் நிறைய கவிதைகளை, சமுதாயத்துக்குப் பயன்படக்கூடிய கவிதைகளை எழுதி தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு பெருமை சேர்க்குமாறு தமிழ்நெஞ்சம் வாழ்த்துகிறது

நூலை இராயல் பதிப்பகம் வெளி யிட்டுள்ளது. தொடர்பு எண் 91-9677291055

ஆசிரியர்; சிரா.செல்வகுமார் (இமயம் வென்றான்) பேராவூரணி தொடர்பு எண் 9176395757



# மூப்பு

மாதவன்
ஐதராபாத் - இந்தியா

அம்புலி பருவம், வாலிபம், திருமணம், திருமணமாகிய பிறகு, அது இது என்ற காலங்கள் கடந்து பிறகு வயோதிகம் முடியாமை - முடியவே முடியாமை - மூப்பு. மல ஜலம் கழிப்பதற்கு பிறர் உதவி. மூப்பு சில நாட்கள் இருக்கலாம், பல நாட்களும் நீடித்தது இருக்கலாம். அது வரும் போது தான் ஏன் பிறந்தோம் என்று தோன்றும். இந்த மூப்பு துன்பம் வலிய அனுபவித்தவர்கள் சொல்ல கேட்டதுண்டு. நினைத்தால் பயமாக இருக்கிறது.

கொடுப்பினை இருந்தால் எல்லாமே கடந்து போகும். வயதாக வயதாக வரும் குறைகள் பல - பார்வை குறைவது, மூட்டு வலி, உதிரத்தில் சீனி கூடுதலாக அல்லது குறைவாக இருப்பது, ரத்தம் அழுத்தம் போன்ற பல விதமான குறைபாடு வரும். இவை அனைத்தையும் குணம் படுத்திக் கொள்ளலாம். இவை காலா காலத்த்தில் கவனித்து கொண்டால் குறை ஒன்று இல்லாதது போல் வாழ்க்கை பயணம் நடத்தி விடலாம்.

அதிர்ஷ்டம் இருந்தால், வாழ்கையின் கடைசி காலம், ஒரு நல்ல பயணமாக முடியும்.

சிலர், பல வயதுக்கு பிறகு, தூக்கத்தில், தனக்கும் தெரியாமல், மற்றவருக்கும் தெரியாமல் கடைசி மூச்சு விட்டு இறந்து போவது உண்டு. அல்லது பிராணன் ஒரே கணத்தில் உயிர் போவதுண்டு. அப்துல் கலாம் அவர்கள் நோய் நொடி இல்லாமல், ஒரு மீட்டிங்கில் சென்று விட்டார். இப்படி நடந்தால் சோகம் ஆனால் சுகமான மரணம்.

கடவுள் எல்லோருக்கும் ஒரே விதமான ஆரோக்கியம் தருவதில்லை. நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கும் போதே கைவிட்டு சுவாதீனம் போகிறது - paralysis. அது மீண்டும் குணமாகுமா என்பது இறைவனுக்கு தான் வெளிச்சம். இதே வியாதி இடுப்பு, கால்களில் வந்தால் இன்னும் துன்பம்.

ஐம்பது வயது தாண்டுவதற்கு முன்பே, கோல் வைத்து கொண்டு தான் நடக்க முடியும் என்று சிலருக்கு. நினைத்து பார்க்க அச்சமாக தான் இருக்கிறது.

பெற்ற பிள்ளைகள் வேறு நாடுகளில் போய் சேர்ந்து அங்கேயே வீடு வாசல் குடும்பம் மக்கள் என்ற நிலைமை - தவிர்ப்பது நல்லதல்ல, அவர்கள் நல்ல வாழ்க்கை அமைத்துக் கொள்ள பெற்றோர்கள் தடுக்க கூடாது. எங்கிருந்தாலும் வாழ்க என்று தான் ஆசி வழங்க வேண்டும்.

கூட்டு குடும்பமாக இருந்த நாட்கள் இனி வர போவதில்லை. வாலிபத்தில் தனி குடித்தனம் கொடுக்கும் இன்பம் காண தவிப்பு, கிடைத்த பின், அந்த ஒரு வழி பாதையிலிருந்து திரும்பி வர முடியாத நிலைமை.

இது எல்லாம் இருப்பினும், பெற்றோர்கள் பசங்கள் மீது, மருமகன் மீது செய்த ஆதிக்கம் - பெற்ற பிள்ளை மருமகன் முதுமையில் கசப்புடன் தான் பெற்றோர்களை பார்த்து கொள்வார்கள். என்ன செய்ய. பார்த்துக் கொள்ளாமலும் இருக்க தோன்றும்.

இதே போன்ற பிரச்சினைகள், எல்லா மனிதர்களும் நேரிடலாம். பெரியவர்களுக்கு பண பலம் குறைய, சிறியவர்களுக்கு அது இருக்க , அவர்கள் குரல் தான் மேலோங்கி இருக்கும்.

புரிந்து கொள்ள வேண்டியவை -

பாச நேசத்துடன் இருப்பது நன்று,

உயில் எழுதி வைக்க வேண்டும் ஆனால் வாழ்நாளில் பங்கிடக் கூடாது, கையில் பணம் இருந்தால் தான் உலகம் மதிக்கும்,

மனைவி தான் துணைவி கணவன் தான் துணைவன் என்பதை மறக்க கூடாது

கட்டாயம் பெற்றோர்களை ஒதுக்கும் நோக்கத்தில் முதியோர் இல்லத்தில் சேர்க்க கூடாது

பெற்றெடுத்த பிள்ளைகள் வேறு நாடுகளில் இருப்பது தவிர்க்க முடியாத பொழுது, முடிந்த வரை வசதியுள்ள இல்லத்தின் சேருவதே நல்லது. அந்த இல்லத்தில் நட்பு பாசம் நேசத்துடன் வாழ்வது நல்லது.

நினைவு இல்லாமல் சில நாட்கள் அல்லது பல நாடுகள் பிழைத்து கிடந்தால், இறைவன் தான் தேர்ந்தெடுத்த தினத்தன்று அழைத்து செல்வான் என்ற மன உறுதியுடன் நம்பிக்கையுடன் இருக்க வேண்டும்.

## காத்திருத்தல் சுகம்



காத்திருத்தல் சுகம்...
வழி பார்த்திருத்தல் வரம்...

முகம் சோர்ந்திருத்தல் சோகம்
அகம் மகிழ்ந்திருத்தல் நேசம்....

உடல் சுட்டெரித்தால் தாபம்...
மனம் நெகிழ்ந்திருந்தால் சாபம்..

நோய் உனக்கென்றால் பாபம்
மருந்து நானென்றால் தீரும்....

நாளும் நமக்கென்றே வாழும்
காதல் பொய் சொல்ல கூடும்...

வாழும் நாளெங்கும் நீயும்
உடன்வாழ வழியொன்று வேண்டும்...

காத்திருத்தல் சுகம்



- விஜி

# நித்திய சரணம்

சங்கேத வார்த்தைகள்
தொலைந்து போயின
ஆத்மார்த்த உரையாடல்கள்
தீர்ந்து போய்விட்டன
வசமிழக்கச் செய்த நொடிகள்
கரைந்து விட்டன
வியத்தகு நேசநுட்பங்கள்
ஒளிந்து கொண்டன
சொல்லி மாளாத பரவச
அனுக்கங்கள் மறந்து விட்டன
வழித்துத்துடைத்தெறிந்து
சுத்தமாக்கிக்கொண்ட
ஏகாந்த பரப்பிலே நானென
இல்லாதவொரு ஆன்மாவில்
உன்னை மட்டும் தூக்கிச்
சுமந்து எங்கு செல்கிறேன்?

நீண்டதொரு காத்திருப்பில்
இருண்டு வெறிச்சோடிய
வானவெளி நேசஒளி தேடும்
கருமை பூசிய இரவு
விழித்தே கிடந்து நோகும்
தீராத வேண்டுதல்களை
ஏந்திய சிறகுகள்
சஞ்சரித்து சொற்களற்ற
சந்நிதானத்தில் இறங்கி
உரைக்கத் தெரியாது
தவிக்கும் – வசீகரிக்கும்
புன்னகையை
சொர்க்கத்தின் வாசனையைத்
தொலைதூரத்தில் தேடும்
பிரிவெனும் விதையில் உருவான
ஞாபகப் பழத்தோட்டங்கள்

தவித்துப் புலம்பும்
அரற்றி அழும் இதயத்தினுள்
ஒவ்வொன்றாய் விழுந்து நிரம்பும்
என் துயரத்தைக்
குடுவைக்குள் அடைத்துத்
தூரமாகும் நதியில்
எறிந்திருக்கிறேன்
இப்போது நதியின்
பிரவாகம் எனக்குள்
நேசத்தின் நித்தியசரணம்
எழுந்து நிறைகிறது
அந்திமத்தில் உதயத்தைக்
கருக்கொண்ட மௌனகீதம்
ததும்பி வழிகிறது
மென்பனி உருகும் வைகறையில்
மீளவும் எனக்குள்
எழுந்து வருகிறாய்...!

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர், இலங்கை


# அவள் பூக்களின் வாரிசு

அழகிய மலர்களின்
அணிவகுப்பு மரியாதை
அவள் வருகையின் போது

வேப்பமரத்து பூக்களும்
இனிப்பாகப் பேசுகிறது
அவளிடத்தில்

காதல்பூக்கள் அனைத்தும்
அவள் காதில்மட்டுமே
ரகசியங்கள் சொல்கின்றன

எல்லாப் பூக்களும்
செல்ஃபி எடுத்துக்கொள்கின்றன
அவளுடன் நின்று



வாசமிக்க மலர்களெல்லாம்
அவளை வாரிசாக முன்மொழிகின்றன

மலர்களின் மாநாட்டில்
அவள் சிறப்புவிருந்தினர்

பூக்கள் எல்லாம்
என்னைக் கேட்டுத்தான் மலர்கின்றதென
ஊரெல்லாம் சொல்லித் திரிகிறாள் அவள்
பூக்களின் வாரிசான நாளிலிருந்து



சீ.பாஸ்கர்

# காலநிலையும் காலங்களும்

இயற்கை இதம் தரும் ஒன்றாக யாபேருக்கும் அமைய வேண்டும். ஆனால் இம்முறை மார்கழி தை மாதங்கள் குளிரும் மழையும் தொடராக மாற்றம் கண்டு வருவது கண்கூடு.

finland, sweden போன்ற நாடுகளில் 40 டிகிரி உருகுநிலையில் உள்ளதைப் பார்க்கிறோம். ஆசிய நாடுகளில் பெரும் மழைவீழ்ச்சி மண்சரிவு ஏற்பட்ட வண்ணம் உள்ளது. ஐரோப்பிய நாடுகளில் கனமழை பொழிந்து வெள்ள அபாயங்களால் பாதைகள் மூடிய வண்ணம் உள்ளனர்.

தாயக சூழலில் வெள்ளப்பெருக்கால் பலர் பாதிப்பை கண்டுள்ளனர். வரலாறு காணாத மழைவீழ்ச்சி அதிகரித்தே வருகிறது. மழையால் நுளம்பும் இலை யானும் இடைவிடாது பெருகி வருகிறது. இதனால் டெங்கு போன்ற காய்ச்சல் அபாயம் ஆங்காங்கே உண்டு.

இயற்கை ஏன் இப்படி மாற்றம் காண் கிறது என எண்ணினால் மனித வளர்ச்சி யின் உச்சகட்டம் அறிவியல் ஆராய்வுகள் அதிகரிப்பால் இயற்கை பாழ்படுத்தப் படுகிறது. மண்ணைத் தோண்டுவதும் விண்ணை நோக்கிய ஓசோன் படை உடைவும் மாற்றங்களாக அமைகின்றன.

என்றுமில்லாதவாறு எழில் கொஞ்சும் இயற்கை மாசு படுத்தப்படுவதால் பருவ கால மாற்றங்கள் சீற்றம் கொள்கின்ற னவோ? என எண்ண வைக்கிறது. இயற்கை யின் மடியில் வாழ்வது இன்பம் துய்க்கும். செயற்கையின் சாரல் செழுமையைத் தராது. நாம்தான் அழகான இயற்கையைப் பேண வேண்டும். மாசுபடுத்தாத சூழலை எமக்குள்ளே அமைத்தோமானால்



இயற்கை புனிதமாகப் பேணப்படும். விரியும் பூக்களின் அழகு, பச்சைப்பசேல் என விரியும் புற்கள் பார்ப்போரை கவர்ந்திழுப்பதை உணர்ந்தால் இயற்கை எவ்வளவு ரசனைமிக்கது என எண்ணலாம்.

காலமும் காலநிலையும் மனதிற்கு இனிய ரம்மியங்கள். இதமாக இருந்தாலே சுகத்தை நுகரலாம். சுதந்திரமாக வாழலாம். ஆனால், மாற்றம் காண்பதால் மகிழ்வு அற்றுப் போகிறதே மனங்கள்.

மனிதா! நீ மட்டும் சிந்தித்துப்பார். இயற்கையை ஒருபோதும் கூறு செய்ய முயலாதே! ஓடும் வாகன அதிகரிப்பு, உலகமயமாக்கல் தொழிற்சாலைக் கழிவுகள் சூழலை பல்வேறு வழிகளில் அசுத்தமாகிறது. அதிகளவு எரிபொருள் பாவனை, வாகனப் புகை இவை இயற்கையை அழுக் காக்குவது மட்டமல்ல இதமான கால நிலையையும் தூர தள்ளுகிறது. ஆதலால் இயன்றவரை இயற்கையைப் பேணுவோம். இதமான வாழ்வை எமக்குள் உருவாக்கு வோம்.

**தமிழ்மணி நகுலா சிவநாதன்**
யேர்மனி

# விடியலை நோக்கி...



கிண்ணியா சபீனா

அந்தப் பாடசாலையில் மிகவும் சுறு சுறுப்பாக இயங்கும் ஆசிரியர்களில் அவளும் ஒருத்தி! கொடியிடையும் கார் மேக வண்ணமும் கொண்டவள்! காண்போரை வசீகரிக்கும் வதனமும் உடையவள்! மாணவர்களின் நலன்களில் மிகவும் அக்கறையுடன் செயற்படுமவள், என்றும் இனிமையுடன் எல்லோரிடமும் பழகுவாள்! என்றாலும் அவளின் முக மலரில் சோகரேகை படர்ந்திருக்கும்!

அவளின் தகப்பன் விறகு விற்றுத் தான் அவளை வளர்த்தார்! வறுமை அவள் வாழ்வை, அதன் கோரப்பிடிக்குள் வைத்துக் கொண்டது!

கல்வியைக் கரும்பென எண்ணிச் சுவைக்குமவள்! ஆசைகளைக் குறைத்துக் கொள்வாள்!

பெற்றோரிடம் அவளுக்காக அள்ளிக் கொடுத்திடப் பாசம் அதிகமாகவே இருந்தது! ஆனால், சீதனமாக வழங்க எதுவுமே இல்லை! அக்குடும்பத்துடன், அவர்களின் சொந்த பந்தங்களும் சேர்ந்திட முன் வருவதில்லை!

ஒற்றைப் பிள்ளையான கண்மணியைப் பெற்றோர், பேர் சொல்ல வந்த பெரும் பேறென எண்ணினர்!

கல்வியைக் கவனமாய்க் கற்ற கண் மணி கணித ஆசிரியரானாள்! மிகவும் அகமகிழ்ந்தனர்! அவளின் பெற்றோர் மகளின் கனவுகள் இனி நனவாகிடும் எனக் கனவு கண்டனர்! அவளுக்கொரு வாழ்வினை அமைத்துக் கொடுக்க ஆசைப் பட்டனர்! காலப்போக்கில், அவர்களை இயலாமையும், முதிர்ச்சியினால் ஏற்பட்ட வருத்தங்களும் தாக்கின!

'ஏழையென்னை மண முடிக்க யாருமே இணங்கவில்லை!" மனப் பொருத்தத்தை விடப் பணப் பொருத்தம் தேடினர் படித்தவர்கள்!' 'அத்தோடு நிறமும் கொஞ்சம் குறைவு என்றால் கேட்கவும் வேண்டுமா!' என்று அவள் மனம் அடிக்கடி நினைக்கும்!

பாடுபட்டு உழைத்து உழைத்து, ஓடாகி

நோயாகிப் பாயாகிப் படுக்கையிலே கிடக்கும் தகப்பனைப் பராமரிக்கவும் அவளது வருமானம் செலவாகிக் கொண்டு இருந்தது! என்றாலும், அவள் அதைப் பற்றி வருந்தி மன நிம்மதியை ஒரு நாளும் இழந்ததில்லை!

வாழாவெட்டியாக வாழ்ந்து கொண்டு தன் எதிர் காலத்தை எண்ணி ஏங்கியவள், சவால்களை சமாளிக்கும் திறனுடன் வீறுநடை போடுவாள்!

அவளது வகுப்பறை மாணவர்களுக்குப் பயிற்சிகள் கொடுத்து விட்டுக் கொப்பி களைத் திருத்திக் கொண்டி ருந்தவளிடம்

'டீச்சர் எழுதி முடித்தவர்களிடம் கொப்பியை வாங்கலாமா? என்றாள் வகுப்புத் தலைவி கீதா!

'சரி சரி வாங்கலாம்' என்று சொன்ன வள், ஒவ்வொரு மாணவியிடமும் சென்று பயிற்சிகள் செய்தமையை அவதானித்தாள்! கொப்பிகள் திருத்தப் பட்டன! பள்ளியில் இடைவேளை மணியும் ஒலித்தது! மாணவர்களின் வெளி யேற்றத்துடன் சிந்தனைக்குள் சிறைப் பட்டாள் கண்மணி!

கலியாணத் தரகர் கொண்டு வரும் வரன்களும், வந்து விட்டுப் போய் அனுப்புகின்ற வேதனை தரும் விடைகளும் விந்தைதான்!

ஆரம்ப காலங்களில் இந்த விஷயத்தின் துயரம் அவளை வாட்டி எடுத்தாலும் பின்னர் அவளிதயம் அதையும் தாங்கிடப் பழகியது!

வருவதை எதிர்கொள்வோம் எனத் துணிவுடன் வாழ்ந்து கொண்டிருந்தவள், 'அம்மா அப்பா தான் பாவம்! அவர்கள் தான் என்ன செய்வார்கள்!'

'படித்த பெண்களுக்கும் சீதனம் கொடுக்கத் தான் வேண்டும்!'

சிந்தனையில் இருந்தவளுக்கு ஒரு போன் கோல் வந்தது! புதிய இலக்கம்!

மறுமுனையில் யார் என அறிந்திடப் போனைத் தூக்கினாள்! பக்கத்து வீட்டு மாமி தான் பேசினார்!

உங்க அப்பாவுக்கு கொஞ்சம் வருத்தம் கூடிவிட்டது கண்மணி!'

'அம்மா உங்களிடம் சொல்ல வேணாம் என்று சொன்னவ!' 'எனக்கு மனசு கேக்கல!'அதான் சொன்ன நான்!'

'அவ ஸ்கூல் முடிஞ்சாப் பிறகு வரட்டும் என்று சொல்லிட்டா!' என்று கூறி முடிக்கவும் பாடசாலை முடிவுக்கான மணி அடிக்கவும் சரியாக இருந்தது!

கொஞ்சம் நிதானமாக வேலைகளை முடித்துக் கொண்டு வீடு சேர்ந்தாள் கண்மணி!'

'ஏனம்மா எனக்கு உடன் சொல்ல இல்லை' 'என்று கூறியவாறு அப்பாவை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றாள்!

அங்கு அவர் உயிர் இரண்டு நாட்கள் ஊசலாடியபின் பிரிந்தது! அவரின் சடங்குகள் முடிந்தது! ஆனால் அவள் கலங்கவே இல்லை!

இவ்வளவு நாளும் இதெல்லாம் நடக்கும் என்று கற்பனை செய்து கொண்டு தான் வாழ்ந்தவள் அவள்! முதிர்கன்னிகள் உலகில் துன்பங்கள் சுமக்கப் பிறந்தவர்கள் என்று அவள் மனம் ஏற்றுக் கொண்டது

போலும்!

விடுமுறை நாளன்று முன் வாசலில் ஒட்டோ ஒன்று நின்று ஹோர்ன் அடித்தது!

படலையைத் திறந்தாள் கண்மணி! உள்ளிருந்து வயதான பெண்மணி இறங்கினார்!

'கண்மணி டீச்சரின் வீடு இது தானாம்மா' என்றார்!

'ஆமாம் என்ன விஷயம்' என்றாள்

'சரிம்மா!' உள்ளுக்கு வந்து பேசலாமா!' என்றவரை, 'சரி சரி வாங்க, வாங்கம்மா!' அழைத்துச் சென்றாள் கண்மணி!

அந்தம்மாவுக்கு நான்கு பெண்களும் ஒருமகனும் இருக்கிறார்கள்!

கண்மணியின் அம்மாவிடம், 'தன் மகன் நாதன் அக்காமார்களைக் கரை சேர்த்துவிட்டவன்!'

'இனிமேல் தான் தனியே வாழப் போவதாகச் சொல்கிறான்!' எனச் சொல்லிக் கலங்கினார் அந்த அம்மா!

'ஓங்கட மகளையும் பற்றிக் கேள்விப் பட்டோம்!'

'எதுக்கும் ஒருக்கா கேட்டுப் பாப்போமே! என்றுதான் வந்தனான்!' என்றார்!

அவர்களின் விபரங்களை அம்மாவிடம் சொல்லி வைத்தார் அந்த அம்மணி!

முல்லைச் சோலைக் கிராமத்தில் விவசாயம் செய்து வாழும் அந்தக் குடும்பம் வான்மழையையும் வயலையும் நம்பி வாழுகிறது!

'அங்கு நாதன் தன் கடின உழைப்பால் முன்னுக்கு வந்தவன்!' அந்த ஊரில் பலராலும் மதிக்கப் படுபவன்!

நல்லவர்கள் பலர் வாழுமிடம் தான் முல்லைச் சோலை! அங்குதான் வாழ்க்கைப் பட கண்மணியிடம் விருப்பம் கேட்டனர்!

'ரெண்டு வாரங்கள் அவகாசம் தாங்கம்மா!'

'நாங்க யோசிச்சு முடிவு சொல்லுவம்!' என்று சொல்லி அனுப்பினார் கண்மணியின் தாய்!

அன்றிரவு அவளுக்குத் சிவராத்திரியானது!

தூரத்து உறவினர் ஒருவரின் மூலம் முல்லைச் சோலை விடயத்தை அம்மா விசாரித்துக் கொண்டிருந்தார்!

கொழுகொம்பில்லாக் கொடியான கண்மணி, 'தன் வாழ்வைத் தானே தீர்மானிக்க வேண்டிய நிலை வந்துள்ளது!' என உணர்ந்தாள்!

வயதுப் பொருத்தம் சரியாக இருந்த நாதனும் அன்று அங்கு கடுமையான யோசனையில் தான் இருந்தான்!

முல்லைச் சோலை சிறுவர்கள் கண்மணியிடம் கற்றிடும் வாய்ப்பு மிக விரைவில் கிடைக்க உள்ளதை அவர்கள் இன்னும் அறியவில்லை!

தண்ணீரும் சோறும் தந்த மண்ணை விட்டுத் தன் அன்னையையும் அணைத்துக் கொண்டு, கண்மணியான இந்த முல்லைக் கொடி, தளிர்த்திட ஒளி தரும் விடியலை நோக்கிப் புறப்பட்டது!

# வீடும் வாசலும்

மலையின் முகடுகளில்
மாடாக உழைப்பவன்!
ஓடாகத் தேய்ந்து
உருக்குலைந்து போபவன்!

இவனது முதுகு வானவில்லாய்
வளைந்து கொடுப்பதாலேயே
நாட்டின் முதுகெலும்பானது
நிமிர்ந்து நிற்கிறது நேராக...!

உயிராலும் உணர்வுகளாலும்
உருவாக்கப்பட்டவனே இவனும்!
இருந்தும் சடமாகவே
நடமாடுகிறானே தினமும்!

கோரிக்கைகள் விடுக்கிறான் தான்!
கேளாத ஒன்றாகவே
கேளிக்கை செய்யப்படுகிறதே!

இவன் தரும் தேயிலையே
எல்லோருக்கும் இரத்தமாச்சே!
இவனது இரத்தமே
இரண்டாவது கடவுளாச்சே!

உயிர்மை தூங்க நேரம் இல்லையே!
உழைப்புக்கேற்ற ஊதியம் இல்லையே!

படிக்க, படி உயர
இடமும் இல்லையே!
சந்ததி பெருக்க சாதனை படைக்க
உரிமை இல்லையே!

வீடும் வாசலும்
வீதியிலும் வெளியிலுமே
விதிவரைந்த பாதையிலே இவனுக்கே!

இருந்தும்... நாளை
உயரும் இவனது மூளையே!
பெருவெளிச்சம் பெற்றே
பெறுவான் வீடு வாசலே!!

விவேகவெளி தமிழேந்திரன்
(சரவணமுத்து நவேந்திரன்) இலங்கை.



# மாண்பு மிகு ரமழான்

சிறப்பான மாதம் என்றே பலரது
சிந்தனையில் தோன்றிடவே
வறுமையின் நிலை கண்டு
மன்னர்களும் அஞ்சிடவே
சோற்றுக் கஞ்சியிலே
சோர்வுகளும் நீங்கிடவே
மாண்டவர்களின் மகிமைகள்
அறிந்திடவே
மனிதநேயம் என்ற ஒன்று
மனிதன் புரிந்திடவே
இறைவனை நாடி
கைகளை ஏந்திடவே
கருணையாளனின் பார்வை
மானிடனில் பொழிந்திடவே
மாண்பு மிகு ரமழான்
மாதம் வந்திடுமே

அர்சிதா அமீர்

# வெண்பா போட்டி (பயணம்) – 26

## காலம் 01 - 12 பெப்ரவரி 2024

## தலைப்பு - காதல்

மையவிழிக் காதல் மயக்கின்ற பேராறு
வையமே பாடும் கவிதையிலே - பையநீ
பாடுகின்ற பாட்டெல்லாம் பாவையிவள் வாழ்வினிலே
ஓடுகின்ற நீராய் உணர்வு

தமிழ்மணி நகுலா சிவநாதன், ஜெர்மனி

கவிதையும் காதலும் காலத்தால் நின்று
புவியினில் வீசும் புகழாம் - குவிந்திடும்
அன்பினால் கூடும் அழகுதான் இல்லறம்
குன்றாத சொற்சுவை  கூறு.

ஶ்ரீ தரன்

.

சாதிமதம் என்றெமக்குச் சங்கடங்கள் வந்தாலும்
பீதிவா ராது பிரியமே - சாதிப்போம்
மோதல் நமக்குள் முளைக்காமல் வந்ததே
காதலிக்க நேரம் கனிந்து .

கவிஞர் முத்துசாமி தாரமங்கலம்

.

ரோசாப்பூ காசேறி ஞூட்டைத்தான் மாற்றிட...
ராசாக்கள் சாக்லேட்டை நம்புவர் - ரோசாவோ
சாக்லேட் டெடிபியர் சாப்பாடு மேற்செலவை
ஆக்குவதே அற்றை தினம்...!

கவிஞர். சிந்தனை பாரதி

.

கண்பார்வை சாடையிலே காதலெனச் சொல்லிடுவாள்
மண்பார்த்து நின்று மனம்சாய்ப்பாள் - பெண்ணவள்
உள்ளம் புகுந்தே உருக்குலைப்பாள் பாவிமகள்
கள்ளிச் செடியவள்கா தல்.

பாவலர் தென்பசியார்

.

பண்டிகைகள் எல்லாம் பலகாரம் உண்ணவெனும்
எண்ணத்தை மாற்ற இளைஞரெலாம் - எண்ணினரோ?!
கண்ணோடு கண்ணென்றே காதலர்கள் உண்கின்ற
பண்டி'கையின் உள்நோக்கம் பார்!

செ. இராசா

.

அன்பென்ற கூட்டில் அடைப்படும் காதலே
என்னுள் விதைப்பாய் எழுபிறப்பும் - முன்செல்லப்
பின்தொடர்வேன் வாழ்வில் பிணக்கில்லாப் பற்றினில்
வன்மமும் ஏதுமில்லா வாக்கு

பாண்டிச்செல்வி கருப்பசாமி கோவை

.

வெண்ணிலவு போலமுகம் வெட்டுகிற வேல்விழியாள்
கண்ணசைத்துத் தான்பேசிக் காதலித்தாள் - பண்ணிசைத்து
என்னவளும் பாங்காக என்னுடனே தானிருந்தாள்/
புன்முறுவல் கோடி பெறும்.

பாவலர் தாழை ந.இளவழகன், மணப்பாறை.

.

அன்பும் கனிவும் அகத்தே நிறைந்திட
என்பும் உருகும் எழில்காதல் - இன்றோ
பழகிப் பிரியும் பகட்டில் பலரும்
அழகிய காதல் அருகு.

ஒசூர் மணிமேகலை

.

மனத்தைப் பறிகொடுத்தேன் மன்னவா..நீ நம்மின்
இனத்தை வளர்த்தெடுக்கும் ஈசன்! - வனப்பைத்
தினமும் தரிசிக்கும் தித்திக்கும் காதல்
கனவு நனவாகக் காப்பு.

மாலதி திரு

.

ஓடியே போவதென்ன ஒய்யாரப் பேரழகே!
தேடியே நாளெல்லாம் தேனினிக்கப் - பாடியே
வஞ்சியுன் நெஞ்சத்தில் வந்துநான் இன்னிசைத்துக்
கொஞ்சிடவே என்னவழி கூறு!

மலர்மைந்தன்

.

காதலித்த காலத்தில் கண்பிதுங்கி மெய்நடுங்கிப்
பேதலித்து ஏதோ பிதற்றினேன்! - ஆதரவாய்த்
தூதுரைக்க அன்றுவந்த தோழிதான் செந்தமிழாம்
மாதுளத்துள் நின்றாள் மகிழ்ந்து.

ஜாய் சத்தியா

.

வறுமையின் பாதையே வாழ்வாக காதல்
வெறுமையில் விட்டது வீசி - பொறுமையாக்
காத்திருந்த பின்னே கலியாணம் இன்றிவளால்
பூத்திருச்சு காதலெனும் பூ

க. சங்கரபாண்டியன்

.

நினைவின் இடுக்கில் நிறைந்த உணர்வு
வனைந்து மனத்துள் வசிக்கும் - நனைந்த
பருவம் இதமாய் பதமாய் விளைக்கும்
உருவின் இசையாய் உது

விசு. இம்மானுவேல், பெங்களூரு

.

மௌவல் மலர்சூடும் மங்கையின் கூந்தலுக்குள்
பௌர்ணமித் திங்களொத்த பொன்முகம் - வௌவியப்
பூச்சுடன் இன்பத்தைப்  போகிக்க உன்றனுக்காய்
வீச்சுடன் காத்திருக்கு வா.

வானதி சந்திரசேகரன்

.

முப்பத்து மூன்றாண்டு முக்கனியாம் காதலால்
தப்பாமல் இன்சுவை தந்தவனே - இப்படியே
இன்னும் பலகாலம் இன்பம் பெருகிட
என்றுமுனில் காதலை ஏந்து.

குளோரிசக்தி, கரூர்.

.

பின்னால் உதைத்தாலும் பேருக்(கு) இனிமைதான்
முன்னால் 'கடி'க்க முயல்கின்றாய் - தன்போல்
அழகும் தரணியில் இல்லையென்னும் காதல்
கழுதை உனக்கே கவி!

பக்ருதீன் இபு ஹம்துன்

.

பூத்தமுகத் தாமரையில் பூசும் மதியெழிலில்
கோத்த அனிச்சயிதழ்ப் புன்னகையில் - மாத்தமிழே
நெஞ்சம் நிறைந்தாய் இரவெல்லாம் உன்நினைவில்
தஞ்சம் புகுந்தேன் தவித்து !

பாவலர் கருமலைத்தமிழாழன்.

.

கண்டதும் காதல் கனவுலகில் நித்தமும்
வண்ணமாய் மாறுமா வந்தெனக்குத் - திண்ணமாய்
எண்ணிலா ஆசைகள் என்னுள் பரவிட
கண்டேனே காதலர் நாள்!

இரா.சத்தியநாராயணன், சத்தியமங்கலம்

.

சங்கமிக்கும் ஐம்புலனும் சங்கதியைப் ஏற்றிவிடப்
பங்கமிலாக் காதலும் பூம்புனலாய்ப் பொங்கியெழ
வெங்கனலின் வேகம் விழியிரண்டும் மூடாதே!
மங்கை மரப்பாச்சி மாற்று?

கிருட்டின திலகா

.

மல்லி மணம்வீசும் உன்நிழல் விட்டுநான்
சொல்லாமல் கொள்ளாமல் போவேனோ - அள்ளிநான்
கொள்ளவே ஆசை இருந்தாலும் நாணமோ
மெல்லவே தூக்கும் தலை.

வான்மதி

.

மஞ்சு குளிர்மேனி மாற்றத்தைப் பெற்றதுகாண்
மஞ்ச சுகமெலாம் மாயைதான்... நெஞ்சிணைந்தோம்
துஞ்சி மறைந்தாலும் துள்ளுவேன் நெஞ்சுள்ளே
கொஞ்சி மகிழ்தலைக் கூறு.

சாமிநாதன் நாச்சியப்பன்

.

எரிச்சலா யுற்றவரை யெண்ணாமல் மூச்சாய்
வரித்திடுங் காதல் வரமே - உரித்துடன்
எல்லா மளித்தென்று மின்பங் கொடுத்திடும்
தொல்லையிற் காதலை வாழ்த்து.

தமிழ்க்கீரன், ஷர்மிதன் இலங்கை

.

அடைக்கலம் வந்தாள் அணைத்தெனைக் கொண்டாள்
படைக்கள மென்றன் பணியாய் - விடைபெற்றுக்
கூடார வீட்டில் குறையின்றித் துய்த்தோமே
வாடாதக் காதலில் வாழ்ந்து.

தன்ராஜ் பாப்பண்ணன்

.

கண்ணென்பார் காதற் கரும்பென்பார் காண்கையில்
பெண்ணென்பார் போதை விழியென்பார் - உண்மையில்
பொல்லாப் பிணியெல்லாம் போக்கும் மருந்தென்பார்
வில்லெனச் சென்றார் வெறுத்து

சுதேன் சுதேகி

.

காதலர் நாளெனும் காலக் கணக்குகள்
போதுமா? போதாது பொன்மானே! - சாதல்நாள்
எட்டும் வரையில் இணைந்திருப்போம்! காதலைச்
சுட்டும்நாள் வேண்டுமா சொல் *(நோதல் நிகழாத வாழ்வு)*

இரா அழகர்சாமி

.

காதல் பிறக்குமே கல்லூரிக் காலத்தில்
போதல் நடந்தால் பிறக்குது - மோதலும்
சாதலும் உண்டே சகத்திலே ஆணவத்தால்
நோதல் நிகழாமல் வாழ்

கண்ணன் நடராசன்

.

அண்ணலவன் கண்கொண்டே அங்க மளவெடுக்கப்
பெண்மை நிலைமறந்தே பேதலிக்க - எண்ணமதைக்
கண்ணில் மொழியாது காதலைக் கால்விரலால்
மண்ணில் வரைந்தாள் மறந்து

ஜனனி

.

ஏனின்னும் வரவில்லை என் அன்பே
கண்களில் நீர்வடியக் காணாத என்னவனை
உண்மையாய்க் காதலித்தேன் உள்ளன்பால் வெண்மைபோல
அன்னமிவள் ஏங்குவதை அன்னவனும் தான்நோக்கி
இன்னுமிங்கு ஏன்வரவில் லை.

கவித்தென்றல் சௌ.நாகநாதன்

.

விண்ணீலக் கண்ணாலே வீழ்த்தியெனை வென்றவள்
மண்பார்க்கும் பார்வை மலராமோ - பெண்மயிலுன்
பண்ணொழுகும் பேச்சோ பனங்கள்ளாய்ப் போதையேற்றும்
உண்ணுவாய் நீயென் உயிர்!

பசுங்கிளி மணியன்

.

காதலிலே தோல்வியுற்றேன் கல்லூரி நாட்களிலே!
ஆதலாலென்  அக்கா மகள்வந்தாள் - சாதனைதான்
நாற்பதுமே லாண்டுகளாய் நாளொன்றும் நன்னாள்தான்
ஏற்றமிக வாழ்ந்தேன்நான் இங்கு!

முனைவர். சுந்தரராசன் தயாளன், பெங்களூர்.

.

காதல் சுவையறியேன் கண்ணிழந்தோன் போலானேன்
நோதல் தணியாது நொந்தயர்ந்தேன் - மாதரசி
எந்தன் மனம்புகுந்தே இல்லறத்தில் இன்றளவும்
சந்தமணம் வீசுகின்ற சாது!

பால முருகன்

.

முட்டிமுட்டி மோதினாலும் ஒட்டி உறவாடும்
கட்டுக் கரும்பே கனிந்திடும் - மெட்டிசையே
கட்டிய தாலியுடன் காத்திருக்கும் காதலியே
விட்டு விலகேன் இனி.

சோ. சுந்தரேசுவரி

.

இருவுளங்கள் ஒன்றிணைந்து ஈர்ப்பதுதான் காதல்!
ஒருவரை நன்கறிந்தே ஓங்கும் - இருவர்
உளங்கள் ஒருமித்தே ஊராரின் வாழ்த்தால்;
வளமுடன் வாழ்தலும்சீர் வான்!

நெடுமுடி வேந்தன்

.

நினைவினில் வாழுகின்ற கீதம்தான் காதல்
கனவில் வளர்ந்துவந்தக்  காதல் - தினமும்
அழிவே கிடையாது என்பது உணர்ந்தால் /
அனைவரும் காதல் செய் வீர்.

ச. சத்தியபானு

.

காதலால் வாழுமே மண்ணில் உயிரினம்
ஆதலால் காதலை நேசிப்போம் - மாதவக்
காதலும் கைகூடும் கல்யாண பந்தத்தில்
காதலால் கட்டுண்டு பார்.

க.விஜயபாஸ்கர், மூவானூர், திருச்சி

.

காதலைப் போற்று உயர்காதலைப் போற்று
சாதல் வரினும் போற்று - மோதலில்
பிறப்பினும் காதலைப் போற்று உலகில்
சிறப்பீனும்.. காதல் பெரிதே

மலர்க்கணைமன்னன், சென்னை

.

லவ்வுலவ்வு லவ்வுலவ்வு லவ்வுஅது இல்லாட்டா
சவ்வுசவ்வு வாழ்க்கையே சவ்வுசவ்வு - லவ்வுக்கு
லவ்வுதான் நீங்க தரணும் ஆகவே
லவ்வுக்கு தானுங்க ஓட்டு.

மு. மதனகோபால், சென்னை

.

காதலிலே தோல்வியுற்றேன் கல்லூரி நாட்களிலே
ஆதலாலென்  அக்கா மகள்வந்தாள் - ஆதரவாய்
நாற்பதுமே லாண்டுகளாய் நல்லன்பைத் தந்தென்னை
ஏற்றமுற வைத்தாள் எழில்.

பொன் இனியன் பெங்களூரு

# காதலுள்ள வாழ்வே கனவு...!

(அகத்துறை...)

1

காதலில்லா வாழ்விதுதான்  கற்சிலையைக் கூடுவதாம்;
மோதலின்றி நாள்தோறும்  மீதமென்ன? - ஈதலிலே
இன்பமெனச் சொன்னாலும் ஈகையைத் தானுணரார்
இன்னலையே கூட்டினார் இங்கு..!

2

கைரேகை ஒன்றையே  கைப்பொருளாய்க் கொண்டவனின்
கைசேர யார்வருவார்  காதலுடன்? - பொய்சேரும்
வாழ்வியலில் தூய்மை  வளர்க்க விரும்புமெந்தன்
ஆழ்மனதை  யாரறிவார்  ஆய்ந்து...?

3

என்னையுங் காதலிக்க இங்கொருவர் உண்டாமோ ?
தன்னையும் தான்வருத்த  யார்துணிவார்? - அன்னைக்கும்
ஆகாத பிள்ளைநான்  அன்பைச் சுமந்ததால்
வேகாமல் உள்ளேன் வெறுத்து...!

4

கவிஞனை நெஞ்சாரக் காதலிப்பார் யாரோ?
புவியெங்கும் புண்செய்வோர் உண்டாம்; - செவியிரண்டும்
நொந்திடவே சொற்களினால் நோகவைப்பார்; இவ்வுலகில்
வந்ததற்காய் வாழ்வதிவ்  வாழ்வு....!

5

நெஞ்சின் நினைவில் நெருப்பை நிதம்தூவி
துஞ்சும்  விழியில் துளைபோடும் - வஞ்சகச்
சூதர் மிகுந்துள்ள  சூழலிலே மெய்யன்புக்
காதலுள்ள வாழ்வே  கனவு...!

ஜ.க.நாகப்பன்

# வெண்பா போட்டி (பயணம்) - 27

## போட்டியின் கால அளவு : 01 - 12 மார்ச் 2024

வணக்கம் பாவலர்களே...
இம்மாத போட்டியின் விதிகள்....

இம்மாத போட்டி கொஞ்சம் நாட்டு நடப்பு பேசலாம்...

வேலையில்லா திண்டாட்டம்...
இது பரவலாக எல்லாரும் சொல்லும் வார்த்தைதான்... ஆனால்...
இதை ஒரு பட்டம் படித்த இளைஞன் புலம்பிக் கொண்டே சொன்னால் எப்படி இருக்கும்...
என்பதே இம்மாதப் போட்டியின் விதி...
இஞ்சினியர் வக்கீல் இதுபோன்ற சொற்களை பயன்படுத்தியும் எழுதலாம்...
அசத்துங்கள்...

.

எ- கா வெண்பா

.

மேச்சுவந்த மாட்டவித்து
 மேல நகையவித்து
டீச்சராக லான்னு
 டிகிரிவாங்கி - மூச்சுமுட்ட
மத்தவேல பாத்தே
 மனசு வருந்தாம
வித்தமாட்ட வாங்கிடலா
 மா...?

.

பொதுவான விதிகள் : -

நேரிசை வெண்பா மட்டுமே எழுதவேண்டும், பல வெண்பாக்கள் எழுதினாலும் அதில் ஒன்று மட்டுமே தேர்வு செய்யப் படும், முடிந்த அளவு ஒருவர் பயன்படுத்திய பாடுபொருளை இன்னொருவர் பயன்படுத்த வேண்டாம். ***வெண்பாவிற்குக் கீழ் எழுதியவர்கள் தங்கள் பெயரினை தமிழில் எழுதுதல் அவசியம்.***

அசத்துங்கள் கவிஞர்களே....

வழக்கம்போல் களம் முழுவதும் கவிஞர்களின் கற்பனைக்கு. மனதில் பட்டதை பட்டென்று போட்டு உடையுங்கள் வெண்டளையில். எல்லாம் கற்பனைக்கே... அது நகைச்சுவையானாலும் ஏற்றுக் கொள்ளப்படும். உங்கள் மனம் சொல்வதை சரியான இலக்கணத்தோடு பகிருங்கள் போதும்.

காலத்தை கவிஞர்கள் கையில் ஒப்படைக்கிறோம்...

தளர்வுகள் : - தனித்தமிழில் தான் பாடல் அமையவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. வாசித்தால் புரியும்படி இயல்பான வார்த்தைகளோ, அல்லது வட்டார வழக்குச் சொற்களோ பயன்படுத்தலாம். தளை தட்டாமல், புணர்ச்சி இல்லாமல், பிழையின்றி எழுதினாலே சிறப்பு.

என்றும் தமிழுடன்....

ஆசிரியர் தமிழ்நெஞ்சம், மற்றும் ஆசிரியர் குழு.

# மஸ்தான் மகன் மாதவன்

நாகை ஆசைத்தம்பி

வேளாங்கண்ணி பஸ் ஸ்டாண்டுக்குள்ள பஸ் நொழையும்போது பஸ் நிக்குற எடம் வரைக்கும் பின்னாடியே ஓடணும் அப்பதான் குடும்பத்த ஓட்டமுடியும் ஆனா மஸ்தான் அப்படி ஒன்னும் ஓடுறது இல்ல ஏன்னா,,, அவரால ஓடமுடியாது எழுபது வயசுக்கு மேல ஆச்சு அதனால பஸ் எந்த எடத்துல நிக்குமுன்னு தெரியும் அங்கேயே அவரு நின்னுக்குவாரு ஏதோ ஒரு நாளைக்கு ஒன்னு ரெண்டு வாய்ப்பு வரும் செல நேரம் ஒன்னுமே வராது சனி ஞாயிறுன்னா கொஞ்சம் அதிகமாவே வரும் அந்த நம்பிக்கையில் அவரு இருப்பாரு

வேளாங்கண்ணி மார்டின் லாட்ஜிக்கு ஆளு பிடிக்கிற வேலைதான் மஸ்தான் செய்றாரு அதுக்கொன்னும் சம்பளம் கெடையாது ஒரு ஆளு பிடிச்சா நூறு ரூவா கெடைக்கும் அண்ணே, அக்கா, அய்யா, அம்மான்னு கெஞ்சனும் எங்க லாட்ஜில எல்லா வசதியும் இருக்கு பாதுக்காப்பானது வாடக கம்மிதான்னு பொய் சொல்லனும் இப்படியெல்லாம் கெஞ்சுறதும் பொய் சொல்றதும் அருவருப்பா இருந்தாலும் எழுபது வயசுக்கு மேல என்ன வேல செய்யமுடியும் ஏதாவது செய்துதானே ஆகணுமுன்னு செய்றாரு ஏதாவது வசதி இருந்தா பெட்டிக்கட வச்சாவது பொழைக்கலாம் அதுக்கும் அல்லா ஒன்னும் தரல அல்லா எல்லாருக்கும் அள்ளி அள்ளி கொடுக்குறாரு நமக்கு கிள்ளிக்கூட கொடுக்கலின்னே கெடைக்கிற வேலய செய்றாரு

வேளாங்கண்ணி மாதா கோவில் மட்டுமல்ல கடற்கரையும் இருப்பதாலே அது ஒரு சுற்றுலாத்தளம் அதனால தெனமும் மக்கள் வந்துக்கொண்டே இருப்பாங்க இந்த ஆளுப்பிடிக்கிற வேலை செய்றவங்க செலப்பேரு வீட்டுக்கு எப்பவாவதுதான் போவாங்க ஆனா மஸ்தான் லோக்கல் தான் என்பதாலே தெனமும் வீட்டுக்கு போய்டுவார் விடியக்காலையில நாலு மணிக்கு வந்திடுவார் ராத்திரி வெகு நேரமாகிதான் வீட்டுக்கு போவார் ஏதாவது வருமானம் சாஸ்தி கெடச்சா வீட்டுக்கு தின்பண்டம் வாங்கிட்டு போவார் வருமானம் கம்மின்னா எதுவும் வாங்கமாட்டார் கெடைக்கிறத அவரோட மனைவிக்கிட்ட கொண்டி கொடுத்திடுவாரு தெனமும் நாலு மணிக்கு வருவதானாலே வீட்லராத்திரிமட்டும்தான் சாப்பிடுவார் காலையிலும் மத்தியானமும் சாப்பிடமாட்டார் ஏதாவது ஒரு டீ வடை சாப்பிட்டுவிட்டு இருந்திடுவார் பெரும்பாலும் குழாய் தண்ணிதான் அவருக்கு பசி போக்குறது இன்னைக்கும் அப்படிதான் அவரு டீயும் வடையும் வாங்கிட்டு தனியே வந்து உட்காந்து வடையை எடுத்து வாயில வைக்கும்போது ஒரு அழுக்கடைந்த தலைவாராத கிழிந்த சட்டைப்போட்ட ஒரு பையன் அவரு வடையையே பார்த்தான் அவரு அவனப்பாத்து வேணுமான்னு கேட்டார் அவனும் வேணுமுன்னு சொல்லாமல் தலையை மட்டும் வேணுமென்ற தோரணையில் ஆட்டினான்

அவன கிட்டக்க கூப்பிட்டு இந்தா

சாப்பிடுன்னு டீயையும் வடையையும் கொடுத்து சாப்பிடச் சொன்னார் அவசர அவசரமாக சாப்பிட்டான் மெதுவா தின்னுடான்னு சொன்னவர் நீ யாருடா எந்த ஊரு உன் பேரு என்னன்னு கேட்டாரு அவன் எதுவும் சொல்லல தேம்பி தேம்பி அழுதான், அழாதே மொதல்ல சாப்பிடு அப்புறம் சொல்லலாமுன்னு அவன்கூடவே உட்கார்ந்தார் அவன் கண்ணீரை துடைத்து விட்டார் அவன் சாப்பிட்டு முடித்து கீழயே குனிந்தப்படி இருந்தான் அவன் முதுகை தட்டிக்கொடுத்தப்படி கவலப்படாதேடா தம்பி ஒன்னப்பத்தி விவரம் சொன்னா ஏதாவது உதவி செய்யலாமுன்னுதான் கேட்டேன் சொல்லுடா தம்பின்னார்

'என் பேரு மாதவன் எனக்கு ராமநாதபுரம் பக்கத்துல ஒரு கிராமம் நான் வீட்டுக்கு தெரியாம ஓடி வந்துட்டேன் இங்க வந்து ரெண்டுமூனு வருசமாகுது இங்கதான் மெயின்ரோட்ல உள்ள ஒரு ஓட்டலில் வேல பாத்தேன் இப்போ எனக்கு கை கால் எல்லாம் செரங்கு வந்திட்டு அதனால வேலைக்கு வேண்டாமுன்னு சொல்லிட்டாங்க அங்க வேலை பாத்தப்போ கெடச்ச சம்பளத்துல மிச்சம்பன்னி கொஞ்சம் வச்சிருந்தேன் வேலக்கி வேண்டாமுன்னு சொன்னதும் என்ன பன்றது எங்கப்போறதுன்னு தெரியாம இங்க வந்து ராத்திரி படுத்திருந்தேன் காலையில எழுந்திரிச்சி பாத்தா என் பணத்த காணல'ன்னு அழுதான்

'அடா விடுடா பணம் போனா போகட்டும் சம்பாசிக்கலாம் நான் வேல வாங்கித்தரேன் செய்யுரியா'

'செய்யுறேன் என்ன வேலங்க'

'ஓ...தொர என்ன வேலன்னு சொன்னா தான் செய்வீங்களோ'

சிரித்தான்

'நான் செய்யுற வேலதான்டா இங்க பஸ் வரும்போது வெளியூர் ஆட்கள் எல்லாம் வருவாங்க அவங்களுக்கு தங்குறதுக்கு ரூம் வேணுமான்னு கேட்டு லாட்ஜுல கூட்டிக்கொண்டு விடணும் அப்படி விட்டா ஒனக்கு நூறு ரூபா கொடுப்பாங்க அதே மாதரி உன் திறமையை பொறுத்து சம்பாதிக்கலாம்'

'சரி செய்றேங்க... ஆனா நான் எங்க தங்குறது'

'அதுக்கென்னடா நீயும் எம்புள்ள மாதரிதானே என் வீட்லயே வந்து தங்கு சாப்பிடு மனுசனுக்கு மனுசன் இந்த உதவிக்கூட செய்யலன்னா வேற யாரு செய்வா,,? மொதல்ல நீ குளி அதோ தெரியுது பாரு நகராட்சி குளிக்குமிடம் அதுல போயி அஞ்சி ரூபா கொடுத்தா குளிக்கலாம் குளிச்சிட்டு வா பேசிக்கலாம்'

'குளிக்கலாம் ஆனா மாத்துறதுக்கு துணி வேணுமே'

'ஓ...அதுவேற இல்லியா சரி கொஞ்சம் இரு ஒரு பஸ் வருது பாத்துட்டு வாரேன் நம்ம வீட்டுக்கு போகலாமுன்னு' பஸ்ஸை நோக்கிப்போனவர் வெறுங்கையோடு திரும்பி வந்து வாடா போகலாமுன்னு மாதவனை கையைப் பிடித்தப்படி அழைத்துச்சென்றார்

அழைத்துச்சென்றவர் நேரா ஒரு துணிக்கடைக்கு போய் ஒரு பேண்டும் சர்டும் அவன் அளவுப்பாத்து வாங்கிக் கொடுத்து இப்போதைக்கு இத போட்டுக்கோ மாத்துக்கு வீட்ல நெறய கைலி இருக்கு அத போட்டுக்கலாம் அப்புறம் பணம் கெடச்சா இன்னொரு செட்டு துணி வாங்கிக்கலாம் வா போகலாமுன்னு

கூட்டிக்கிட்டு போனார் அவன் எதுவும் பேசல எதோ யோசனையோடவே நடந்தான்

வீட்ல போய் கதவை தட்டினதும் மஸ்தான் மனைவி பர்வீனா கதவை திறந்தவர்கள் அந்த பையனை உற்றுப் பாத்துவிட்டு என்னங்க இந்நேரத்துக்கே வந்துட்டீங்க ஏதாவது ஒடம்பு சரியில்லை யான்னு கேட்டுக்கிட்டே அது யாருங்க ன்னு கேட்டாங்க

'அவன் பேரு மாதவன் வெளியூர் பையன் ஊரவிட்டு ஓடியாந்துட்டான் வேலை வெட்டி ஒன்னுமில்ல பாக்க பாவமா இருந்துச்சி நமக்குதான் யாரு மில்ல அவனுக்காவது நாம இருப்போ மேன்னு கூட்டியாந்தேன் அவன் இங் கேயே நம்மக்கூட இருக்கட்டுமே ஒருத்த ருக்கு ஒருத்தர் துணையா இருக்கமில்ல'

'என்னங்க நீங்க,,, அவன் யாரு என்னான்னு தெரியாம இவன எப்படி இங்கே வச்சிக்கமுடியும்,,,?'

'இதுல என்னம்மா இருக்கு அவன் ஒரு மனுசன் நம்மளும் மனுசன் அடைக்கலம் கொடுக்குறதுக்கெல்லாம் ஆதார் கார்டு பாத்தா விசாரணை பன்ன முடியும்,,, போ... போ... நல்லது நெனச்சா நல்லதே நடக்கும் நாளைக்கு மார்டின் லாட்ஜில சேத்துவிட்டா அவன் பொழச்சிட்டு போறான் நமக்கும் அனுசரணையா இருக்குமே'

'சரி... சரி... இருக்கட்டும் தம்பி நீ போயி அந்தா இருக்குப்பாரு பாத்ரூம் அதுல குளிச்சிட்டு வா சாப்பிடலாம்' என்றார் பர்வீன்

'பர்வீனா அவன் பேரு மாதவன் நீ பேர் சொல்லியே கூப்பிடலாம் அவனுக்கு ஒரு கைலியும் ஒரு துண்டும் பீரோவில இருந்து எடுத்துக்கொடு அவன்கிட்ட துணிமணி எதுவுமில்ல நான்தான் மாத்துக்கு ஒரு பேண்டு சர்ட் வாங்கிக் கொடுத்தேன் கைலியும் துண்டும் கொடுத்தா குளிச்சிட்டு வருவான் அப்புறம் வேலக்கிப் போயி அவனுக்கு வேண்டியத வாங்கிக்கிட்டும்'

'அப்படிங்களா இதோ எடுத்து கொடுக்கிறேன்... இந்தா மாதவா குளிச்சி ரொம்ப நாளிருக்கும்போல நல்லா குளிச்சிட்டு வா சாப்பிடலாம்'

'சரிங்கம்மா இதோ குளிச்சிட்டு வந்துடு றேன்'

மாதவன் குளிச்சிட்டு வந்ததும் மூனுப் பேரும்சேர்ந்துஉட்காந்துசாப்பிட்டார்கள் வால மீனு கருவாடும் மாங்காயும் மணக்கும் அருமையான கொழம்பு சாப்பிட்டதும் மாதவன் மஸ்தான் பாய் தூங்குடா நாளைக்கு காலையில வேலக்கி அழச்சிட்டு போறேன்னு சொன்னாரு ரொம்ப நாளைக்கு அப்புறம் பாசத்தோடு பரிமாறியதும் பாதுகாப்போடு தூங்கு வதும் படுத்த உடனே மாதவன் தூங்கிப் போனான்

மறுநாள் காலையில் மார்டின் லாட்ஜில் மேனேஜருக்கிட்ட பேசி வேலைக்கு சேர்த்து விட்டார் மாதவனும் ஓடி ஓடி ஆட்களைப் பிடித்தான் சேர்ந்தவுடனே நிறைய கஷ்டமர்களை பிடித்ததால் வருமானமும் வந்தது நல்ல பெயரும் கிடைத்தது எல்லாரும் மாதவனை மஸ்தான் மகன் மஸ்தான் மகன் என்றே அழைத்தார்கள் மாதவனும் மஸ்தானை அப்பா என்றே அழைத்தான் கிடைக்கும் வருமானத்தை பரவீன் அம்மா கையில் கொண்டு வந்தே கொடுத்தான். அவங் களும் அவன் பணத்தை தனியே பத்திரமாக சேர்த்து வைத்தார்கள் இப்படியே ஆறு மாதம் கடந்தது இப்படியே போகும்

போதுதான் அந்த துயர சம்பவம் நடந்தது

ஒரு ஞாயிற்றுக்கிழமை கும்பல் அதிகமா இருந்தது ஆட்கள் பிடிக்க அலைந்ததில் மஸ்தான் பாய் வெய்யில் தாங்காமல் மயக்கம் வந்து கீழே விழுந்தவர்தான் அதே இடத்தில் மவுத் ஆகிப்போனார் மாதவனுக்கு உலகமே அழிந்துவிட்டதுப்போல உணர்வு, முகத்தை தொங்கப்போட்டு உட்காந்து இருந்தான் காரியங்களுக்கு வந்த உறவி னர்களில் ஒருவர் பர்வீன் தம்பி 'அக்கா இனி வயசான காலத்தில் இங்க தனியா இருந்து என்ன பன்னப்போற நம்ம ஊருக்கே வந்திடுன்னு கூப்பிட்டார் பர்வீன் மறுத்துவிட்டார் என்னைய நம்பி எம்புள்ள மாதவன் இருக்கான் அவன கடைசி வரைக்கும் அவன் நம்மள விட்டு போகணுமுன்னு தோனும்வரை நீதான் அவன பாத்துக்கணுமுன்னு மச்சான் சொல்லி இருக்கார் அவன விட்டுட்டு நான் வரமுடியாதுன்னு சொன்னாங்க... மாதவன் ஓடிப்போய் அவங்கள கட்டிப்பிடிச்சி அம்மான்னு ஓலமிட்டு அழுதான் எல்லோரும் திகைத்துப் போனார்கள் எங்கிருந்தோ வந்தவனுக்கு இந்த அம்மா மேல எவ்வளவு பாசம் இனி பர்வீனைபத்தி கவலை இல்லை என்றே பேசிக்கொண்டார்கள் எல்லோரும் பர்வீனுக்கு ஆறுதல் சொல்லி புறப்பட்டார்கள்

மாதவன் கண்ணீரை துடைத்தப்படி திண்ணையில் உட்காந்தான்,,, நாகூர் தர்ஹா முஸ்லிம் ஜனங்களுக்கு முக்கிய மான இடம், வேளாங்கண்ணி மாதக் கோவில் கிருஸ்துவ மக்களுக்கு முக்கியமான இடம், சிக்கல் சிங்காரவேலன் ஆலயமும், எட்டுக்குடி முருகன் கோவிலும் இந்து மக்களுக்கு முக்கியமான இடம், மூன்று மதங்களுக்கும் முக்கியமான கோவில் இங்க இருந்தும் ஒரு சாதி பிரச்சனையோ, மதப்பிரச்சனையோ இந்த மண்ணில் இதுவரை வரல அதுக்கு காரணம் இது போன்ற மனிதர்களை நேசிக்கும் மனிதாபிமானம் மிக்க இதுப்போன்ற மனிதர்கள்தான் காரணமோ என்று யோசித்தவன் கடைசிவரை பர்வீன் அம்மாவை நாம்தான் காப்பாத்த வேண்டும் அதக்குப்பிறகும் இந்த புனித பூமியிலே நம்ம உயிரும் போகட்டுமென்ற சிந்தனையோடு துண்டை உதறி தோளில் போட்டப்படி திண்ணையைவிட்டு எழுந்திரிச்சான்,

---

**தமிழ்நெஞ்சம்**

## இதழில் எழுதுபவர்கள் கவனத்திற்கு...

பிரதிமாதமும் மாதத்தின் முதல் வாரத்தில் இதழ் வெளிவரும். அதற்கேற்றார் போல 20 தேதிக்கு முன்பாக ஆக்கங்களை அனுப்புதல் நல்லது. அதற்குமேல் வரும் ஆக்கங்கள் அடுத்த இதழில் சேர்க்கப்படும். முந்திக்கொள்வது நல்லதல்லவா?

தவிர, ஆக்கங்களை எழுதிவிட்டு அவசர, அவசரமாக ஆக்கத்தி ற்கான தலைப்பு, மற்றும் எழுதியவர் பெயர்கூட எழுதாமல் அனுப்பிவிடுகிறீர்கள். அப்படியானவைகள் நிச்சயமாக இதழில் இடம் பெறச்செய்ய முடியாது.

இயன்றவரை மின்னஞ்சலில் அனுப்பிவைக்கும்படி தய வாய்க் கேட்டுக்கொள்கிறோம். முகநூல் உள்பெட்டி, வாட்ஸ் அப் போன்ற தொடர்பில் ஆக்கங்களை அனுப்புவதைத் தவிர்க்கவும்.

**மின்னஞ்சல் : editor@tamilnenjam.com**

# பலி

பரபரப்பான பிரதான சாலையின் முடுக்கில்
எப்போதும் பூக்கள் விற்பவள்
இறுகிய ஆடையில் தன்
முலைகள் தெரியும்படி
அனைவருக்கும் உணர்த்திக் கொண்டிருப்பாள்
தொழில் ரகசியம்.

சர்வதேச தொழிற் கண்காட்சியில்
வாடிக்கையாளருக்கு வலைவைத்தலில்
அரங்குகளில் அங்கம் பிதுங்கும்
நவீன உடைகளில் முன் நிற்கும்
பேரிளம் பெண்கள்.

கதைக்கு வரும்
மிகைப்படுத்தப்பட்ட பெண்ணோவியம்
இதிலேதான் இருக்கிறது இதழ்களின்
வணிக வெற்றியும்.

தொழில்முறைப் போட்டிகளில்
சிதையும் கற்புநெறி
எப்போதும் பலியாகும் பாலினம்
பெண்.

**எஸ்.மைக்கேல் ஜீவநேசன்**
தேனி.

---

சிலரின் வாழ்வில் இழப்புகளை
இயல்பானதாக மாற்றிவிட்டு...
இலக்கியத்தில் இலகுவாக
இடம் பெற்று விடுகிறது காலம்.
இலக்குகளை அடைவதற்குள்
எத்தனை மெனக்கெடல்கள்...!

சா.நாகூர் பிச்சை
(வாழ்வியல் கவி)
துபாய்



# பஞ்சுமிட்டாய்

கடற்கரை மணல்வெளியில்
நடந்து சென்றே வெகுதூரம்!
வண்ணத்தில் வாழ்வைத் தேடும்
பஞ்சுமிட்டாய் வியாபாரம்!

விற்றால் கிடைக்கும்
அன்று பகல் உணவு!
இல்லையென்றால் உணவும்
வாழ்வும் பகல்கனவு!

சிறுவர்களை நம்பி
கடை விரிக்கும் தம்பி!
சீக்கிரமா விற்றுமுடி
மழை வருவதற்கு முந்தி!

கடையில்லை குடையில்லை
மழை வந்தால் சந்தி!
நாள்தோறும் தொழில் செய்யும்
உடன்பிறப்பே சிந்தி!

**லீ.லியாகத்அலி.**

# அவளின்றி அமையாது உலகு

அகிலத்தை ஆட்கொள்ளும்
அற்புதப் பிறவி அவள்
பிஞ்சு மழலை
முதன்முதலாய்க்
கண்டு கொண்ட
பள்ளிக் கூடம்

அன்பு கலந்து
அமுதூட்டி வளர்க்கும்
அட்சய பாத்திரம்

அரிச்சுவடி கற்பித்த
முதன்மை ஆசான்.

தாயாய்த் தோழியாய்
தாதியாய் மேதையாய்
மேதினியில் மேம்பட்டவள்.

அவள்
ஆழி
அருவி
ஊற்று
ஊருணி
தண்மை தந்து
தாகம் தீர்த்து
மகிழ்ச்சி தருபவள்

அன்பின் இலக்கணம்
அதற்கென்றே
ஆட்பட்டும்
அடிமைப்பட்டும்
கிடப்பவள்.
அரவணைப்பே அவள் நீர்மை.

தாய்மை யெனும்
தனித்துவம் காப்பதால்
தூய்மை பெறுகிறது
அவள் பெண்மை.

காதலின் மொழி அவள்
உச்சரிக்கும் போதெல்லாம்
இன்பமளிக்கும்
பெட்டகம்

அவள்
இல்லறத்தில் நல்லறம்
இருண்ட இதயங்களிலும்
ஒளியூட்டும்
குலவிளக்கு.

அவள்
தண்மதி
தாரகை
தினமும் பிரகாசிக்கிறாள்.

அவள்
கற்பூரம்
மெழுகுவர்த்தி
எப்போது தன்னைப்
பிறருக்காகவே
அர்ப்பணம் செய்கிறாள்.

அவள் மழை
அவள் பனி
அவள் தென்றல்.
அனைவருக்கும்
இதம் தருகிறாள்.

அகிலமே அவள்
அவளே அகிலம்
அவளின்றி அமையாது
இவ்வுலகு.

ஹாஜறா கலீலுர் ரஹ்மான்
காத்தான்குடி, இலங்கை.



# உயிருக்கு உயிரானவ



**கவிமுகில் சுரேஷ்**
**தருமபுரி**

எப்படிப்பட்ட தைரியமான மனிதனையும் அன்பின் துரோகம் வலிமை இழக்க செய்துவிடும்

அன்பின் வலிமை கோழையை வீரனாக்கும் வீரனை கோழை ஆக்கும் அன்புக்கு ஆக்கும் சக்தியும் உண்டு அழிக்கும் சக்தியும் உண்டு

அன்பு காதலெனும் பேரில் வீர மிகுந்த மன்னர்களையும் மண்ணில் வீழ்த்தி புதைத்தது உண்டு

காதலுக்கு மகத்துவம் உண்டு காதலுக்கு வல்லமை உண்டு காதலுக்கு காலத்தை மாற்றும் திறன் உண்டு காதல் கல்யாணம் மனதை சிற்பமாக்கும் சிற்பமான மனதை சிதறி போகவும் செய்யும்

இப்படிப்பட்ட நிலையில் வாழ்வில் முதலாவது காதலா அல்லது அடைய வேண்டிய லட்சியங்களா எனும் இரண்டு கேள்விகளுக்கு இடையில் மாட்டிக் கொண்டு முடிவெடுக்க முடியாமல் திணறிக் கொண்டிருந்தான் மோகன்

மோகன் சராசரி உயரம் அழகானவன் பேச்சில் இனிமையை பிரசவிப்பவன் அவனோடு பேசும் பெண்கள் அவனின் காந்தார சிரிப்பில் மயங்கி உடனே காதலிக்க தொடங்குவார்கள் அப்படிப் பட்ட வசீகரம் அவன் குரலில் அவன் பேச்சில் இருந்தது

அதற்காக அவன் மோசமானவன் என்று சொல்லி விட முடியாது அவன் பேச்சும் குரலும் இயல்பானது

அவனின் அத்தைப் பெண் மாலினி சிறு வயது முதல் கொண்டே அவன் மீது அன்பு கொண்டிருந்தாள்

இருந்தும் என்ன பயன் இவன் போஸ்டல் கிராஜுவேட் வரை படித்திருந்தான் அவள் பனிரெண்டாம் வகுப்பு தாண்ட படாத பாடு பட்டு முடித்தவள்

உண்மையான காதலுக்கு அறிவு, நிறம், திறமை முக்கியத்துவம் அல்ல அன்பின் மையத்தில் இவைகள் எல்லாம் ஆட்சி செய்ய இயலாது

மோகனை எத்தனையோ பேர் விரும்பினார்கள் அத்தனை பேருக்கும் அவனைப் பகிர்ந்து அளிக்க இயலாது மனிதன் என்ன தெருநாயா எல்லோருக்கும் உடலை பகிர்ந்து கொள்ள உடலின் இச்சைகளுக்கெல்லாம் உட்படாதவன் இந்த மோகன்

ஆத்மார்த்தமாய் தன்னை காதலிக்கும் மாலினியின் வசதி வாய்ப்பு தராதரம்

எதுவும் மோகன் பார்க்கவில்லை அவளின் முழுமையான அன்பை மட்டுமே அவன் நோக்கினான்

மாலினி நிறத்தில் மாநிறம் மனதில் வெள்ளைக் கமலம் முக லட்சணம் உடையவள்

மோகனின் நண்பர்கள் அவனிடம் 'உனக்கு மாலினி செட்டாகாது உன் அழகுக்கு உன் வசதி வாய்ப்புகளுக் கெல்லாம் எத்தனையோ பெண்கள் போட்டி போட்டு நிற்கிறார்கள் நீ ஏன் முட்டாள்தனமாய் அவளை சிறுவயது கொண்டு நினைத்துக் கொண்டிருக்கிறாய்' என்று அவனிடம் சொல்லுவார்கள்

அவனோ 'என் மாலினி பற்றி எனக்கு தெரியும் அவளுடைய அன்பு எப்படிப் பட்டது என்பது என்னால் மட்டுமே உணர முடியும் புரிந்து கொள்ள முடியும் சும்மா அட்வைஸ் பண்ணாதீங்க வேற ஏதாவது பேசுங்கடா' என பேச்சை மாற்றி விடுவான்

இப்படி இருக்க மோகனிடம் ஐ லவ் யூ சொல்லி செல்வி எனும் ஒரு பெண் தொடர்ந்து பல வருடங்களை நச்சரித்துக் கொண்டிருந்தாள்

மோகன் வேலை செய்யும் எல்ஐசி ஆபீஸில் கிளரிக்கல் ஜாப்பில் இருக்கிறவள் அந்த செல்வி

மோகன் அவளை பார்த்து 'வீண் கனவு வேண்டாம் என்னைக் குறித்து எதுவும் சிந்திக்க வேண்டாம் வேறொரு நல்ல பையனை பார்த்து திருமணம் செய்து கொள்' என பல தடவை அவளுக்கு அட்வைஸ் செய்து பார்த்து விட்டான் அவளோ அதற்கெல்லாம் அசைந்து கொடுப்பதாய் இல்லை



## என் இதயம் உன்னிடம்

இதயம் இல்லாதவன் என
வசைபாடி சென்றார்கள்
அவர்களுக்கு தெரியாது
என் இதயம் உன்னிடம்
உள்ளது என்று..

என் இதயம் உன்னிடம்
இருப்பது அறியாமல்
இறைவனுக்கு தருவதாய்
சொல்லி விட்டேன்
என்ன செய்வது...

என் இதயம் உன்னிடம்
இருப்பது தெரியாமல்
தமிழன்னையும் போட்டி போட்டு
வந்தால் நான் என்ன செய்வது....

இதயம் இல்லாமல்
தவித்து வருகிறேன்
உன் இதயத்தை
கொஞ்சம் இரவல் தா

**- செ. இலட்சுமணக்குமார்**
ஈரோடு

செல்வி பொறுத்துப் பொறுத்து பார்த்தால் 'மோகன் நீ எனக்கு கிடைக்கா விட்டால் நான் மருந்து குடித்து செத்து விடுவேன்' என்று சொன்னாள்.

'நான் என்ன உனக்கு துரோகமா செய்தேன் நீயாய் எல்லாம் நினைத்துக் கொண்டு கற்பனை கோட்டை கட்டிக் கொண்டால் அதற்கு நானா பொறுப்பு நீ செத்தால் செத்துவிடு அதற்கு நான் ஒன்றும் செய்ய முடியாது' என்று அவன் அலட்சியமாய் கூறிவிட்டான்

செல்வியின் ஒரு தலை காதல் அந்த ஆபீஸில் இருந்த அத்தனை பேருக்கும் தெரியும் இருந்தும் யார் என்ன செய்ய முடியும்

செல்வி சொல்வதை அவன் ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லை

அடுத்த நாள் ஆபிஸில்

'செல்வி இன்னைக்கு ஏன் ஆபீசுக்கு வரவில்லை' என்று ஆபீஸ் பாயிடம் கேட்டான்

'சார் உங்களுக்கு தெரியாதா அவங்க இப்ப ஹாஸ்பிடல்ல உயிருக்காக போரா டிட்டு இருக்காங்க' என்றான்

'அடப்பாவி மகளே சும்மா சொல் றேன்னு நெனச்சேன் உண்மையா இப்படி பண்ணிட்டியா' என பதறி அடித்துக் கொண்டு ஆபீஸ்ல இருந்து புறப்பட்டான்

தங்கம் ஹாஸ்பிட்டல் நோக்கி விரைந் தான் அவள் இருக்கும் வார்டுக்கு சென்று அவளைப் பார்த்தான் டாக்டரிடம் நலம் விசாரித்தான்

டாக்டர் 'இப்ப பரவாயில்ல' என்றார்

'ஏன் இப்படி ஆனது' என அவளின் அம்மாவிடம் விசாரித்தான் 'குழம்புல பல்லி விழுந்திடுச்சு அது தெரியலப்பா சாப்பிட்டு மயங்கி விழுந்துட்டா உடனே ஹாஸ்பிடல் கொண்டு வந்துட்டோம்' என்றாள்

அப்பா நான் என்னவோ ஏதுன்னு பயந்துட்டேன் என மனதுக்குள் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டான்

அங்கேயே ஒரு மணி நேரம் காத்தி ருந்தான் கண் விழித்த செல்வி மோகனைப் பார்த்து 'என்னை பார்க்க வந்ததற்கு நன்றி' என்றாள்

மோகனுக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை 'உடம்ப நல்லா பாத் துக்கோ' என்றான்

அந்த நிலைமையிலும் சிரித்தபடி 'பயப் படாதீங்க மோகன் அங்க நிற்கிறார் அவர்தான் என்னை கல்யாணம் பண்ணிக்க போறவர்' என தூரத்தில் ஒற்றை காலில் கோல் ஊன்றி நின்றிருந்த மாற்றுத் திறனாளியை காட்டினாள்

நல்லது வாழ்த்துக்கள்' என்று அவளிடம் சொல்லிவிட்டு அந்த மருத்துவமனையை விட்டு வெளியே வரும்போது என் மன துக்குள் செல்வியை குறித்து நான் சொல்லிக் கொண்டது

என் மனதை விட உன் மனது பெரிது உன் மனது தாராளம் கொண்டது உன் அன்பு உண்மையானது நீ காதலித்தது உண்மை மரிக்கும் கோழை அல்ல காதல் நிறைவேறாவிட்டால் என்ன வாழவா முடியாது என துணிவு கொண்டவள் நீ அடுத்த கட்டத்திற்குள் நகர்ந்து கொண்டாய் இனி நீ என் உயிருக்கு உயிரான சினேகிதி என்றான்.

# வாய்த்தல்

- சந்திரா மனோகரன்

நெடிய காலம் போல் நீண்டுகொண்டே இருக்கிறது
அந்தக் கரு நாழிகை.
கற்றானை போன்ற அவன் முகத்தில்
நாளைய நிமிடங்களுக்கான நம்பிக்கையில்லை
கற்பலகைகளில் எழுதும் கனவுகளின் தோற்றத்தை
அவன் விரும்புவதுமில்லை
தீப்பொறி முழங்கும் மயில் தோகைக் கண்களின்
இமைகள் பற்றி எரிகின்றன
மினுமினுப்பற்ற தோல்மீது எவரும்
பொருட்படுத்தாத ஒளி பதுங்கி கொள்கிறது

எது உண்மை …எது தவறு ?
அவனுக்குள் இறந்துபோன கேள்விகள்
இன்னும் சிறிது காலத்தில் இந்த உலகம்
கல்மழை போல் உடைந்து விடும்

தெருமுனையில் பேரொலி
மரபு வழி கீச்சுக்குரல்களின் அழைப்பு
குழந்தைகள் ..அறிவிலிகள் ..பேதைகள்

அடியொத்தகாலத்தில் சுட்டெரிக்கும் சூரியனும்
சிரசை வருடும் வெப்பக்காற்றும்
அவனுக்கு ஏலாப்பு

விரக்தியின் விளிம்பு நிலையில் சிற்றளவு
வாழ்க்கை ஒரு வழுக்குப் பாறை
பாசாங்கற்ற அவன் இதயத்துக்குள்
பொங்கலாடும் மகிழ்ச்சி

வசீகரமற்ற வாழ்க்கையை எப்படியோ
எளிதாக்கிக் கொள்வது மட்டும் சாத்தியம்

எல்லாப் பிழைகளும் ஒன்றுகூடி
எங்கே தவறினோமென
ஆராய்ச்சியில் ஈடுபட
காரணத்தைக் கண்டறியும்
குழு அமைக்கத் தீர்மானித்தன
பிழைகளின் நடத்தை தொடங்கி
நகர்ந்திடும் விசாரணையின் முடிவில்
பெருகத் தொடங்கின
குழுவின் பிழைகள்.
தவறுகளின் காரணத்தைத் தேடும்
தடம்மாறும் மனிதனைப் போல
தமக்குள்ளே நீளும் கரங்களுக்குள்
தொலைந்துபோன நிம்மதியைக் கண்டு
பிழைகளின் மேனிகளில்
முளைத்திடும் முட்களில்
வழியும் குருதிகள்
உருமாறத் தொடங்கின
பேராசைப்பிசாசென.

- இளையவன் சிவா
நரசிங்காபுரம்

**காதலர் தினத்தைக் கொண்டாடுவதை விட**
**உங்கள் காதலைக் கொண்டாடுங்கள்.**

**காதலைக் கொண்டாடுவதை விட**
**உங்கள் இணையரைக் கொண்டாடுங்கள்.**

**உங்கள் இணையரைக் கொண்டாடுவதை விட**
**உங்களுக்கான தருணங்களை**
**கொண்டாடுங்கள்.**

**நிபந்தனையற்ற அன்பின் அழகியலை**
**உணரத் தொடங்குங்கள்**
**காதலே உங்களைக் கொண்டாடும்.**

- அ.ஈடித் ரேனா

# நோன்பு

ஹிஜ்ரி 2 ஆம் ஆண்டு நோன்பு கடமையாக்கப்பட்டது. இஸ்லாத்தின் முக்கியமான ஐந்து கடமைகளில் நோன்பும் ஒன்றாகும்.

நோன்பை அரபியில். 'அஸ்ஸவ்ம்' என்ன அழைப்படுகின்றது.

அஸ்ஸவ்ம் என்ற அரபுப் பதத்தின் நேரடிப் பொருள் தடுத்துக் கொள்ளல் என்பதாகும். ஒரு முஸ்லிம் கிழக்கு வெளுத்தது முதல் அன்றைய சூரிய அஸ்தமனம் வரை உண்ணல், பருகல், பாலியல் நுகர்வு ஆகியவற்றிலிருந்து தன்னைத் தடுத்துக் கொள்வதாகும். குறிப்பிட்ட கால எல்லையினுள் இவற்றில் ஈடுபட்டால் நோன்பு முறிந்து விடும். ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டுள்ள போதிலும் சிலரது உடல்நிலை என்பவற்றைக் கருத்திற் கொண்டு நோன்பு நோற்பதிலிருந்து அவர் களுக்கு விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது.

நோன்பு துறக்கும் வேளையில் துஆப்பிராத் தனையில் ஈடுபடுவது விரும்பத்தக்கது. நபியவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள்: 'நிச்சயமாக நோன்பாளிக்கு நோன்பு துறக்கும் போது மறுக்கப்படாமல் அங்கீகரிக்கப்படும். ஒரு பிரார்த்தனை ( கிடைக்கும் பாக்கியம் ) உண்டு' ( நூல் : இப்னுமாஜா ). ரமழான் மாதத்தில் கடைசி பத்து தினங்களில் ஒற்றை நோன்பு வரக்கூடிய நாள் ஒன்றில் லைலதுல் கத்ர் எனும் சிறப்பு நாள் ஒன்று உள்ளது. லைலதுல் கத்ர் என்பது ஒரு வருடத்தின் மிகச் சிறந்த இரவாகும். அவ்விரவில் செய்யப்படும் நல்லமல்கள் ஆயிரம் மாதங்கள் நல்லமல்கள் செய்வதை விடவும் சிறந்தாகும்.

இறைத்தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்:

'நோன்பைத் தவிர ஆதமுடைய மகனின் ஒவ்வொரு செயலும் அவனுக்குரியதாகும்! நிச்சயமாக, நோன்பு எனக்கு (மட்டுமே) உரியது; அதற்கு நானே கூலி கொடுப்பேன்!' என்று அல்லாஹ் கூறினான்.

நோன்பு ( பாவங்களிலிருந்து காக்கும் ) கேடயமாகும்! எனவே, உங்களில் ஒருவர் நோன்பு நோற்றால் அவர் கெட்ட பேச்சுகள் பேச வேண்டாம்! கூச்சலிட்டு சச்சரவு செய்ய வேண்டாம்! யாரேனும் அவரை ஏசினால் அல்லது அவருடன் சண்டையிட்டால் 'நான் நோன்பாளி!' என்று அவர் சொல்லட்டும்!

முஹம்மதின் உயிர் எவன் கைவசம் உள்ளதோ அவன் மேல் ஆணையாக! நோன்பாளியின் வாயிலிருந்து வீசும் வாடை அல்லாஹ்விடம் கஸ்தூரியின் வாடையை விட விருப்பமானதாகும். நோன்பாளிக்கு இரண்டு மகிழ்ச்சிகள் உள்ளன. நோன்பு துறக்கும்பொழுது அவன் மகிழ்ச்சியடைகிறான்; தன் இறைவனைச் சந்திக்கும் பொழுது நோன்பின் காரணமாக அவன் மகிழ்ச்சியடைகிறான்.'

என அபூ ஹுரைரா ( رضي الله عنه ) அறிவித்தார்.

ஸஹீஹ் புகாரி : 1904.

அத்தியாயம் : 30. நோன்பு

**பஹ்ரியா பாயிஸ்**
ஹெம்மாதகம, இலங்கை




# மலைக்க வைக்கும் மலேசியா

**பகுதி – 10**

**மருத்துவர்.க.கலைவேந்தன்**

சுற்றுலாப்பயணிகளின் சொர்க்க பூமியாக லங்காவி தீவுகள் கொண்டாடப்படுகின்றன.

தீபகற்ப மலேசியாவின் வடக்கிழக்கில் உள்ள 104 தீவுகளை உள்ளடக்கியது லங்காவி தீவு. அந்தமான் கடலும் மலாக்கா நீரிணையும் இணையும் இடத்தில் லங்காவி தீவு அமைந்திருக்கிறது...

லங்காவித்தீவு கடற்கரையில் பல்வேறு விதமான விளையாட்டுகள் பல்வேறு விதமான பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்து இருக்கின்றன... குறிப்பாக கழுகு கடற்கரை என்று அழைக்கப்படுகின்ற அந்த கடற்கரையில் இயற்கையை அனுபவித்ததை மறக்கவே முடியாது... அந்த கடற்கரையின் ஓரத்தில் இருந்து கொண்டு அந்த வெள்ளை மணலை பார்க்கும்பொழுது அங்கேயே படுத்து உறங்கிவிடலாமா என்றுகூட தோன்றியது... அந்த அளவிற்கு பால் வெள்ளையாக பாய் விரித்தது போன்று எந்தவிதமான ஒரு அசுத்தமும் இல்லாமல் அந்த கடற்கரையை பார்க்கும் பொழுது உண்மையில் மனதிற்கு மிகவும் பேரானந்தமாக இருந்தது.. கடற்கரையின் ஓரத்தில் இருந்து தண்ணீரில் உள்ளே இருக்கின்ற கற்கள் தெரிகின்ற அளவுக்கு அவ்வளவு தெளிவான ஒரு நீராக இருந்தது... அந்த நீரில் அங்கு விற்கப்படுகின்ற படகுகளை வாடகைக்கு எடுத்துக் கொண்டு படகு சவாரி செய்தது என்பது ஒரு பரவசமான அனுபவம், அந்த கடலுக்கு மிக வேகமாக செல்லக்கூடிய போட் மூலமாக பயணம் செய்தது என்பது ஒரு மிகச்சிறந்த பரவச அனுபவத்தை கொடுத்ததாக இருந்தது... மிகவும் அற்புதமான அனுபவத்தை உள்ளடக்கிய அந்த லங்காவின் தீவில் கழுகுகள் மலை என்று சொல்லப்படுகின்ற அதற்கு இலக்கணமாக நிறைய கழுகுகள் இருக்கின்றன... கண்டிப்பாக லங்காவி செல்லக்கூடிய ஒவ்வொருவரும் நிச்சயமாக அந்த கழுகு கடற்கரையை சுற்றி பார்க்க வேண்டியது மிக மிக அவசியம்....

அதைப்போலவே நிறைய பொழுது போக்கு அம்சங்களை உள்ளடக்கிய அந்த லங்காவின் தீவில் மிக முக்கியமானது அந்த லங்காவின் மேம்பாலம்...

லங்காவி ஸ்கை பாலம் என்பது மலேசியாவில் 125-மீட்டர் (410 அடி) வளைந்த பாதசாரி கேபிள்-தங்கும் பாலமாகும் , இது 2005 இல் நிறைவடைந்தது. புலாவ்வில் உள்ள குனுங் மாட் சின்காங்கின் உச்சத்தில் கடல் மட்டத்திலிருந்து 660 மீட்டர் (2,170 அடி) பாலம் தளம் உள்ளது. லங்காவி, கெடாவில் உள்ள லங்காவி தீவுக்கூட்டத்தின் முக்கிய தீவு லங்காவி கேபிள் காரை முதலில் டாப் ஸ்டேஷனுக்கு எடுத்துச் செல்வதன் மூலம் லங்காவி ஸ்கை பாலத்தை அடையலாம், அங்கு ஸ்கைகிளைடு எனப்படும் சாய்ந்த

லிப்ட் பார்வையாளர்களை டாப் ஸ்டேஷனிலிருந்து கீழே பாலத்திற்கு அழைத்துச் செல்கிறது.

லங்காவி கேபிள் காரின் டாப் ஸ்டேஷன் மற்றும் ஸ்கை பிரிட்ஜை இணைக்கும் வகையில் ஸ்கைகிளைடு எனப்படும் ஒரு சாய்வு மற்றும் ஒரு புதிய பிளாட்பார்ம் கட்டப்பட்டு , பயணிகளை ஸ்கை பிரிட்ஜிற்கு அழைத்துச் சென்றது. இது டிசம்பர் 2015 இல் திறக்கப்பட்டது.

SkyGlide கேபினில் 12 பயணிகள் அல்லது ஒரு பயணத்திற்கு 1,050 வஆ (2,310 யிணு) சுமை ஏற்ற முடியும், மேலும் சவாரி சுமார் இரண்டு நிமிடங்கள் நீடிக்கும். ஸ்கைகிளைடுக்கான டிக்கெட் டாப் ஸ்டேஷனில் தனியாக விற்கப்படுகிறது.

டாப் ஸ்டேஷன் மற்றும் ஸ்கை பிரிட்ஜ் இடையே செங்குத்தான மற்றும் குறைவான பாதுகாப்பான மலைப்பாதையில் பார்வையாளர்கள் 10-20 நிமிடங்கள் நடக்க ஸ்கைகிளைடுக்கு மலிவான மாற்றாகும்.

2006 இந்திய திரைப்படமான டான்: தி சேஸ் பிகின்ஸ் அகெய்ன் கடைசி காட்சி இங்கு படமாக்கப்பட்டது. 2007 ஆம் ஆண்டு அஜித் குமார் நடித்த பில்லா தமிழ் படமும் இங்கு படமாக்கப்பட்டது.

அதைப்பற்றிய தொழில்நுட்ப தகவல் இங்கு பார்க்கலாம்

- வளைந்த நடைபாதையின் மொத்த நீளம்: 125 மீ (410 அடி)
- பாலத்தின் பரப்பளவு: 500 சதுர மீட்டர் (5,400 சதுர அடி)
- கோபுர உயரம்: 82 மீ (269 அடி)
- பைலன் அடித்தளம்: கடல் மட்டத்திலிருந்து 605 மீ (1,985 அடி)
- கோபுரத்தின் உச்சி: கடல் மட்டத்திலிருந்து 687 மீ (2,254 அடி)

அந்த 3 ஆர்ட் என்று சொல்லப்

கடாரம் கொண்டான் செல்லும் வழியில் முனிஸ்வர் கோவில்



படுகின்ற பல்வேறு விதமான ஆர்ட் 3 வண்ண புகைப்படங்கள் நிறைந்த லங்காவில் மிகவும் சிறப்பான விஷயமாக அது இருந்தது...

**பாரடைஸ் 3ம் அருங்காட்சியகத்தில் உள்ள கலை, லங்காவி கண்ணோட்டம்**

பாரடைஸ் 3டியில் உள்ள லங்காவி ஆர்ட் என்பது சுமார் 200 கலைப்படைப்புகள் மற்றும் ஒளியியல் மாயையுடன் கூடிய சுவரோவியங்களைக் கொண்ட ஒரு ஊடாடும் 3ம் அருங் காட்சியகமாகும். மலேசியாவில் உள்ள மிகப்பெரிய 3டி அருங்காட்சியகம் மற்றும் உலகின் இரண்டாவது பெரிய அருங்காட்சியகம், ஒன்பது ஊடாடும் மண்டலங்களில் பரவியுள்ள 3-மாடி கட்டிடத்தில் அமைந்துள்ளது.

லங்காவி கேபிள் காருக்கு அடுத்ததாக அமைந்துள்ள ஆர்ட்டி இன் பாரடைஸ் 3டி அருங்காட்சியகத்தில் உள்ள கலைப் படைப்புகள் 23 முன்னணி கொரிய கலைஞர்களால் கைவண்ணத்தில் வரையப் பட்டுள்ளன. 3டி அருங்காட்சியகத்தின் முக்கிய சிறப்பம்சம் கோலாலம்பூர் வான லையின் மனதைக் கவரும் ஓவியம் ஆகும்.

அதிகபட்ச கொள்ளளவு : 25

லங்காவி கடற்கரையின் மிக முக்கிய மான பகுதியில் உணவு அருந்துவதற்கான பல்வேறு விதமான உணவுக் கூடங்கள் அமைந்துள்ளன ஒரு நாள் முழுவதும் சுற்றிப் பார்த்துவிட்டு அலுத்து போகின்ற வேளையில் உணவு அருந்த வேண்டும் என்று நினைப்பவர்களுக்கு பல்வேறு விதமான கடைகள் பல்வேறு விதமான உணவு முறைகளோடு அந்த தெரு முழுமையாக நீண்டிருக்கின்றது நாங்களும் பல்வேறு இடங்களை சுற்றிப்



லங்காவியின் தொங்கு பாலம்

பார்த்துவிட்டு இரவு ஒரு இரண்டு மணி நேரம் நடந்து சென்று பல்வேறு உணவகங்களை பார்வையிட்டோம் ஒரு சில உணவுகளை சாப்பிட்டு பார்த்தோம் இந்த கட்டுரையின் வாசகர்களுக்காக உணவகங்களை பற்றிய விவரங்களை இந்த பகுதியில் தருகின்றேன்

பாரம்பரியமாக சமைக்கப்படும் கடல் உணவுகளில் உள்ளூர் விருப்பமான உணவுகளை வழங்கும், மிளகாய் நண்டு குறிப்பாக சுவையாக இருக்கும். சேவை நட்பு மற்றும் உடனடி மற்றும் வளிமண்டலம் அழகானது.

நவீன ஆசிய மற்றும் மேற்கத்திய உணவு வகைகளை வழங்குகிறது. இந்த பார் பழைய மற்றும் புதிய உலகங்களில்

இருந்து பல்வேறு வகையான ஒயின்களை வழங்குகிறது மற்றும் அவர்களின் சூரிய அஸ்தமனத்தின் போது, இரவு உணவிற்கு பிந்தைய காலப்பகுதியில் கருப்பொருள் காக்டெய்ல்களை வழங்குகிறது.

லைட்ஹவுஸ் உணவகம் (பாண்டாய் தெங்காவின் விளிம்பு) கடற்கரையில் அருமையான உணவு அற்புதமான காட்சிகள்.

மலேசியாவின் முன்னாள் பிரதம மந்திரி துன் டாக்டர் மகாதீர் முகமதுக்கு சொந்தமான ஜப்பானிய பாணி பேக்கரி & பிஸ்ட்ரோ. தரமான ரொட்டிகள் மற்றும் முழு உணவுகள். துறைமுகம் மற்றும் படகுகளின் அற்புதமான காட்சி, குறிப்பாக நீங்கள் காலை உணவு அல்-ஃப்ரெஸ்கோவை வெளியே வைத்திருந்தால். கவனமுள்ள ஊழியர்கள். காபி மற்றும் ஆரஞ்சு சாறுடன் துனுக்கு பிடித்த காலை உணவு செட் (2 மென்மையான வேகவைத்த முட்டைகள், ஒரு கிண்ணம் மட்டன் கறி மற்றும் கெட்டியான வறுக்கப்பட்ட ரொட்டி) முயற்சிக்கவும்.

நிதானமாக காலை உணவை சாப்பிட நல்ல இடம். யூனி4 இலிருந்து ரொட்டி. (நவம்பர் 2022 இல் புதுப்பிக்கப்பட்டது)

பபாடம் இந்திய உணவு (Pantai Cenang (நீருக்கடியில் உலகிற்கு அருகில்) அரபு உணவுகளையும் வழங்கும் இந்திய உணவகம்.

சன்சூத்ரா உணவகம், ஜேஎல் தெலுக் பாரு (பந்தை தேங்கா) சிறந்த மேற்கத்திய உணவுகளையும் வழங்கும் ஃபைன் டைனிங் உணவகம். நீங்கள் ஆட்டுக்குட்டியின் தீவிர ரசிகராக இருந்தால், அவற்றின் ஆட்டுக்குட்டியை நீங்கள் கண்டிப்பாக முயற்சிக்க வேண்டும். மென்மையானது மற்றும் சுவைகள் நிறைந்தது. அதன் பங்கும் பெரியது! ருசியான உணவை விரும்புவோருக்கு நல்லது.

இப்படியாக லங்காவில் உள்ள மிகச் சிறப்பான இடங்களை எல்லாம் சுற்றி பார்த்துவிட்டு மீண்டும் எப்படி சென்றோமோ அதே மாதிரி துறை முகத்திற்கு வந்து அந்த கப்பல் வழியாக மலேசியா சென்றடைந்தோம்...அங்கிருந்து மிக முக்கியமான ஒரு பகுதியாக கங்கைகொண்ட சோழபுரம் என்று எப்படி இங்கு ஜெயங்கொண்டத்தில் உள்ளதோ அதுபோல கடாரம் கொண்டான் என்று ராஜேந்திர சோழன் வெற்றியாக அழைக்கப்படுகின்ற கேடா மாநிலத்தில் உள்ள அந்த ஊரை பார்ப்பதற்காக சென்றோம். இன்றும் பல சிதிலமடைந்த கோயில்கள் அங்குள்ளன... செல்லும் வழியில் பிரசித்தி பெற்ற பாம்பு கோவிலை பார்த்து ரசித்தோம்...

மலேசியாவில் அமைந்திருக்கும் முருகர் கோவில், முருகர் சிலையால் மட்டுமல்ல அதன் புகழ்- பெருமைகளாலும் உயர்ந்து நிற்கிறது. மலேசிய முருகரை பார்த்து ரசிக்கும் நாம், அங்கே அமைந்திருக்கும் பழமையான பினாங்கு கோவிலை மறந்து விடுகிறோம். இது பழமையான கோவில் மட்டுமல்ல... பாம்பும், புகையும் சூழ்ந்த விசித்திரமானக் கோவிலும் கூட. பினாங்கு தீவில், சன்கை குளாங் பகுதியில் தான் இந்தக் கோவில் அமைந்திருக்கிறது. சீன கட்டிடக்கலையில் கம்பீரமாக நிற்கும் இந்தக் கோவில், 18-ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. சூர் சோ காங் என்ற மன்னரின் நினைவாக இந்தக் கோவிலை கட்டியிருக்கிறார்கள். காங் மன்னர் பாம்புகளுக்கும், பூச்சிகளுக்கும் கரிசனம் காட்டியவர். அரண்மனைகளில் அவருடன்

சேர்ந்து பாம்புகளும், பூச்சிகளும் வாழ்ந்ததாக ஒரு வரலாறு கூறப்படுகிறது.

இப்படி பாம்புகளுடன் அதிகமாக பொழுதைக் கழித்த காங் மன்னர், 65 வயதில் இறந்துவிட்டார். அதற்கு பிறகு தான் இந்த பாம்புக் கோவில் கட்டப்பட்டுள்ளது. இதை புத்த துறவி ஒருவர் கட்டி முடித்திருக்கிறார். மன்னரின் நினைவாக கட்டப்பட்டதால், நன்கொடை பலவழிகளில் இருந்தும் வந்திருக்கிறது. முதலில் காங் கோட்டை யாக கட்டப்பட்ட இந்த இடம், பாம்புகளின் படையெடுப்பால் பாம்புக் கோவிலாக மாறிவிட்டது. அதனால் காங் மன்னர் சிலையுடன், பாம்புகள் தங்குவதற்கும், தொங்குவதற்கும் ஏற்ற வசதிகளையும் செய்திருக்கிறார்கள். இதனால் கோவில் முழுக்க பாம்புகள் நெளிந்து கொண்டிருக்கின்றன.

பாம்பு நீச்சல் குளம் : கோவிலுக்குள் நுழைந்ததுமே ஒரு பிரமாண்ட மண்டபம் இருக்கிறது. அதில் அமர்ந்தபடி தான் வழிபாடு நடக்கிறது. பக்தர்கள் வழிபடு கையில் அவர்களை நோக்கி பாம்புகள் ஊர்ந்து வருகிறது. அப்படி நிகழ்ந்தால், நினைத்த காரியம் கைகூடும் என்பது பக்தர்களின் அசைக்க முடியாத நம்பிக் கையாகும். இந்த நிகழ்வு எல்லா சமயங்களிலும் நிகழ்வதில்லை. ஒருசில பக்தர்களுக்கு மட்டுமே இந்த பாக்கியம் கிடைக்குமாம். இங்கு வழிபட்டவுடன் கோவிலுக்கு பின்புறத்தில் இருக்கும் பாம்பு குளத்திற்கு பக்தர்கள் செல்கிறார்கள். அதில் கொடிய விஷமுள்ள பாம்புகள் வாலை சுருட்டியபடி படுத்திருக்கின்றன. உலகில் இருக்கும் அதிபயங்கரமான விஷப்பாம்புகளை, இந்த நீச்சல் குளத்தில் பார்க்கலாம். ஆனால் அவை அனைத்தும் விஷம் நீக்கப்பட்ட பாம்புகள்.


ஆர்ட் கேலரியில்

ஆம்! 1950-ம் ஆண்டு வரை இந்தக் கோவிலில் விஷப்பாம்புகள் வளர்க்கப் பட்டன. ஆனால் தற்போது விஷம் நீக்கப்பட்ட பாம்புகளே இருக்கின்றன. இருப்பினும் பாம்பு கடித்து பக்தர்கள் இறந்த செய்தி பழைய வரலாற்றிலும் இல்லை. ஏன்.. இப்போதும் கூட பாம்புகள், பக்தர்களைப் பார்த்து கோபத்துடன் சீறியதாகவும் செய்தி இல்லை. அந்தளவிற்கு பாம்புகளை காங் மன்னர் வளர்த்திருப்பதாக பக்தர்கள் கூறுகிறார்கள்.

புகை சூழ்ந்த கோவில் : நீச்சல் குளம், மரக்கிளை என கோவில் முழுக்க பாம்புகள் படர்ந்திருந்தாலும், அவை தூங்குவதற்காக பிரத்யேக ஸ்டாண்ட் அமைப்புகளை கோவில் நிர்வாகம் அமைத்திருக்கிறது. இரும்பு கம்பிகளை சுருள் வடிவில் வளைத்து, பாம்பு தூங்கும் இடமாக மாற்றி இருக்கிறார்கள். காலை முதல் மாலை வரை அங்கும் இங்குமாக சுற்றித்திரியும் பாம்புகளின் எண்ணிக்கை, இரவில் குறைந்து விடுகிறதாம். அதற்கான மர்மம் என்ன என்பது இதுவரை விளங்காமல் இருக்க, பினாங்கு கோவிலை மேலும் மர்மமாக்குகிறது.. ஊதுபத்தி புகை மண்டபங்கள்.

கோவிலை பாம்புகள் நிறைத்திருப்பது போல, புகை மண்டலமும் சூழ்ந்தி ருக்கிறது. புத்தமத வழிபாட்டில் அதிகம் பயன்படுத்தப்படும் ஊதுபத்தி கலாசாரம், பினாங்கு கோவிலிலும் பின்பற்றப்படுகிறது. அதனால் பாம்பு களுக்கு இணையாக புகை மண்டலமும் சூழ்ந்திருக்கிறது. எந்நேரமும் கோவில் புகைமூட்டமாக இருப்பதால், பினாங்கு கோவிலை... 'பினாங்கு வானம்' என்றும் அழைக்கிறார்கள். இதுதவிர 'அசூர் மேகம் நிரம்பிய கோவில்' என்றும் சிறப்பிக்கிறார்கள். பாம்புகள் பக்தர்களை கடிக்காமல் இருக்க, கோவில் நிர்வாகத்தினர், ஊதுபத்தி புகைகளை பயன்படுத்துவதாகவும், புகையினால் பாம்புகள் மயங்கி கிடப்பதாகவும் ஒருசிலர் புகார் தெரிவித்தாலும், பாம்பு கோவிலில் பக்தர்கள் கூட்டம் அலைமோதிய வண்ணமே இருக்கிறது. காங் மன்னரின் பிறந்த நாள் தான், இந்த ஆலயத்தின் திருவிழாவாக கொண்டாடப்படுகிறது. அந்த சமயங்களில் இந்தோனேஷியா, சீனா, ஜப்பான், இந்தியா என பல நாடுகளில் இருந்து பக்தர்கள் குவிகிறார்கள். இவர்களுக்கு போட்டியாக திருவிழா சமயங்களில் விஷப் பாம்பு களும் குவிவதுதான் ஆச்சரியம். என்ன தான் பாம்புக் கோவிலாக இருந்தாலும், பாம்புகளை கையில் தூக்கவோ, தொடவோ பக்தர்களுக்கு அனுமதியில்லை. ஏனெனில் பாம்புகளை பாதுகாக்கவும், பக்தர்களை பாதுகாக்கவும் ஏராளமான சட்டத்திட்டங்களை கோவில் நிர்வாகம் கடைப்பிடித்து வருகிறது.

அந்த கோயிலை பார்த்துவிட்டு அங்கே சில பொருட்களை வாங்கிக்கொண்டு அடுத்த பகுதிக்கு செல்ல ஆரம்பித்தோம் மலேசியா முழுவதும் நான் ஏற்கனவே சொன்னது போல பரவி கிடப்பது புத்தர் கோயில்களும் பல்வேறு விதமான சீன கலாச்சாரங்களும் அங்கு பரவி இருப்பதை நம்மால் முழுமையாக உணர முடிகிறது அதன் தொடர்ச்சியாக கடாரம் கொண்டான் பகுதியை நோக்கி பயணத்தை தொடங்கினோம்... அடுத்த பகுதியில் ராஜேந்திர சோழன் காலடி பதித்த கடாரம் கொண்டானை பற்றி பார்க்கலாம்...

(தொடரும்)

# கூரைத்துளை வெளிச்சத்தில் நுழைகிறார் கடவுள்

எனது இருண்மை படர்ந்த வீட்டில்
பூட்டியக் கதவுகள் ஏராளம்
ஒவ்வொரு கதவிலும்
பலநூறு வடிவமில்லா கடவுள்கள்

ஆமையோட்டின் வடிவத்தில்
தளம் பதித்த இல்லத்தில்
ஒவ்வொரு கூரைத்துளை வழியாக
கதவு திறவாமல் வந்தமர்கிறார் கடவுள்

எண்ணிக்கையற்ற துளைகளில்
புள்ளிகளாயானது வீடு
புகுந்து செல்ல மனமின்றி
ஆங்காங்கு அமர்கிறார் கடவுள்

திறவுகோல் மறந்திட்ட கரங்களுக்கு
ஒளியினால் துளைத் திறக்கிறது
பூட்டிய வீட்டுக்குள் கேட்காமலே
வந்து சேர்கிறார் கடவுள்

இருள்கிழித்து அருட்பாலிக்கிறார்
சமத்துவ விடியலில் கடவுள்
மடிந்தக் கூரைகளில் விழுந்து
உருகி விழுகிறார் வறுமை வீட்டில்

மழை பெய்தும் வெயில் படர்ந்தும்
பெரிதாக ஒன்றும் உணர்த்தவில்லை
ஒரு துளி நீரும் ஒரு புள்ளி ஒளியும்
கடவுள் தந்த பிறப்பின் வழியே

வெயிலின் வெள்ளத்தில்
மின்சாரமில்லா ஒளி விளக்குகள்
அணைத்து தொடக்கிவிடத்தான்
விரல் நுனியின் சொடுக்கிகளில்லை

எனக்கென்று விருப்பம் கொண்டு
வாழ்ந்திடும் வீட்டில்
தவமற்று நுழைகிறார்
கதிரவனின் விரல்களாய் கடவுள்

யாருக்கும் இதுவரை
தரிசனம் இப்படி கொடுத்ததில்லை
எனதில்லின் கூரைத்துளைகளின்
புள்ளிகளில் ஏராளக் கடவுள்கள்

திறப்பதற்குத்தான் துளை
நுழையும் அளவிற்கே தடம்
நட்சத்திரக் கூரைத்துளையில்
இடறி நுழைகிறார் ஏழ்மைக் கடவுள்

**சே கார்கவி கார்த்திக்**
நாகப்பட்டினம்

**மாக்கோலம்**

❤

**பூக்கோலம் இட்டார் போல**
**புவிமீதில் வந்த மர்ந்து**
**பாக்கோலம் என்னை இங்கே**
**பைந்தமிழால் பாட வைத்து**
**நாக்கோலம் உந்தன் யாக்கை**
**நகர்வதைக் கண்டு பேச**
**மாக்கோலம் இடும்நீ எந்தன்**
**மனம்நிறை மங்கை அன்றோ**

**- தமிழ்நெஞ்சம் அமின்**

# வாய்ப்புகளைத் தவற விடாதீர்கள்!

## – ஒசூர் மணிமேகலை

நான் அடிக்கடி மாணவர்களுக்குக் கூறும் அறிவுரை 'வாய்ப்புகளைத் தவற விடாதீர்கள். You cannot step the river twice' என்று கூறுவேன்.

2022ஆம் ஆண்டு எனக்கு ஏற்பட்ட அரிய வாய்ப்பைத் தவறவிட நினைத்த அனுபவம் மறக்க முடியாதது. என் இதயத்தில் 95% அடைப்பு ஏற்பட்டு, சிகிச்சைபெற்று, ஸ்டெண்ட் (stent) வைத்து மருத்துவரின் அறிவுரைப்படி படுக்கையில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த நேரம். குடும்பமே கலங்கி நின்ற நேரம். கைப்பேசி, இணையம் அனைத்தும் என்னிடமிருந்து தொலைவில் வைக்கப்பட்ட நேரம். எந்த அழைப்பு வந்தாலும் பிள்ளைகளும் கணவரும் எடுத்துப் பேசுவார்கள். அந்த நேரத்தில்தான் மிக முக்கியமான அழைப்பு வந்தது. என் கணவர் எடுத்துப் பார்த்து என்னிடம் தந்தார்.

உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் உள்ள உதவிப் பேராசிரியர் சுலோச்சனா அவர்கள் பேசினார். 'பாரதியாரின் 50 பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துத் தர முடியுமா அம்மா' என்று கேட்டார். என் உடல்நிலை பற்றி தெரிந்ததும் கவலையுடன் 'பரவா யில்லைமா.. நீங்கள் ஓய்வு எடுங்கள்' என்று ஆறுதல் கூறினார்.



அரிய வாய்ப்பு. இந்த வாய்ப்பை விடுவதற்கு எனக்கு மனமில்லை. அவரிடம் 'என்னால் முடிந்த ஒரிரு பாடல்கள் மொழிபெயர்த்து தருகிறேன்..' என்றேன். என் ஆர்வத்தை அறிந்த அவர் 'முடிந்தால் கொடுங்கள் ஒரு வாரத்தில். இல்லாவிட்டால் பரவாயில்லைமா' என்றார்.

வந்த வாய்ப்பை, அதுவும் மகாகவி பாரதியின் பாடலை மொழிபெயர்க்கும் வாய்ப்பை விட்டுவிடக்கூடாது என்று என் குடும்பத்தினரிடம் பேசினேன். என்மீது உள்ள அக்கறையில் கணவரும் பிள்ளைகளும் தயங்கினர். இருந்தாலும் தமிழுக்காக, என் மன அமைதிக்காக எழுத அனுமதி அளித்தனர்.

மகிழ்வுடன் பாடல்களைத் தேர்வு செய்து மொழிபெயர்க்கத் தொடங்கினேன். ஆஞ்சியோ பண்ணியதால் கை வலி. பேனா பிடித்து எழுத முடியவில்லை. கண்ணீர் வந்தது. பக்கம் பக்கமாக நாளும் எழுதிக் குவிக்கும் என் விரல்கள் நடுங்கின. குரல் பதிவின் மூலம் மிக மெதுவாகப் பதிந்து, பதினோரு பாடல்களை மொழி பெயர்த்து, குறிப்பிட்ட தேதிக்குள் அவருக்கு மின்னஞ்சலில் அனுப்பி வைத்தேன். மிகுந்த வியப்புடன் என்னைப்



பாராட்டி மகிழ்ந்தார் உதவிப் பேராசிரியர் சுலோச்சனா அவர்கள்.

ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட பாரதியாரின் 100 பாடல்கள், அழகிய வண்ண ஓவியங்களுடன், அழகான முகப்பு அட்டையுடன் உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டு அந்நூலை எனக்கு அனுப்பி வைத்திருந்தனர். ஆனந்தக் கண்ணீர் பெருகியது எனக்கு. கணவரும்,பிள்ளைகளும்,நட்பும், உறவும் மகிழ்ந்து வாழ்த்தினர்.

இன்று முழு நலம் பெற்று உற்சா கத்துடன் இயங்கிக் கொண்டிருக்கும் எனக்கு அந்நூலில் இடம்பெற்ற எனது பதினோரு பாடல்களின் மொழிபெயர்ப் பைக் காணும் போதெல்லாம் தமிழன்னை யும், மகாகவியும் எனக்களித்த விருதாகும் கருதுகிறேன்.

அந்நூலைக் காண்பவர்கள் அனைவரும் ‘இது உங்கள் வாழ்நாள் சாதனை‘ என்று பாராட்டும் பொழுது மனம் நெகிழ்கிறது.

அன்று அந்த வாய்ப்பை நான் தவற விட்டிருந்தால், இப்படிப்பட்ட காலத்தால் அழியாத பதிவில் என் பெயர் இடம் பெற்று இருக்க முடியாது. எந்தச் சூழ்நிலையிலும் வாய்ப்புகளை தவறவிடக்கூடாது என்று இந்நிகழ்வை மற்றவர்களுக்குக் கூறி ஊக்கமூட்டுகிறேன்.

# அறிவினை இழந்ததாய் அறிகப் பெண்ணே

காம முள்ள காணியோ மகளிர்
நாமம் கெட்டு நாட்டோர் திட்ட
பேதை யிங்குப் பேதைமை யடைந்து
பாதை மாறியே பயண மேகி
நீதி கேட்டு நிற்பதால் பயனென்
சாதிச் சங்கமும் சகலமும் துணையாம்
வேதனை விலகா(து) வேண்டும் வாக்குச்
சாதனை யிதுவோ சான்றோர் கேள்வி
தானாய் வந்து தாவிதான் வலையில்
மீனாய் சிக்கி மீன்விழி மடந்தையும்
அரிவையும் எழில்மிகுத் தெரிவையும் மகளிரும்
புரித லின்றியே புரிந்தது சரியா
நாண மில்லா நாவினால் மகனைப்
பேணும் தாயைப் பேயென விளிப்போம்
விண்ணை எட்டும் விந்தைகள் புரிய
எண்ணம் சீர்பெற எதுவும் செய்யாப்
பெற்றோர் ஆணையும் பெரிதாய் என்ன
கற்கச் சொன்னீர் காண்கிலேன் இனியும்
அற்புதப் படைப்பெனும் அழகுப் பெண்ணின்
கற்பெனும் புனிதம் காப்பது கடமை
உன்னரும் கணவரும் உனக்கென வருவார்
தன்னரும் உடலினைத் தழுவிட அவரிடம்
உரிமையைக் கொடுத்திட உவப்புடன் திருமணம்
புரிதல் மட்டும் புண்ணியம் தருவதாம்
நெறியினைப் பிறழ்ந்து நீசெயும் தவறினால்
அறிவினை இழந்ததாய் அறிகப் பெண்ணே
கண்ணியம் மனத்தில் காத்து நின்று
மண்ணிலே சிறந்த மாண்பினைப் பெறுக
பெண்ணை மட்டும் பெற்றது கடனா
கண்ணைப் போலக் காப்பதும் கடனே!


**- கவியன்பன் கலாம்**

# விதியின் விளையாட்டு

எழுத்துச் செம்மல் **இரஜகை நிலவன்**

இன்னும் அவளுக்குள் படபடப்பாக இருந்தது. மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியது. வேகமாக சமையலறைக்குள் சென்று ஒரு செம்பு தண்ணீர் மொண்டு குடித்தாள். இருந்தாலும் படபடப்பு அடங்கவில்லை.

சூரி வெளிநாட்டிலிருந்து நாளைக்கு வருகிறான். அவன் போன் பண்ணிய போது அவளுடைய கணவன் மகேஷ் இல்லாததால் அவள் தான் போனை எடுத்தாள்.



இரஜகை நிலவன்

'ஹலோ, நான் சூரி பேசுகிறேன்.'

'...'

'யார் பேசறீங்க? அண்ணன் மகேஷ் இருக்காங்களா?'

'நான்... நான் விஜயா பேசுகிறேன்.'

'ஹேய் விஜயா. நீ எப்போது அண்ணன் வீட்டுக்கு வந்தாய். அண்ணன் எங்கே போயிருக்கிறார். அண்ணியைக் கூப்பிடு'

'நான்... சூரி... உங்களுடைய அண்ணி நான் தான்.'

'என்னது?'

'ஆமாம் சூரி.'

'விளையாடுகிறாயா?'

'இல்லை. இது விதியின் விளையாட்டு சூரி, நீங்க சவூதியிலே எப்படி இருக்கீங்க?'

எதிர்முனையில் மவுனமே நிலவ, 'போனை வைத்து விடட்டுமா?' என்றாள் விஜயா.

'சரி... அண்ணன் எங்கே போயிருக்கிறார்?'

'ஆபீஸ், போயிருக்கிறார், என்ன விஷயம்?'

'நான் நாளை மறுநாள் சவூதியிலேயிருந்து கிளம்புகிறேன். என்னை திருவனந்தபுரம் விமான நிலையத்தில் ரிசீவ் பண்ணச் சொல்லு'

'சரி'

'சே! இந்தப் பொம்பளைகளே இப்படித் தான், எனக்காக உன்னாலே இரண்டு வருஷம் காத்திருக்க முடியவில்லையே விஜயா?'

'...'

'அழுகிறாயா? நன்றாக அழு. அது சரி. நம் காதல் விவகாரம் அண்ணன் மகேஷுக்குத் தெரியுமா?'

'ம்..ஹூம்'

'ஏன் மறைத்தாய்?'

'சொல்லத் தோன்றவில்லை எனக்கு'

'என் மனைவியாக்க நினைத்த உன்னை அண்ணி என்று அம்மா ஸ்தானத்தில் கொண்டு வைத்திருக்கிறார்கள். விஜயா திரும்பவும் கேட்டுறேன்.. எனக்காக காத்திருக்க முடியவில்லையா? இல்லை விருப்பமில்லையா?'

'என்னை ஏன் கொல்கிறீர்கள் சூரி?'

'நீ சொன்னதைக் கேட்டு நான் செத்துப் போனேனே விஜயா. எத்தனைக் கனவுகளோடு வீட்டிற்கு புறப்பட்டேன் தெரியுமா?'

'...'

'போனை வைத்து விடட்டுமா?'

'ம் ஹூம்'

'அண்ணனைக் கண்டிப்பாக வரச் சொல்லி விடு. எனக்கு ஊருக்கு வர விருப்பமில்லை. நான் வருவதை கேன்சல் பண்ணி விடட்டுமா?'.

'ஏன்?'

'உன்னை என் மனைவியாக்கத் துடித்து... சரி இப்போது என் அண்ணி நீ, இனி உங்களிடம் மரியாதையாகப் பேசக் கற்றுக்கொள்ள வேண்டும். சரி நாளை கழித்துச் சந்திக்கலாம்' என்று போனை வைத்தான் சூரி.

போனை வைத்துவிட்டு வந்தவளுக்கு இன்னும் படபடப்பு அடங்கவில்லை. விஜயா அங்குமிங்கும் அலைந்தாள். 'சூரியை எந்த முகத்தோடு பார்க்க போகிறேன். அப்பாவிடம் எத்தனை முறையோ மறுத்துச் சொல்லியும் செத்துப் போவேன் என்று சொல்லி பயமுறுத்தி என்னை மகேஷிற்கு கல்யாணம் பண்ணிக் கொடுத்துவிட்டார்கள்.

எனக்காக காத்திருக்க விருப்பமில்லையா என்கிறான் சூரி. 'அவனுக்கு எப்படி புரிய வைப்பது?. என் நிலைமை இருதலைத் கொள்ளி எறும்பு போலாகி விட்டதே. சே! பெண்ணாகப் பிறந்ததே தவறுதான்'. மேடிட்டிருந்த தன் வயிற்றை தடவிய விஜயா, 'இந்தக் கோலத்தில் பார்த்தால் என்ன நினைப்பான். அதுவும் அவனுடைய அண்ணன் மனைவியாக, அண்ணனின் வாரிசைச் சுமந்து கொண்டு, சே! தற்கொலை செய்து கொள்ளலாம் போலிருக்கிறது' என்று நினைத்தாள்.

'மகேஷிடம் நான் சூரியைக் காதலித்ததை சொல்லி விடலாமா? ஏன் இவ்வளவு நாளும் சொல்லாமல் இருந்தாய் என்று கேட்க மாட்டாரா?' என்று நினைக்கும்போது 'காலிங்' பெல் அடிக்க வந்து கதவைத்திறந்தாள். மகேஷ் ஆபீசிலிருந்து வந்திருந்தான்.

**பூங்கொத்துகள் வாடும்**
**பூ மணம் மாறாது**
**காமம் விட்டு**
**காதல் புரிய**

**சசிகலா விஸ்வநாதன்**

'என்ன ஒரு மாதிரியிருக்கே?' என்று கேட்டான் மகேஷ்.

'ஒண்ணுமில்லே. உங்க தம்பி சூரி சவூதி அரேபியாவிலிருந்து நாளை கழித்து வருகிறாராம். அவரைப் போய் ரிசீவ் பண்ண வேண்டுமாம். போன் பண்ணி னார்'.

'அது சந்தோஷம் தானே. அதற்கு ஏன் ஒரு மாதிரி இருக்கிறாய்?'

'எனக்கு ஒன்றுமில்லை. கொஞ்சம் டயர்டாக இருக்கிறது' என்றாள் விஜயா

விமான நிலையத்தில் கஸ்டம்ஸ் கெடுபிடி அதிகமாக இருந்தபோது டியூட்டி கட்டி தான் கொண்டு வந்த பொருட்களோடு வெளியே வந்த சூரியை வரவேற்றான் மகேஷ்.

'ஏண்டா ரொம்ப மெலிஞ்சு போயிட்டே? ஒழுங்காக சாப்பிடுவாயா?' என்று கேட்டான்.

'அதற்கென்ன... நல்ல சாப்பாடுதான், மனசுதான் சரியில்லை'

'என்ன சொல்கிறாய்?'

'உங்கள் திருமணத்தைக் கூடப் பார்க்க எனக்கு கொடுத்து வைக்கவில்லை. சவூதி அரேபியாவின் போய் மாட்டிக் கொண்டேன்'.

'அதனாலென்ன. இனி தான் அண்ணியை பார்க்கப் போகிறாயே கிளம்பு... வீட்டில் அப்பா, அம்மா எல்லோரும், உன் வருகைக்காக காத்துக் கொண்டிருப்பார்கள்'. இருவரும் மகேஷ், கொண்டு வந்திருந்த காரில் ஏறிக் கொள்ள கார் இடையன்குடி நோக்கிப் பறந்தது.

மனதிற்குள் தவித்துக் கொண்டிருந்தாள் விஜயா. 'நான் சூரியை எப்படி சந்திக்கப் போகிறேன். எத்தனை முறைதான் அவரைத் தவிர்க்க முடியும். காரில் வரும்போது விஜயாவை நான் ஏற்கனவே காதலித்தவன் என்று சூரி மகேஷிடம் சொல்லி விட்டால், வீட்டில் ஒரு பெரிய பூகம்பமே நிகழுமே.

இல்லையென்றால் அவர் இங்கே வந்த பிறகு ஏதாவது தனியான சந்தர்ப்பத்தில், என்னுடன் ஏதாவது பேச முற்பட்டால் விஷயம் யாருக்காவது தெரிந்தால் என்ன செய்ய முடியும். சூரியைக் காதலித்த பாவத்திற்கு அவரைக் கல்யாணம் பண்ணி கொள்ள முடியாத சூழ்நிலையில், நான் உயிர் வாழ நினைத்ததே தவறு' என்று உள்ளுக்குள்ளே புழுங்கிக் கொண்டி ருந்தாள்.

மகேஷுடன் சூரி வீட்டிற்கு வந்து சேர, தான் கொண்டு வந்த பொருட்களை எல்லாம் எடுத்து ஒவ்வொருவருக்காக கொடுத்துக் கொண்டிருந்தான் சூரி.

'இது அண்ணிக்கு' என்று ஒரு சேலையும் ஒரு ஜோடி தங்கக் கொலுசும் கொடுத்தான் சூரி. 'என் மனைவியாக வருவாய். உனக்கு கால்களில் மாட்டி விட வேண்டும் என்று ஆசையாக வாங்கி வந்தேன். இப்போது அண்ணாவின் குழந்தையை வயிற்றில் சுமந்து கொண்டு மாற்றான் மனைவியாக....' என்று பெரு மூச்சு விட்டவாறு நீட்டினான்.

விஜயா வாங்கி கொள்ள மறுக்க, 'புதிதாக கொழுந்தனை பார்த்த வெட்கம். இங்கே கொடு நான் வாங்கிக் கொள்கிறேன்' என்று அண்ணன் மகேஷ் வாங்கிக்கொன்டான்.

அம்மாவிற்கு புடவை. அப்பாவிற்கு

ஸ்பெஷல் கம்பளி, அண்ணாவிற்கு தங்க கலர் வாட்ச், பாண்ட் சரட் என்று கொடுத்து விட்டு எல்லோரும் சாப்பிட உட்கார்ந்தார்கள்.

விஜயா தனக்கு உடல் சரியில்லை என்று சொல்லி விட்டுப் போய் படுத்துக் கொள்ள, அம்மாதான் எல்லோருக்கும் சாப்பாடு பரிமாறினாள்.

வேகமாக சாப்பிட்டு முடித்த சூரி எல்லோரும் சாப்பாட்டு அறையில் இருப்பதை தெளிவாக்கிக் கொண்டு, வேகமாக அண்ணாவின் பெட்ரூமிற்குள் நுழைந்தான.

வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள் விஜயா, 'என்ன?' என்றவாறு.

'எனக்கு உன் மனசு புரிகிறது? உன்னுடைய கட்டாயம்... நீ எந்தச் சூழ்நிலையில் அண்ணாவை மணந்து கொண்டாய் என்று எனக்குத் தெரிந்து விட்டது. நம் நினைவுகளை யெல்லாம் சுட்டெரித்து குப்பையில் போடு. இனி நீ என் அண்ணி, உறவு முறையில் நீ எனக்கு அம்மா மாதிரி இனிமேல் நடந்து கொள்' என்று சொல்ல அந்தப் பக்கமாக வந்த மகேஷ், 'அண்ணி என்னடா சொல்கிறாள்?' என்றான்.

'லேசாகத் தலை வலிக்கிறது என்கிறார்கள். தலைவலித் தைலம் வேண்டுமா என்றேன். வேண்டாம் என்கிறார்கள்' என்று சொல்லிச் சிரித்தான்.

'அப்படியா?' என்று மகேஷ் சொல்ல மார்பில் கை வைத்துக் கொண்டு பெரிதாக பெருமூச்சு விட்டாள் விஜயா, அதில் நிம்மதி பெருமளவில் கலந்திருந்தது.

# தாய்மொழித் தமிழைக் காத்திட எழுக!



தாய்மடி தவழும் இலக்கியச் சான்றுகள்
தமிழர் அடையாளத்தின் தொன்மை வளங்கள்!
முத்தமிழ் போற்றும் தமிழர் மரபு
இத்தரை காணும் இணையிலா உறவு!
உலக அரங்கில் மொழிவழி மாண்பு
உன்னத இருப்பின் அழியா ஈர்ப்பு!
ஒலிவடிவம் காத்து பயணிக்க வருக !
வரிவடிவத் தமிழுக்குப் புத்துணர்வு தருக !

ஐம்பெரும் காப்பியங்கள் செப்பிடும் நிகழ்வில்
அலையென எழுந்திடும் தமிழின் எழுச்சி !
அகமும் புறமும் தெளிந்தே மின்ன
தகைசால் தமிழர் மொழிவழிப் பயில்வர் !
மரபின் தொன்மை மதிப்புறு தன்மை
குறைவிலா தமிழர் கீழடிச் சான்றுகள் !
மாமதுரை நகர் கண்ட சங்கங்களே
மதுரமொழி தமிழின் தொன்மை வரலாறு !

குறள்வழி மாந்தர் கூடலின் தெருக்களில்
குரலெழுப்பி நாளும் வீறுநடை போடு !
செம்மொழித் தமிழெங்கள் மொழியே
செவ்வியல் மொழி எங்கள் தமிழே !
எங்கும் தமிழே முழங்கக் கேட்போம்
எதிலும் தமிழே வழங்க வாழ்வோம் !
அயல்மொழி ஆயிரம் அறிந்தே இருப்பினும்
தாய்மொழித் தமிழைக் காத்திட எழுக !

**முனைவர் கா.ந.கல்யாணசுந்தரம்**

# பறவையின் பயணம்

ஜீ.மைத்ரேயி
வந்தவாசி



ஓர் அழகிய கிராமம் பொன்னூர். அந்த ஊரை ஒட்டி பொன்னூர் மலை, பொன்னர் காடு என்ன பரந்து, விரிந்து காணப்பட்டது. காட்டில் நிறைய விலங்குகள், பறவைகள் என வசித்து வந்தன.

காட்டில் அடர்ந்த உயர்ந்த மரங்கள் இருந்தன.அதில் ஒரு மரம்தான் ஆலமரம். அந்த மரத்தில் நிறைய பறவைக் குடும்பங்கள் வசித்து வந்தன.

பறவைகள் கூட்டு குடும்பமாக வாழ்ந்து வந்தன. அதில் அப்பா, அம்மா,தாத்தா, பாட்டி, இரண்டு குழந்தை பறவைகள் என வாழ்ந்தன.

பறவைகள் ஒற்றுமையாக இருந்தாலும் அப்பா பறவை என்ன சொல்கிறதோ அதையேதான் செயல்படுத்த வேண்டும். அம்மா பறவை எவ்வளவு வேலை செய்தாலும் அதில் ஏதாவது குறை சொல்லிக் கொண்டே இருப்பார்கள். எப்போதும் வீட்டில் அம்மாவையும், அம்மா பறவை செய்யும் வேலையையும் மட்டம் தட்டிக் கொண்டே இருந்தனர்.

இதை அனைத்தையும் பார்த்து வளர்ந்த குட்டி பறவைகளுக்குப் பயம் வரத் தொடங்கியது. வளர, வளர குட்டிப் பறவைகளுக்குப் பயமும் சேர்ந்து வளரத் தொடங்கியது. இதைக் கண்டு அப்பா பறவை என்ன செய்வது என தெரியாமல் தவித்தது.

காட்டில் மற்ற பறவைகள், விலங்குகள் மகிழ்ச்சியாக வானம்பாடியாக பாடியாடி திரிந்தன. குட்டி பறவைக்கு நிறைய கதைகள் சொல்லிக்கொண்டே இருந்தன தாத்தா பறவையும், பாட்டி பறவையும். உலக நடப்புகளையும் இயல்பான வாழ்க்கை வாழ்வதற்கும் சொல்லிக் கொண்டே இருப்பார்கள்.

காட்டில் வசந்த காலம் வந்தது. மிக மகிழ்ச்சியாக அனைத்து

பறவைகளும் குடும்பத்தோடு ஒன்றாக இணைந்து கொண்டாடினார்கள். அப் பொழுதுதான் அண்ணன் பறவை தனது குட்டித் தம்பி பறவையை அழைத்துச் சென்று விழாவைப் பார்த்து மகிழ்ந்தன.

இதைக் கண்ட தாய் பறவை அளவற்ற மகிழ்ச்சி பெற்றது. இதனைப் பார்த்த தந்தை பறவை, அனைத்து விழாவிற்கும் தனது குழந்தை பறவைகளுக்காக குடும்பத்தோடு அழைத்துச் சென்றது.

அப்பொழுது திடீரென்று மழை பெய்ய தொடங்கியது. என்ன செய்வது என தெரியாமல் பறவைகள் தனது வீட்டிற்குள்ளேயே இருந்தன. முதல் நாள் மழையில் வீட்டிலிருந்த உணவை உண்டனர். மறுநாள் என்ன செய்வது எனத் தெரியாமல் தவித்தனர்.

அப்பா பறவை நான் சென்று உணவு எடுத்து வருகிறேன் என சொல்லி விட்டுச் சென்றது. நீண்ட நேரம் ஆகியும் வரவில்லை. மழையில் எங்கும் தேடியும் உணவு கிடைக்கவில்லை.

நீண்ட தூரப் பயணத்தின் பிறகு வெகு சிறிய உணவு மட்டுமே கிடைத்தது. அதை எடுத்துக் கொண்டு தன் வீட்டிற்கு வந்து நடந்த நிகழ்வுகளை கூறியது. அந்தச் சிறிய உணவை அனைவரும் பகிர்ந்து உண்டனர்.

மறுநாள் அம்மா பறவை உணவைத் தேடி நான் செல்கிறேன் எனக் கூறிவிட்டுச் சென்றது. அப்பா சென்று திசையில் செல்லாமல் வேறு திசையில் செல்ல முடிவு செய்தது.

அவ்வாறே சென்றது. அங்கு ஓர் கொய்யா மரம் இருப்பதையும் கண்டது. அதில் பழங்கள் பழுத்து இருப்பதையும் கண்டு மகிழ்ச்சி அடைந்தது. தன் குடும்பத்திற்குத் தேவையான உணவை எடுத்துக் கொண்டு வெகு விரைவாக தன் கூட்டிற்கு வந்தது. பசியோடு இருந்த தன் குடும்பத்தில் உள்ளவர்களுக்குத் தேவையான உணவை கொடுத்தது. இது போன்றே அம்மா பறவை தன் பயணத்தை நாள்தோறும் தொடர்ந்து பயணித்துக் கொண்டே இருந்தது. தன் குடும்பத்திற்காக தன் பயண சுமையைக் கூட சுகமாக எண்ணியது.








**ல.யுவஸ்ரீ, எட்டாம் வகுப்பு**
பிரஸித்தி வித்யோதயா மேல்நிலைப் பள்ளி, திண்டுக்கல்



# மண்ணில் விழுந்த மலரின் மாற்றம்

**ஹ. சாய் பிரசாத்**

இமயமலையிலிருந்து தவறி மண்ணில் விழுந்த மலர் போன்ற தமிழ்ச்செல்வி எனும் நான்கு வயது குழந்தை, வீட்டிற்கு வந்த வயதான கீரை விற்கும் பாட்டியை அன்புடன் கட்டி அணைக்கப் போகும் பொழுது அவளது அம்மா, 'அந்த பாட்டியைத் தொடாதே, நோய் அண்டி விடும்' என்று சொன்னதைக் கேட்டு நின்று விட்டாள்.

மறுநாள் தனது இரண்டு வயதான தம்பிக்கு வைத்திருந்த பாலை எடுத்துக் கொண்டு மழையில் நனையும் ஆட்டுக் குட்டிக்கு பால் வைத்தாள். வெயிலில் பாரம் சுமக்கும் பெரியவரின் கால்களில் காலணிகள் இல்லாததைப் பார்த்து தனது சித்தப்பாவின் காலணிகளைத் தருமாறு கேட்டுக் கொண்டாள்.

இந்தக் குழந்தையின் மனம் வேறுபாடு இன்றி அனைவருக்கும் உதவும் குணத்தைப் பார்த்து, இந்தக் குழந்தை இந்தச் சமூகத்தில் எப்படி வாழப் போகிறது என்று கவலை உற்றார் அவளது தாயார்.

அவளது சித்தப்பா வேலைக்கு வெளியூர் சென்று விட்டு திரும்பும் பொழுது இக்குழந்தைக்கு எட்டு வயதானது.

அப்பொழுது தெருவில் வேலை செய்யும் முதியவர் தாகத்திற்கு தண்ணீர் கேட்டால் தர மறுத்து விட்டாள், தெருவில் போகும் ஆட்டுக்குட்டியைக் கல்லால் அடித்து காயப்படுத்தி மகிழ்ந்தாள், தெரு நாய்க்கு உணவு கொடுக்கும் தனது தம்பியை அதட்டினாள். இதனைக் கண்ட தாயாருக்கு இவள் பிழைத்து விடுவாள் என்று நிம்மதி வந்தது.

இந்த சமூகத்தில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் இமயத்தின் உச்சியில் மலரும் பூ போல தான். ஆனால் இச்சமூகத்துடன் சேர்ந்து மண்ணில் மணலுடன் சேர்கிறது.





**அ.செந்தமிழ்ச்செல்வி**

## கேள்வி ஞானம்

கல்லாமையின் குறையை
போக்குவதற்கான வேள்வியே-கேள்வி
கற்றாரிடமிருந்து கற்றுத்தெரிந்து
நூலியிருந்து நுட்பமாக
நுண்ணறிவை நுண்ணியமாக
கல்வியே கண்ணாக
கேள்வியே கேட்டறியும் ஞானமாக
செவிச்செல்வத்தின் தலைமைச்சிறப்பு
இது இவ்வதிகாரத்திற்கான துடுப்பு
நல்லொழுக்கத்தின் கூறுபாடை
உணர்ந்தவரின் உன்னதச் சொற்கள்
வலுசேர்க்கும் ஊன்றுகோல்கள்
நாவின் சுவையை உணர்ந்து
செவிச்சுவையை உணராமல் இருந்தால்
வாழ்ந்தாலும் இறந்தாலும் ஒன்று
இதுவே இதை விளக்கும் சான்று



**ம.லவன்**
ஆறாம் வகுப்பு
சென்னை

## அறிவு ஊற்று

அறிவின் ஆழத்தை அறிந்து
அறிவுடையோரின் மனதை புரிந்து
நல்லொழுக்கத்தோடு வாழ்ந்து
வையகம் போற்றும் வளமான அறிவை பெற்று
அனைவரிடத்தும் நல்லாசி நல்கி
அறிவை பல வகையில் யோசித்து
நெஞ்சகத்தில் இதை நாம் இருத்தி
ஞானஒளி சுடரை ஏற்றி
இயல்பான அறிவில் இயைந்து
கற்கும் கல்வியறிவில் கற்றுணர்ந்து
பொருளை தெளிவடையச் செய்ய
எதிர்கால துன்பத்தை விலக்க
பொய்த்தன்மையை அழிக்க
உண்மைத்தனமான உலகறிவை செழிக்க வைக்க
அறிவுடையோரின் கடமைதனை
அண்டமெல்லாம் அறியச் செய்வோம்

**ம.குசன்**
ஆறாம் வகுப்பு
சென்னை







சு.பிரவந்திகா





**மு.அ.நந்திகா பத்மினி**
வயது : 9
பள்ளி–எம்.ஏ.வித்யாஷ்ரம்

**ஷ்.அனன்யா**
புதுச்சேரி





# தமிழ்

சங்கம் அமைத்து
சான்றோர்களால் வளர்ந்தவளே!
சிற்றிலக்கிய வகைகள் பெருகி
சீராய் மேம்பட்டவளே!
சுவடிகளில் நின் பெருமை
சூரிய ஒளியாய் மிளிர்கிறது!
செந்நாபோதர் திருக்குறளின் கீர்த்தி
சேர்கிறது அயல்நாட்டவருக்கு!
சைகை மொழியிலும்
சொல் பொருள் மாறாமல்
சோர்வின்றி புதுமை அடைந்துள்ளாய்
சௌந்தர்யமாக!!!



**தா.உ.ஜான்வீ**
பத்தாம் வகுப்பு,
பூம்புகார்.

*பா.யுக்தா*
*ஐந்தாம் வகுப்பு*
*வித்யா மந்திர்*
*எஸ்டான்சியா பள்ளி*
*கூடுவாஞ்சேரி.*








# குச்சி மிட்டாய்

.

மண்ணெனுந் தட்டில் பாகை
  மலர்விதை யாக ஊற்றி
வண்ணமும் நீரோ டிட்டு
  வடிவமும் மொட்டாய்த் தந்துக்
கண்டதுங் கவரு தற்குக்
  காகித இதழ்கள் கொண்டு
வெண்ணிற கொடியில் பூத்த
  வேரிநேர் மிட்டாய்ப் பூக்கள்

உண்டதோர் வாயில் வாரும்
  உயர்மணத் தென்றல் வீசக்
கண்டமும் சேயின் செவ்வாய்க்
  கடித்திடா துண்ணும் தும்பி
விண்மழை பெய்யா போதும்
  விளையுமிம் மலர்கட்க் கெல்லாம்
கண்முனம் சாலை ஓரக்
  கடைகளே சோலை ஆகும்.

.

**ஏடி வரதராசன்**

# பூமாக்கிழவி –23

ரிஸ்வான்
தேநீர் நேரக்கதை

– ரிஸ்வான்





**பூமாக்கிழவி எனும் ராக்காச்சி**
**தொடர் நாவல்**

யசோதாவுக்கு கலக்கமா இருந்துச்சி.. ராத்திரி முச்சூடும் தூக்கம் பிடிக்கல..

பூமாக்கிழவி மேல இருந்த கடுப்பு கொஞ்சம் கொஞ்சமா கலைஞ்சி போகப் போக... கிழவி நினைச்சி மனசு கலங்க ஆரம்பிச்சிது.. அந்த கடுப்பு கூட ஒரு வகையான பாசத்தோட நெழலுதான்

த்தூ.. என்ன மனுஷி நானு.. கெழவி யோட கை ரொணத்தை தினம் தின்னுட்டு அதுக்கே துரோகம் நெனச்சேன்.. யசோதா வாய் விட்டு அழுதுச்சி.. ராத்திரி முச்சூடும் கிழவி வந்துடும்னு வாசலையே பாத்து கிட்டே உக்காந்து இருந்துச்சு.. கிழவி வரவே இல்லை...

யசோதாவுக்கு வயத்தை கலக்குச்சி... பூமாக்கிழவியை போலீஸ் புடிச்சிக் கிட்டு போயிருக்குமா.. இல்லை கிழவி ரோஷக் காரி மானம் ஈனத்துல சொரணை உள்ள கெழவி..போலீசு தேடி வந்துச்சுன்னு மானத்துக்கும் பயந்து எங்காச்சும் விழுந்து உசுர விட்டுடுச்சா.. யசோதாவுக்கு அழுகை அழுகையா வந்துச்சு.. கூடவே என்ன என்னவோ எண்ணமும் வந்துச்சி..மனசுல..

நாதாரி முண்டை... ஆத்தா மேலேயே எரிப்பு எடுத்து கிட்டு எரிஞ்சியே.. இப்ப அழுவுற... யசோதாவை அடிக்க கை ஓங்கினான்... சுப்பிரமணி.

எழவு எடுத்தவளே.. ஆத்தாவை பத்தி உனக்கு என்னடி தெரியும்.. எங்களை பூமிக்கு கொண்ணாந்து.. நேரங்காலம் பாக்காம நோவு நொடியில இருந்து காப்பாத்தி உசுரு கொடுத்த ஆத்தா.. சாமி டீ.. இந்த ஊரு சனங்களுக்காக வாழுற உசுருடி.. அது. நோவு பட்டு சீக்கா கிடந்த

என் ஆத்தாவுக்கும் எனக்கும் தன்னோட உடல் ஒழைப்புல சோறு போட்டு காப்பாத்துன சாமிடி.. இன்ன வரைக்கும் அதோட ஒழைப்பு சோறு தாண்டி மானங் கெட்டு திங்கறோம்..

ஆத்தா உசுருக்கு ஏதாவது ஆச்சு உன் சிண்டு முடியை புடிச்சி தர தரன்னு இழுத்துகிட்டுப் போயி ஊரு மூச்சந்தியில பொலிப் போடுவேன்..

சுப்பிரமணி யசோதாவோட தலை முடியை கொத்தாக பிடித்து உலுக்கினான்..

சாவுடி... சாவுடி..

யசோதா வாழ்நாளில் சுப்பிரமனி இப்படி உச்சக் கோவத்துல பத்தி கிட்டு எரியறதை இன்னிக்கித்தான் பாக்குது...

சுப்பிரமணி பேச பேச யசோதா தேம்பி தேம்பி அழுதுச்சு...

சுப்பிரமணி எந்திரிச்சி நொண்டி நொண்டி வந்து திண்ணையில தேவங் காட்டும் முட்டி கட்டிக்கிட்டு முட்டிங் களுக்கு நடுவே முகத்தை பொதைச்சி கிட்டு குந்திக் கிடந்தான்..

சேதி கேட்டு ரோட்டு டீக்கடை பத்தன் யசோதாகிட்ட பூமாக்கிழவியை பத்தி வெசாரிக்க வந்தான்.

என்னா சுப்பிரமணி எப்படி இருக்க.. உன் பொஞ்சாதி இல்லையா..

வந்துடும் அண்னே.. உக்காரு..

ஆத்தா ரெண்டு நாளா குடிசைக்கு வரலியாமே.. எங்கிட்ட வந்து சொல்லுறது இல்லையா.. மாமியா.. ஊருல ஜாத்திரை (திருவிழா) ரெண்டு நாளா நான் ஊருல இல்ல என்னாச்சு ஆத்தாவுக்கு எங்க போறேன்னு சொல்லிட்டுப் போவுலையா..

இல்லண்ணே.. எதுவும் சொல்லல..

யசோதா.. பனஞ்சோலைக்கு பின்னாடி இருந்து வந்துச்சி..

வா பத்தன் அண்ணே நானே கொஞ்சப் பொறவு கடைக்கு வந்து உன்னைப் பாக்கலாமுன்னு இருந்தேன்.. கெழவி வீட்ட விட்டுப் போயி ரெண்டு நாளா யிடுச்சி.. இன்னும் திரும்பல..

யாராச்சும் வந்து கூட்டிப் போனாங் களா..

இல்ல ண்ணா... ஆனா...

சுப்பிரமணி சொல்ல வேணாம்னு தொண்டையை கனைச்சி சைகை செஞ்சான்

என்னடா.. என்ன மறைக்கப் பாக்குற... போலீஸ் வந்துச்சா இங்க..

டீக்கடை பத்தன் ஆத்திரத்துல கத்தி னான்.

## பூமாக்கிழவி -24

ரிஸ்வான்

தேநீர் நேரக்கதை



சுப்பிரமணிக்கு திக் குன்னுச்சு..

உங்களுக்கு எப்படி விஷயம் தெரியும்..

நான்தான்டா ஆத்தா குடிசைய அடை யாளம் சொல்லி அனுப்பிச்சது..

ஏதாவது பிரசவம் பாக்க இருக்

கும்னு நெனைச்சு எதையும் சரியா விசாரிக்கல.. அவன் கிட்ட..

உங்க கிட்ட என்ன கேட்டான் ஆத்தாவோட பழைய போட்டா படத்தை காட்டி பூமாக்கிழவி தானேன்னு விசாரிச்சாரு..

ஆத்தாவோட படம் தான்.. நம்ம ஊருக்கு வரும்போது எப்படி இருந்துச்சோ அப்படியே அச்சு அசப்புல இருந்துச்சு படத்துல.. முன்னாடியே வேறு யாரு கிட்டயாவது வெசாரிச்சுட்டுதான் இங்க வந்திருக்கணும்.. இல்லன்னா பூமாக்கிழவின்னு பேரு எப்படித் தெரியும்... அவருக்கு.

பொறவு...

ஆத்தா வந்தா இங்கனையே இருக்க சொல்லு தின்னனூருக்குப் போய் போன் பண்ணிட்டு வரேன்னுட்டு ஏதோ காயித்துல எங்க கிட்ட கைநாட்டு வாங்கி கிட்டுப் போயிட்டாரு..

பொறவு.. மறுவாட்டி அவரும் வரல.. ஆத்தாவும் குடிசைக்கு திரும்பல..ரெண்டு நாளாயிடுச்சு...

ஏன்டா என்கிட்ட ஒடனே வந்து சொல்லல யாரு வந்தாலும் என்னத் தாண்டித் தானே போவனும் வரனும்..

எனக்கு கால்ல ஆணி ஏறிடுச்சுண்ணே.. நடக்க முடியல.. பாவம் யசோதா தான் ஒத்தையா தேடி அலையுது...

சரி விடு.. நான் தேடி பாக்குறேன்.. வேற ஏதாச்சும் ஆத்தாவை பத்தி தெரிய வந்தா எனக்கு சேதி சொல்லு..

சரி யண்ணே...

டீக்கடை பத்தன் சைக்கில்ல ஏறி விர்ருன்னு போயிட்டான்.. மனசுக்குள்ள வருத்தமா இருந்துச்சி.. ச்சே.. அக்கறையில்லாம எதையும் விசாரிக்காம ஆத்தா குடிசைக்கு வழி சொல்லி இருக்க கூடாது..

பத்தன் சைக்கிள்ல அக்கம் பக்கத்துல எல்லாம் போய் வெசாரிச்சிட்டு... தின்னனூரு போலீஸ் ஸ்டேஷனுக்கு விசாரிக்கப் போனான்...

வா பத்தா... நல்லா இருக்கியா..

ம்ம்.. ஏட்டு இல்ல..

உள்ளேப் போ... இருக்காரு..

வா பத்தா பூமாக்கிழவியை தேடி வந்தியா..

சேதி உங்களுக்கும் தெரியுமா...

ஏம்பா ஊரே பத்திக் கிட்டு எரியுது... நத்தமேட்டுக்கு பீட்டுக்குப் போன வெங்கடேசன் வந்து சொன்னாரு..

ஆமாம் சார்.. அத பத்திதான் உங்க கிட்ட சேதி கேக்கலாமுன்னு வந்தேன்..

ரெண்டு நாள் முன்னே யாரோ போலீஸ் போயி ஆத்தா குடிசையில ஆத்தாவை பத்தி விசாரிச்சு இருக்காங்க.. அதுக்கப்புரமா தான் ஆத்தா காணாம போயிருக்கு..

உங்க ஸ்டேஷன்ல இருக்கறவங்க இல்ல.. இங்க இருக்குற உங்க நாலு பேரையும் எனக்குத் தெரியும்.. என் கடைக்கு வந்து போறவங்க...

வந்தது போலீஸ்ன்னு எப்படி சொல்றே..

காக்கி பேண்ட், நீலக்கலர் சொக்காய் போட்டிருந்தார்... தலைக்கு போலீஸ் கிராப் வெட்டியிருந்தார். எங்கிட்டதான்

ஆத்தா குடிசைக்கு வழி கேட்டார்..

நீ என்னன்னு விசாரிக்கலையா...

இல்ல சார்... வியாபார நேரம்.. அதுல யும் தினம் ஆத்தா குடிசைக்கு யாராச்சும் வழி கேட்டு வர்றதாலே முக்கியமா எடுத்துக்கல...

சரி பத்தா நீ போயி பொழைப்பை கவனி... ஆத்தா வைராக்கியக் காரி அதுக்கு ஒன்னும் ஆயிருக்காது நான் திருவள்ளூர் DSP. ஆபிஸ்ல விசாரிச்சுட்டு தகவல் சொல்றேன்.

இப்ப கொஞ்சம் போன் பன்னி விசாரிச்சு பாரு சார்..

இப்ப போன்ல பேசுனா புரியோஜனம் இல்ல பத்தா.. யாரும் ஒழுங்கா பதில் சொல்ல மாட்டாங்க.. யாரு கெழவி.. யாரு புகார் கொடுத்தாங்க FIR. போட்டாச்சா அது இதுன்னு கேப்பா னுங்க நாங்க அவங்க கண்ட்ரோல் கீழ இருக்கவங்கதான்.. ஆனால் சரியா ஒத்துழைப்பு தரமாட்டாங்க... நாங்களே DSP ஆபிஸுக்குப் போனா.. மாடு கண்ணெல்லாம் எங்க விட்டுட்டு வந்தீங் கன்னு விடைப்பானுங்க... திருவள்ளுரு கலக்சன் துட்டு திமிரு...

சார் நான் திருவள்ளூர் ஆபிஸ்ல போய் வெசாரிக்கட்டுமா..

எவனும் சட்டை பண்ணமாட்டான் பத்தா.. நீயா வம்புல மாட்டாதே. பித்தளை சொம்பு கையில கொடுத்து டீ வாங்கி கிட்டு வந்து எல்லாருக்கும் ஊத்திக் கொடுண்ணு வாங்க..நாள் பூறா உன்னை நிக்க வச்சியே எடுப்பு வேலை வாங்கு வானுங்க நீ போ நான் ரூட்டுப் போட்டு விஷயத்தை முடிக்கிறேன்..

சரி சார்...

பத்தன் சைக்கில்ல ஏறி கிளம்பிட்டான்..

பத்தன் போன கொஞ்ச நேரத்துல கூனிப்பாளையத்து நாயுடு டிராக்டர் ல வந்து இறங்கினார்..

ஏட்டு எழுந்து நின்னு..

வாங்க நாயுடு... உக்காருங்க

எனக்கு ஒரு சின்ன உதவி செய்யணும் சார்.. உத்தரவு போடுங்க நாயுடு.. நீங்க இந்த ஏரியா பஞ்சாயத்து தலைவரு..

நீங்க வரணுமா என்ன.. பீட்டுக்கு வர வெங்கடேசன் கிட்ட சொல்லி அமிச்சா நானே வீட்டுக்கு வந்திருப்பேனே...

சொல்லுங்க நாயுடு..

நத்தம்மேட்ல...

ஓ.. அந்த பூமாக்கிழவி விஷயமா..

ஆமாம்.. காணாமப் போய் ரெண்டு நாள் ஆவுது..

எல்லாம் கேள்விப்பட்டேன் நாயுடு.. டீக் கடை பத்தன் கூட இப்பத்தான் இது விஷயமா பேசிட்டுப் போறான் சுத்துப் பட்டு கிராமத்துல எல்லாம் பீட்டுங்களை அனுப்பி விசாரிக்க சொல்றேன்..

அவங்க எனக்கு ரொம்ப வேண்டியப் பட்டவங்க... எனக்கு ஆத்தா மாதிரி என்குல சாமி.. யாரோ போலீஸ் மப்டியில வந்து விசாரிச்சிதாகவும் அதுக்கு அப்புறமாத்தான் ஆத்தா காணாமப் போனதாக சொல்றாங்க.. அதான் உங்களைப் பாத்து வெவரம் கேக்கலாமுன்னு வந்தேன்..

நல்லது நாயுடு... திருவள்ளூர் DSP ஆபிஸ் ல இருந்து நேரடியா யாராவது வந்து விசாரிச்சு இருக்கலாம்.. இதுமாதிரி விஷயங்களை விசாரிக்க லோக்கல் போலீஸ் ஸ்டேஷனுக்குத்தான் தகவல் கொடுப்பாங்க.. நாங்க விசாரிச்சு.. இன்வெஸ்ட்டிகேட்டிங் ரிப்போர்ட் சப்மிட் பண்ணுவோம்... நேரிடையா DSP ஆபிஸ்ல இருந்து ரகசியமா விசாரிக்கிறாங்கன்னா கேசு ரொம்ப முக்கியமான இரகசிய கேசா இருக்கும்..

மேலிடத்துல இருந்து ரிப்போர்ட் ஆகி இருக்கும்.. ஆத்தாவை விசாரிக்க வந்தவர் கூட இன்டெலிஜென்ஸ் டிபார்ட்மென்ட் ஆளாக இருக்கலாம்.. அதனாலதான் எங்களை டச் பண்ணாம போயிருக்காங்க.. ஆனா அப்படி விசாரிக்கிற அளவுக்கு ஆத்தா அவ்வளவு பெரிய குற்றவாளியா...ன்னு ஒன்னும் தோணல. எங்களுக்கே குழப்பமாக இருக்கு.. இப்ப நான் சொன்னதெல்லாம் கூட எனது அனுபவத்தோட அனுமானத்துல சொன்னதுதான்.. நீங்க ஒன்னு செய்யீங்க நாயுடு.. கம்ப்ளைண்ட் ஒன்னு எழுதி கொடுங்க.. ஊரு பிரசிடெண்ட்ங்கற உங்க ஓதாவுல கேசுல கால் வைக்கிறேன்.. அப்பத்தான் DSP ஆபிஸ்ஸ்லேயும் பிடிமானமா நானும் உக்காந்து பேச முடியும்.. இல்லன்னா அங்க மருவாதி இருக்காது..

நீங்க சொல்றது சரிதான்.. சார்

பத்மநாபா.. ஒரு மிஸ்ஸிங் கேசு கம்பளைண்ட் ஒன்னு எழுதி நாயுடு கிட்ட சைன் வாங்கி ரெஜிஸ்டர்ல பதிவு பண்ணிடு நாளைக்கு காலையில DSP ஆபிஸ்ல கொடுத்துட்டு ஒரு நோட்டம் போட்டுட்டு சேதி ஏதாச்சும் தேருதான்னு பார்த்துட்டு வா. மறந்துட்டேன் நாயுடு சார் கூட வீட்டுக்குப் போய் ஐயா வோட அபிசியல் சீல் போட்டுக்க காகிதத்துக்கு பவர் வேணுமில்ல..

சரி நாயுடு.. நான் பாத்துக்குறேன்.. முதல்ல பார்மாலிட்டிக்காக பி சி ய அனுப்புறேன் அவரு வெவரம் தெரிஞ்சிக்கிட்டு வரட்டும் மறுநாளு நான் போயி பாத்துக்குறேன் உங்க போன் நம்பர் இருந்தா கொடுங்க.. தகவல் ஏதாச்சும் கிடைச்சா சொல்றேன்...

கூனி பாளையத்து நாயுடு போன் நம்பர் கொடுத்துட்டு கிளம்பினார்..

மனசு கனமா இருந்துச்சி.. குழப்பமாவும் இருந்துச்சி..

எல்லாத்துக்கும் மேல அசைக்க முடியாத நம்பிக்கை இருந்துச்சி நாயுடுக்கு பூமாக்கிழவி மேல.. பூமா தாயிக்கு ஒன்னும் ஆயிருக்காது அது எமனோட போராடுற ராக்காச்சி.. அதே நேரம் பூமாக்கிழவி நிச்சயமா தப்பு பண்ணி இருக்காது..

பூமாக்கிழவி தப்புசெய்றவங்கள தண்டிக்கிற சாமி...

பூமாக்கிழவிக்கு என்னதான் ஆச்சு.. ஊரையும் ஊரு சனங்களையும் விட்டு வெளியே ராவுத் தாங்காது. குஞ்சுகளை தன்னோட றெக்கைகளால மூடி பத்திரமாக அரவணைச்சி கிட்டு ஒடுங்குற கோழியாட்டம் பூமாக்கிழவி.

தன்னோட குடிசைக்கு வந்து கலையத்துல மிச்ச மிருக்குற புளிச்சுப் போன கஞ்சியை குடிச்சிட்டு காலை நீட்டி ஊரு சனங்களோட படுத்ததான் தூக்கம் வரும்..

பூமாக்கிழவி ஊரை விட்டுப் போயி ரெண்டு மூனு நாளாயிடுச்சி.. இன்னும் காணலை...

பூமாக்கிழவி எங்கதான் போச்சி...

## புத்தக விமர்சனம்




திருக்குறள் ஒரு மாபெரும் கடல். அதனைத் தோண்டத் தோண்ட அறிவு ஊற்று சுரந்து கொண்டேயிருக்கும். ஒவ்வொருவரும் அதற்கு உரையெழுத வேண்டும் என்ற எண்ணத்தைத் தூண்டும். சிலர் உரைநடையில் சிலர் கவிதைநடையில் வேறுசிலர் பாட்டு நடையில் என ஒவ்வொருவரும் அவரவர்க்கு ஏற்றாற்போல் விளக்கவுரை எழுதிவருகிறார்கள். அந்தவரிசையில் திரு கண்ணன் நடராசன் அவர்கள் வள்ளுவர் கூறும் வாழ்வியல் இன்பம் என்ற நூலை எழுதியுள்ளார்.

வாழ்வியலுக்குத் தேவையான செய்திகளைக் கூறும் குறட்பாக்களை எடுத்துக் கொண்டு அவற்றிற்கெல்லாம் கவிதை நடையில் விளக்கவுரை எழுதியுள்ளார் ..

“அசையியற் குண்டாண்டோர்
ஏர்யான் நோக்கப்
பசையினள் பைய
நகும்”

என்ற ஆயிரத்துத் தொண்ணூற்றெட்டாவது குறளுக்கு இவர் விளக்கம் தரும்போது இவ்வாறு உரைக்கிறார்.

“பார்க்கும் போது பாவை நகுகிறாள்
எற்பு என்பதை இதனால் உணர்கிறேன்
ஏற்கும் போதே ஏறுகிறது எழில்
தோற்காக் காதலின் துவக்கம் இதுவே”

ஒருவரை ஒருவர் விரும்பும் ஒரு ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் பார்க்கும்போது அந்தப் பார்வையே விருப்பம் உளதா இலையா என்பதைத் தெளிவாகக் காட்டிவிடும். அவ்வாறு விருப்பத்துடன் பார்க்கும் பார்வையிலேயே காதல் பூக்கும்; தோற்காது. இதனையே தம் விளக்கமாகத் தருகிறார் கவிஞர்.

“வினைகலந்து வென்றீக
வேந்தன் மனைகலந்து
மாலை யயர்கம்
விருந்து” (1268)

என்ற குறளுக்கு விளக்கம் தரும்போது

“முற்றுகைப் போரும்
முடிந்ததே வெற்றியில்
புறப்பட்டுப் போகிறோம்
பொன்னான இல்லத்திற்கு
பற்றிடப் போகிறோம்
பாவையின் தோள்களை”

பெற்றிடப் போகிறோம் பெருவிருந்து மனையாளிடம் என்கிறார். ஒரு போர் முடிந்து இல்லம் திரும்பும் வீரர்களின் முதன்மை நோக்கம் அவர்தம் இல்லம்

சென்று மனையாளைச் சந்தித்து அளவளாவுவதும் குழந்தைகளுடன் விளை யாடுவதுவும்தான் ஆகும். அப்போது எப்படியும் விருந்து காத்திருக்கும். அது எந்த விருந்து என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

"நோத லெவன்மற்று
நொந்தாரென் றஃதறியும்
காதல ரில்லா
வழி.(1308)"

என்ற குறளுக்கு விளக்கம் தரும்போது வெறுங்கையால் முழம்போடுதல் போல காதலர் இல்லாமல் காதலை எவ்வாறு உணர இயலும்? பேச இயலும்?. இங்கே கவிஞர் தம் உரையாக

தவிக்க விட்டு
தலைவன் சென்றால்
தழுவத் தலைவனில்லாது
தன்னுயிர் நோகும்
உணராக் காதலன்
ஊர்வழிச் சென்றால்
புணரா உடலில்
பெருந்துன்பம் வருத்துமே
என்று தருகிறார்.

காதலர்களுக்குக் கனவு வருவது இயற்கை. அதுவும் காதல் கனவுகள் என்ன செய்யும் என்று சொல்லத் தேவையில்லை. தன்னோடு கொஞ்சிக் குலாவும். தோளோடு தோள் சேரும். இந்தத் தலைவிக்கும் கனவில் தலைவன் வருகிறான். கனவில் தோளோடு தோள் சேர்கிறான் விழித்தால் நெஞ்சுக்குள் ஓடி ஒளிகிறான். இதனை வள்ளுவர் தம்நூலில்

"துஞ்சுங்காற் றோண்மேல
ராகி விழிக்குங்கால் .
நெஞ்சத்த ராவர்
விரைந்து (1218)"

என்கிறார். இதனை திரு கண்ணன் நடராசன் அவர்கள் தம் கவிதையுரையில்

"எந்தன் காதலன்
என்னைப் பிரியான்
துஞ்சும் போது
தோள் மேலராகிக்
கொஞ்சி மகிழ்கிறான்
குமரி என்னுடன்
அஞ்சாத சிங்கமாய்
அணைத்துப் புணர்கிறான்
விழிப்பு வந்ததும் வேறெங்கும் செல்லாது
கழிக்கிறான் காலத்தைக்
கண்மணியென் நெஞ்சிலே
நெஞ்சச் சிறையில்
நீள்துயில் கொள்கிறான்"
என்கிறார்.

காதல் இணையரின் இதழ்ச்சுவை மிகுந்த சுவையுடையது என்று எல்லா கவிஞர்களும் சொல்வர். பாலிலே தேன் கலந்தாற்போல் இருக்கும் எச்சில் என்பதை வள்ளுவர்

"பாலொடு தேன்கலந்
தற்றே பணிமொழி
வாலெயி றூறிய
நீர்.." (1121)
என்கிறார்.

ஐந்து ரூபாய் பஞ்சுமிட்டாய் தன் இணை கடித்துக் கொடுத்தால் இலட்ச ரூபாய்க்குச் சமம் என்பார் ஒரு கவிஞர். திரு. கண்ணன் நடராசனும்

"எச்சில் என்று
இகழ்ந்து சொல்லாதே
சொச்சியை விடவும்
சுகமான சுவையதற்கு
மிச்ச மில்லாது
மீண்டும் சுவைத்து
மச்சான் விழுந்தான்
மயங்கி யென்மீது

பாலைவிட பன்மடங்கு
சுவை யதற்கு
தேன் திகட்டினாலும்
திகட்டாத சுவைநீர்
பனம்நுங்கின் ஊற்றுநீரை
விட பன்மடங்கு
பாவை வாயூற்றுநீர்
சுவை...”
என்று அனுபவித்து எழுதியுள்ளார்.

நிறைவுக் குறளான

“ஊடுதல் காமத்திற்
கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப்
பெறின்.” (1330)

என்ற குறளுக்கு விளக்கம் அளிக்கும் போது

“கூடியே கிடந்தாலும்
கொடுந்துயர் கொடுக்கும்
ஊடிக் கூடினால்
உற்சாகம் பிறக்கும்
புலவிக்குப் பின்
களவியின் வேகம்
புயலாய் வீசி
பேரின்பம் அளிக்கும் ”

என்று கூறுவது அவர்தம் அனுபவத்தைக் கூறுவது போலுள்ளது.

இவ்வாறு நூல்நெடுகவும் காதற்சுவை நிரம்பிவருகிறது. இளைஞர்களுக்குக்காதல் கடிதம் எழுதவும் முதியவர்களுக்கு நினைவு களைப் புரட்டிப்பார்க்கவும் இந்நூல் உறுதியாக உதவும் என்பதில் கிஞ்சித்தும் அச்சமில்லை. மென்மேலும் இதுபோன்ற பல நூல்களை எழுதுவதற்கு தமிழ்நெஞ்சம் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.



# தாளாண்மை

✦

அம்பலம் ஏற்றிடும்
தன் முயற்சி மட்டும்
வம்பு பேசுவோர்
வாயை அடைத்திடும்

✦

கடற்கரையில் உழைப்பாளர் சிலை
உயிர் பெற்றது
பெருத்த ஒலியுடன்
கடற்கரை அதிர்ந்தது

✦

துரோணர் கைவிட்டார்;
ஏகலைவன் சோர்ந்தானா
முற்று மனத்துடன்
விற்தொழில் பயின்று தேர்ந்தான்

✦

தன்முனை அனுமன்
கடலை மடக்கினான்
தன் பலம் கொண்டே
தொடரல் தாண்டினான்.

✦

பட்டம் பறக்கும்
நிலைக்கும் நேர்ச்சி
மாஞ்சா கயிறு
பிடிக்கும் கையின் முயற்சி

**சசிகலா விஸ்வநாதன்**




**சிறுகதை எழுதியவர்கள்:**

**அத்தியாயம் : 1**
**வனஜா முத்துக்கிருஷ்ணன்**
**அத்தியாயம் : 2**
**ருக்மணி வெங்கட்ராமன்**
**அத்தியாயம் : 3**
**கி. இரகுநாதன்**
**அத்தியாயம் : 4**
**விஜி சிவா**
**கதை நெறியாளுமை :**
**விஜி சிவா**



*அத்தியாயம்: ஒன்று*
*எழுதியவர்:*
*வனஜா முத்துக்கிருஷ்ணன்*

இரண்டு வருடங்களுக்குப் பிறகு தன் கிராமத்திலிருக்கும் சொந்த வீட்டில் நுழைந்த ராகவனுக்கு, பிறந்த மண்ணில் கால் பதித்ததால் ஒரு இனம்புரியாத உணர்ச்சி எழுந்தது!

“அடக் கடவுளே! எல்லோர் வீட்டிலும் நுழைஞ்சா கற்பூரம், ஊதுபத்தி வாசனை கமகமனு ஊரையே தூக்குற மாதிரி மணம் வீசும். நம்ம வீட்டுல கப்னு ஒருவித வாசனை வருதே..?” வருத்தத்துடன் ராகவனின் மனைவி அபிராமி கூற, அவளின் பின்னால் வந்து நின்ற வேலைக்கார பெண் சாந்தி...

“ஏம்மா... ரெண்டு வருஷமா பூட்டிக் கெடந்த வூடு. நீங்க ரெண்டு பேரும் அம்புட்டு சாமானும் இங்கன போட்டுட்டு வெளிநாட்டுக்கு போயிட்டீங்க. வூடு முழுக்க நூலாம்படை. முதல்ல இதை எல்லாம் சுத்தப்படுத்தணும். நீங்க ரெண்டு பேரும் வெளித் தாழ்வாரத்துல செத்த நேரம் உக்காருங்க. நான் சட்டுனு கிளீன் பண்ணிட்டு வாரேன்.” என்ற சாந்தி கையில் துடைப்பத்தை எடுத்தாள்.

வீட்டிற்கு வேண்டிய பொருட்களை வாங்கிக் கொண்டு, உற்சாகமாய் காரிலிருந்து இறங்கினர்.... ராகவனின் மகன் பிரபுவும், பேத்தி பூஜாவும்!

“அம்மா... ஏன் இங்க வெளிய உட்கார்ந்துட்டு இருக்கீங்க?” என பிரபு கேட்க,

“ஆமாம்பா... ரொம்ப வருஷமா பூட்டி வச்ச வீடுல.... நூலாம்படை பிடிச்சிருக்கு.! சாந்தி கிளீன் பண்ணிகிட்டு இருக்கா.” என்றாள் அபிராமி.

அபிராமியின் பக்கத்தில் வந்து அமர்ந்த பூஜா, “பாட்டி... எனக்கு ஆயுதப் படை, கப்பல் படை, விமானப் படை இதெல்லாம் தெரியும். ஆனா இது என்ன நூலாம்படை....?” என கேட்க,

“அது வந்து பூஜா... ஸ்பைடர் வெப். அதாவது எட்டுக்கால் பூச்சி வலை பின்னுமில்ல; அதுதான் நூலாம்படைன்னு சொல்லுவாங்க.” என்றாள் அபிராபி .

அப்பொழுது தன் இடுங்கிய கண்களின் மேல்கையை வைத்தபடி வந்த வேலையாள் பொன்னுச்சாமி, ராகவனைப் பார்த்து, “ஐயா...வாசத்திண்ணைல உக்காந்துகிட்டு இருக்கறது யாருங்க?” என்றதும் அபிராமி,

“பொன்னுச்சாமி... அவரைத் தெரியலையா? நரைச்ச முடியோட சுருக்கங்க விழுந்த பல்லாங்குழி மாதிரி குழி விழுந்த முகத்தோட இருக்கிற அவரை அடையாளம் தெரியலையா?'' என்று சொல்லி புன்னகைத்தார்.

அவசரமாய்த் தன் தோளில் போட்டிருந்த துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டு, “ஐயா.. மன்னிச்சுடுங்க. எனக்குக் கண்ணு சரியா தெரியல. அந்தப் பாவிகணேசுகுத்தமே செய்யாத உங்கமேல பழியைப் போட்டுட்டு போயிட்டான். அப்போ மனசொடிஞ்சு வெளிநாட்டுக்கு போனவரு... இப்போதான் வந்திருக்கீங்க. உங்கள எல்லாம் திரும்பப் பாக்கறது ரொம்ப சந்தோசமா இருக்குதுங்கய்யா.”

உடம்பைக் குறுக்கிக் கொண்டு நின்ற பொன்னுசாமியைப் பார்த்த அபிராபி, அன்பாய் அதட்டினார்.

“பொன்னு... என்னப்பா இப்படி இளைச்சு போயிட்டே....? முதல்ல இந்த மாதிரி கூனிக்குறுகி நிக்கக் கூடாதுன்னு சொல்லி இருக்கோமில்ல?'' என்று சொல்ல, பொன்னுச்சாமி அபிராமியை வணங்கினார்.

“அம்மா.. எப்படி இருக்கீங்கம்மா? நீங்க ஊரை விட்டுட்டுப் போனதுக்கப்பறம் மகாலட்சுமியே போனதுபோல இருந்தது. எல்லாம் காலத்தின் கோலம்.” என்றார்.

உணர்ச்சி வசப்பட்டு வந்த பொன்னுச்சாமியின் வார்த்தைகள் அபிராமியின் இதய நரம்பைப் பலமாக சுண்டி இழுத்ததால், தன்னை வேரற்ற மரம் போல உணர்ந்தாள்.

“சக்கர வியூகத்துல இருந்து வெளியே வர முடியாத அபிமன்யூ மாதிரி... எங்க நிலையும் வெளியே வர முடியலை! அதனால எங்க பரம்பரையே வாழ்ந்த இந்த வீட்டை விட்டுட்டு அஞ்ஞான வாசமா இருந்தோம். எல்லாம் விதியோட விளையாட்டுதான் பொன்னு.'' என பதிலளித்தபடியே அபிராமியின் அருகில் சென்ற ராகவன் தொடர்ந்தார்.

“இதோ பாரு அபிராமி. இந்த சிலந்தியைப் பாரு. அது விரிச்ச வலையில எத்தனை பூச்சிங்க மாட்டிக்கிட்டு இருக்கு. நாமளும் தெரியாம அவன் விரிச்ச வலையில மாட்டிக்கிட்டோம்.” என்றார்.

“யார் விரிச்ச வலையில் யார் விழுந்தது இங்கு...?” யோசித்தவாறே வீட்டினுள் சென்றாள் அபிராமி.

“ஐயா... வருத்தப் படாதீங்க. உங்க நல்ல மனசுக்கு எல்லா பிரச்னையும் தீருங்க.”என்றார் பொன்னுச்சாமி.

ராகவன் தன் கைக்குட்டையை எடுத்து கண்ணைக் கசக்கினார்!

அத்தியாயம் : இரண்டு
எழுதியவர் :
ருக்மணி வெங்கட்ராமன்



‘ஐயா..!‘ பதட்டமாய் அழைத்தபடி வந்தான் கணேசனின் வேலைக்காரனான கோபால். ‘ஐயா... இந்த கூத்த கேள்விப்பட்டீங்களாயா....? ராகவன் தன் குடும்பத்தோட திரும்ப கிராமத்துக்கு வந்திருக்காராம். இப்ப என்ன செய்ய

போறீங்கய்யா.?'

கணேசன் அலட்சியமாக, “கேள்விப் பட்டேன்... மானங்கெட்டவன் வந்தா வரட்டும். இனி யாரும் அவரை மதிக்க மாட்டாங்க. நாம விரிச்ச வலையில் விழுந்து, வலையோட ஓடினவன்.” என்றான்.

“இல்லைங்க.... நீங்க நினைக்கிறது தப்புங்கய்யா! நாம அவரை பள்ளிக்கூடம் கட்டிய விவகாரத்தில மாட்டி விட்டோம். அவர் தன் தவறு எதுவும் இல்லைனு நிரூபிக்க முடியாம, பஞ்சாயத்தில பணத்தை கட்டிட்டு, வெளிநாட்டுல இருக்கிற தன் மகன்கிட்ட போயிட்டாரு. இப்ப... காரணம் இல்லாம ஏன் வரணும்..” தலையைச் சொறிந்தான் கோபால்.

“அதனால என்னடா இப்ப...? ஒத்துக் கிட்டுதானே பணத்தை கட்டினாரு. பார்த்துக்கலாம் விடு.” குறுக்கும் நெடுக்கு மாய் நடந்த கணேஷ்,

“சரி.. எதுக்கும்... நீ போய் அவர் எதுக்கு வந்திருக்காருனு பார்த்துட்டு வா.” என்றார்.

“சரிங்கய்யா..! நான் ஒரு எட்டு பார்த்துட்டே வரேன்.” என்றபடி ராகவ னின் வீடு நோக்கி விரைந்தான் கோபால்.

........................

ராகவனின் வீட்டின் முன் கிராமத்து மக்கள் பலர் கூடியிருந்தனர். அங்கு நடந் ததைப் பார்த்து வாயடைத்து நின்றான் கோபால்.

“ஐயா... ஏன்யா சொல்லாம போனீங்க? எங்க மேல நம்பிக்கை இல்லையா? இல்லை உங்க மேலயே நம்பிக்கை இல்லையா?” ஊர் மக்கள் அனைவரும், அன்புடனும் உரிமையுடனும் மாறி மாறிக் கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்தனர்!

அதைப் பார்த்த கோபால், கணேஷை அலைபேசியில் அழைத்து, நிலைமையைச் சொன்னான்.

அதிர்ச்சியடைந்த கணேஷ், “அவர் சொல்லாம கொள்ளாம ஊரை விட்டு போனாரு. மக்கள் அவரக் கேள்வி கேட்டு ஊரை விட்டுத் துரத்தி விடப் போறாங்கனு பார்த்தா... குசலம் விசாரிச்சுக்கிட்டு இருக்காங்களா.? இந்த சனங்க திருந்தவே திருந்தாதுங்க...” கோபமாய்க் கத்தினான்! “இதோ... நான் கிளம்பி அங்க வரேன்; இன்னைக்கு இருக்கு அவனுக்கு.!”

கோபால் அவசரமாக, “ஐயா வேணாங் கய்யா.... தயவு செஞ்சு கொஞ்சம் பொறுமையா இருங்கய்யா... ஐயா... ஐ...” என்று சொல்லிக் கொண்டி ருக்க... அலைபேசி கோபமாய்த் துண்டிக்கப் பட்டது!

கூட்டத்தினரின் உரையாடலைக் கவனித்த கோபால், மீண்டும் கணேசுக்கு அழைப்பு விடுக்க.... 'உங்கள் அழைப்பை ஏற்கவில்லை' என்று அலைபேசி பதில் அளித்தது.

........................

அங்க கூடி இருந்தவர்களின் அன்பான விசாரிப்பில் மகிழ்ந்து போனார் ராகவன்.

“நான் எப்படிப்பட்டவன்னு கடவு ளுக்கும் என் குடும்பத்துக்கும் மட்டும் தான் தெரியும்னு நெனச்சேன். இப்ப நீங்க எல்லாம் என் மேல வச்சிருக்கற நம்பிக்கையும் அன்பும் போதும்; நான் குத்தம் இல்லாதவன்னு நிரூபிக்கிறதுக்கு.!” என்று ராகவன் சொல்லிக்கொண்டிருந்த போதே அங்கு வந்த பிரபுவையும் பூஜாவையும் பார்த்து ஊர்க்காரர்கள் மகிழ்ந்தார்கள்.

பிரபு, “என் அப்பா எவ்வளவு நல்லவர்னு

உங்களுக்கு நிரூபிக்கிறதுக்காகத்தான் நான் இப்ப வந்திருக்கேன். யாரோ சொன்ன சாட்சியை வைச்சு எங்க அப்பா மேல பழி போட்டுட்டீங்க.” என்றான்.

“அப்படியெ...ல்லாம் இல்லீங்க தம்பி...” ஊர்க்காரர்கள் முணுமுணுக்கையில்,

‘‘உங்களுக்கு எது உண்மைன்னு சீக்கிரத்துல புரியும்” கண் கலங்கியபடி தன் அப்பாவை நெருங்கி அணைத்துக் கொண்டான். ‘‘நீ ஒன்னும் கவலைப் படாதப்பா... உண்மை ஜெயிக்கும்’’ தளும்பும் குரலில் காதோரம் கிசுகிசுத்தான்!

“என்னை நம்பும் மகன் நீயிருக்க, எனக்கென்னடா கவலை...?” வீராப்புடன் மீசையை முறுக்கி விட்டுக்கொண்டார் ராகவன்!

அத்தியாயம் : மூன்று
எழுதியவர் :
கி. இரகுநாதன்.



“ஐயா..! உங்களைப் பார்க்க அஞ்சு கிராமத்து பஞ்சாயத்து தலைவருங்க எல்லாம் வந்துக்கிட்டு இருக்காங்க..‘ தெருவை எட்டிப் பார்த்தபடி சொன்னார் பொன்னுச்சாமி.

ராகவன் சட்டென எழுந்தார். ‘என்ன பொன்னுச்சாமி..! அவங்க என்னைப் பார்க்க வராங்களா..?‘ என்றபடி வேகமாய் வந்து தெருவை எட்டிப் பார்த்து, வருபவர்களைக் கைகூப்பி வணங்கினார். ‘வாங்க.... வாங்க... எல்லோரும் எப்படி இருக்கீங்க...? உள்ள வாங்க..‘ என்று உள்ளே அழைத்துச் சென்றார். எல்லோரும் மகிழ்ச்சியுடன் உள்ளே சென்று பெரிய ஹாலின் மத்தியில் போடப்பட்டிருந்த சோபாவில் அமர்ந்தனர்.

ராகவன் வந்தவர்களிடம் விசாரித்தார். ‘‘என்ன பலராமன்.. இளைச்சிட்டீங்க...?? அய்யாசாமி... அம்மா நல்லா இருக்காங்களா..? மணி... கோவிந்தன்... குமார்... புள்ளைங்க நல்லா படிக்கறாங்களா..?” என்று கேட்க, அனைவரும் பெருமிதத்துடன் வணங்கினர்.

பலராமன், “ஐயா..! எங்க எல்லோரையும் கவனம் வெச்சுகிட்டு இவ்வளவு தூரம் விசாரிக்கிறீங்க. உங்க நல்ல மனசுக்கு இனிமே ஒரு குறையும் வராதுங்கய்யா. உங்களை போயி...’’ பேசமுடியாமல் கண்கலங்கினார்.

அவர் அருகில் வந்து ஆதரவாக அணைத்தார் ராகவன். ‘‘பலராமா.. மார்புல பாயும்னு தெரியாமயே கணேசன்ங்கற கடாவை வளர்த்துட்டேன். இருக்கட்டும்... இள ரத்தம்.. துடிக்கத்தான் செய்யும்... நாம தான் பார்த்து துடிப்பை அடக்கணும்..” என்று சொல்லிக்கொண்டே தன் இருக்கைக்குப் பக்கத்தில் இருந்த பாக்கெட்டுகளை ஒவ்வொன்றாக அனைவருக்கும் கொடுத்தார். ‘திருவிழா வருதுல்ல.. வீட்ல எல்லோரும் புதுத்துணி உடுத்துங்க..‘ என்று சொல்லி கைகூப்பி வணங்கினார். ‘போய் வாங்க...‘ என்றார்.

அனைவரும் தங்களை மறந்து புறப்பட எத்தனிக்க, அய்யாசாமி அவர்களை அதட்டினார். ‘‘யோவ்..! என்னய்யா... எதுக்காக வந்தோமோ அத மறந்துட்டு அப்படியே புறப்பட்டா என்ன அர்த்தம்..?” என்றவர் ராகவனிடம், ‘ஐயா... மன்னிக்கணும். தொடக்கப்பள்ளி மட்டும் இருந்த இந்த கிராமத்துல, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளின்னு வந்ததுக்குக் காரணமே நீங்கதான். நீங்க பெரும் முயற்சியெடுத்து மேல்நிலைப் பள்ளியா இதை மாத்துற நேரத்துல அந்தக் களவாணிப் பய கணேசன் உள்ளே

நுழைஞ்சான். எங்களோட போதாத நேரம்,.. நாங்க அவனை நம்பிட்டோம். இப்ப... நீங்க தான்... மறுபடியும்..” என்று இழுத்தார்.

ராகவன் முதல்முறையாக கோபத் துடன் பேசினார். “மனுசன்னா கொஞ்ச மாவது சுய அறிவு வேணும் அய்யாசாமி. என் மகனும், மருமகளும் வெளிநாட்டுல வேலை பண்றாங்க. இந்தக் கிராமத்தைப் போல பத்து கிராமத்தை விலைக்கு வாங்குற அளவுக்கு சொத்து இருக்கு. பள்ளிக்கூடம் கட்டுறதுல ஊழல் பண்ணேன்னு அந்தப் பிலக்கா பையன் சொன்னது கூட வருத்தமில்ல.. ஆனா நீங்கள்லாம் அந்தப் பாம்பை நம்பிட்டீங்களே... அது தான் மனசுக்கு கஷ்டமா இருக்கு... இந்த ஊரே என்னை எவ்வளோ பேசினீங்க... மேல்நிலைப் பள்ளிக்கூடம் கட்ட இன் னைக்கு வரைக்கும் ஒரு கல்லையாவது எடுத்து வைக்க முடிஞ்சதா அவனால...” என்றவர் பார்வை வெளியில் சென்றது. ஊரார் ஒவ்வொருவராக எட்டிப் பார்க்க, தன் மகனை அழைத்தார். “டேய்.. பிரபு.. வரவங்க எல்லோருக்கும் துணிமணிங்கள கொடுய்யா.. இந்த வருசம் திருவிழா சமயத்துல ஊரில் எல்லோருக்கும் புதுத் துணி நாம தந்ததா இருக்கட்டும்...'' என்றார்.

திடீரென்று அந்த இடமே திருவிழா போல மாறியது. ஊரார் ராகவன் குடும் பத்தினரை வாழ்த்தி வணங்க... கூட்டத் தினரை விலக்கி ராகவன் வீட்டுத் திண்ணையில் ஏறி கையோடு கொண்டு வந்திருந்த ஒலிபெருக்கியில் கோபமாய் பேச ஆரம்பித்தான் கணேசன்.

“நான்சொல்றதைஎல்லோரும்கொஞ்சம் பொறுமையா கேளுங்க. பள்ளிக்கூடம் கட்டுறதுல இவருக்கும் கட்டிட காண்ட் ராக்டருக்கும் நடந்த உரையாடலை அவங்களுக்கே தெரியாம பதிவு பண்ணி உங்ககிட்ட காட்டினப்புறம்தான் நீங்க நம்பினீங்க. இப்போ இவரு இனாமா கொடுக்கறதுல மயங்கிடாதீங்க..” அவன் குரல் எங்கும் எதிரொலித்தது.

“அவர் கொள்ளையடிச்சதாகவே இருக் கட்டும்.. ஊருக்கு நல்லது செய்யறாருல்ல.. உனக்கு ஏன்யா வயித்தெரிச்சல்..?'' என்றான் கூட்டத்தில் ஒருவன்.

அதுவரை அமைதியாக இருந்த ராகவன் சிரித்தார்.

''என் தம்பி கணேசனை பேச விடுங்கப்பா.. என்ன தான் சொல்றான்னு கேட்போம்... தம்பி கணேசா.. போன முறை நான் காண்டிராக்டர்கிட்ட பேரம் பேசியதாகச் சொல்லி இந்த அப்பாவி ஜனங்கள ஏமாத்திட்டே. இப்பக் கூட உன் சட்டை பட்டன்ல வீடியோ கேமரா இருக்குன்னு எனக்குத் தெரியும். உன் கையில் இருக்கற அந்த ஒலிபெருக்கிய கொஞ்சம் கொடுக்கறியா..?'' என்று சொல்லி கணேசன் பதில் அளிப்பதற்குள் ஒலிபெருக்கியை வாங்கினார். பிரபு தன் லேப்டாப்பிலிருந்து ஒலிபெருக்கிக்கு இணைப்பை ஏற்படுத்தி சிலவற்றைத் தட்டினான். தந்தையைப் பார்த்து தலை யசைத்தான்.

ராகவன் பேசினார்...

“காண்ட்ராக்டரும், நானும் பேரம் பேசினதாஅன்றைக்குஇந்ததம்பிகணேசன் சொன்னதை நம்பி நீங்க எல்லோரும் என்னை அவமானப்படுத்தினீங்க. 'நான் அப்படி பேசவே இல்ல.. அதில் இருந்தது என் குரல் இல்ல'ன்னு உங்க காலில் விழாத குறையா கெஞ்சினேன். நீங்க கேட்கலை.. இப்ப உங்களுக்கு உண்மை தெரியும்..” என்று சொல்லி பிரபுவைப் பார்த்தார்.

பிரபு லேப்டாப்பை தட்ட... சில நொடிகளில் காமராசர் பேசினார்.

'நான் சொல்றதை எல்லோரும் கொஞ்சம் பொறுமையா கேளுங்க. பள்ளிக்கூடம் கட்டறதுல இவருக்கும் கட்டிட காண்ட்ராக்டருக்கும் நடந்த உரையாடலை அவங்களுக்கே தெரியாம பதிவு பண்ணி உங்ககிட்ட காட்டினப்புறம் தான் நீங்க நம்பினீங்க. இப்போ இவரு இனாமா கொடுக்கறதுல மயங்கிடாதீங்க..'

ஜனங்கள் சற்று நேரம் திகைத்தனர்.! கணேசன் சற்று முன்னர் பேசிய அதே வார்த்தைகள். வரிக்கு வரி... வார்த்தைகள் மாறாமல்... பெருந்தலைவர் காமராசர் குரலில்...

ராகவன் புன்னகைத்தார். "மலைச்சிடாதீங்க... இதோ பேரறிஞர் அண்ணா பேசுவார்..."என்றார்.

பிரபு மீண்டும் லேப்டாப்பைத் தட்ட இப்போது மீண்டும் அதே வார்த்தைகள்... ஆனால் அறிஞர் அண்ணாவின் குரலில்...

மக்கள் மட்டுமல்ல... கணேசனும் அதிர்ச்சியிலிருந்து மீளவதற்குள், கலைஞர், எம்.ஜி.ஆர், சிவாஜி என அடுத்தடுத்து எல்லோருடைய குரலிலும் அதே வார்த்தைகள் வந்து விழுந்த வண்ணம் இருந்தன. கடைசியாக அதே வரிகள் ராகவன் குரலில்...

திடீரெனஅந்தஇடமேஅமைதியானது. சற்று நேரம் யாரும் எதையும் பேசவில்லை.

அமைதியை உடைத்தது ராகவனின் கணீர் குரல்.

'தம்பி கணேசா..! என் மேல எதுக்குடா இந்த கோபம்..? என்னை ஏன் பழி வாங்கணும்னு துடிக்கற.. அப்பாவி ஊர் ஜனங்க இனிமேலும் நீ சொன்னதை நம்ப மாட்டாங்க.. நீ இந்தக் கிராமத்துக்கு ஏதாவது நல்லது பண்ணு... நானே உன்னை பாராட்டறேன்... மகா ஜனங்களே.. கணேசனை ஒண்ணும் பண்ணிடாதீங்க.. அவன் பாவம்....'' என்று சொல்லிக் கொண்டிருந்த போதே ஒரு கல் பறந்து வந்து கணேசனைத் தாக்கியது. சூழ்நிலையின் தீவிரத்தை உணர்ந்த கணேசன் சட்டென்று திண்ணையிலிருந்து குதித்து ஓடினான். கூடியிருந்த கிராமத்து மக்களில் சிலர் அவனைத் துரத்தினர்.

........................

'இந்த ராகவனை யாருன்னு நினைச்சான் அந்த கணேசன். மடையன். இந்த ஊருக்குள்ள வந்தா அவன் உசுரு அவனதில்ல.. மக்களை அவனுக்கு எதிரா திருப்பிட்டேன். இனிமே யாரும் என்னை கேள்வி கேட்க மாட்டாங்க.. யோவ் காண்டிராக்டரு... என்னய்யா சொல்றீரு. இன்னும் இருபத்து நான்கு கிராமங்கள்ல பள்ளிக்கூடங்கள் கட்டும் ஒப்பந்தம் என் கையில் இருக்கு. எனக்கு எவ்வளவு கமிஷன்..' என்று ராகவன் பேரம் பேசிக் கொண்டிருக்க....

அங்கே சிலந்தி வலை பின்னிக் கொண்டிருந்தது!


அத்தியாயம் : நான்கு
எழுதியவர் :
விஜி சிவா




பூஜா உன்னிப்பாய்க் கவனித்துக் கொண்டிருந்தாள்...! அந்த எட்டுக்கால் பூச்சி வேகவேகமாய் வலையைப் பின்னிக் கொண்டிருந்தது. வாசல் கதவிற்கு மேலிருந்த அந்தக் கண்ணாடி சன்னலில், கதவிற்கும் கம்பிகளுக்கும் நடுவில் சுற்றிச் சுற்றி வந்து, ஒன்றோடு ஒன்றை இணைத்து,

சரியான இடைவெளியில் வலையை இழுத்துப் பார்த்துக் கொண்டிருந்தது.

“பூஜா கண்ணு... வீடியோ கேமராவை வச்சுக்கிட்டு தாத்தா ரூம்ல என்ன பாத்துகிட்டு இருக்க..?” ஆவலாய் அபிராமி கேட்க,

“பாட்டி... அங்க பாரு; அந்த எட்டுக் கால் பூச்சி திரும்பவும் வல பின்னுது! அதான்... நீ சொன்னியே.... ம்ம்... நூலாம் படை...” என பாட்டியின் கன்னம் கிள்ளிச் சிரித்தாள் பூஜா.

‘‘ஆஹா...! சாந்தியோட பார்வை யிலிருந்து தப்பிச்சு, என் குட்டிமா பார்வையில விழுந்துருச்சு பாரு....” எனச் சிரித்தபடி பூஜாவின் கன்னம் கிள்ளிய அபிராமி, “இரு... சாந்திய கூப்பிட்டு அந்த ஒட்டடையை அடிக்கச் சொல்றேன்...” என்றாள்.

‘‘வேணாம் பாட்டி... அது எப்படி கட்டி முடிக்குதுனு பார்ப்போம்... இன்ட்ரஸ்டிங்!” என்றபடி சிலந்தியை வீடியோ எடுத்துக் கொண்டிருந்தாள் பூஜா.

“பாட்டி... இந்த கேமரா இங்கேயே இருக்கட்டும்; தொட்டுடாத. அது வீடியோ எடுத்துட்டு இருக்கு... நான் அதுக்குள்ள என் போன்ல, இந்த எட்டுக்கால் பூச்சியை பத்தி படிச்சிட்டு வரேன்.” என்றபடி சிலந்தியைப் பற்றிய விபரங்களை வலை தளத்தில் தேட ஆரம்பித்தாள் பூஜா.

“சரி சரி... சீக்கிரம் தோசை சாப்பிட வாடா குட்டிமா.”

பூஜா தன் கண்களை அகல விரித்து, பாவமாய் ஒரு பார்வை பார்த்தபடி...

“ப்ளீஸ் பாட்டி.... மொறு மொறுன்னு தோசை சுட்டுகிட்டு வந்து, நீயே எனக்கு ஊட்டி விடுவியாம்.! என் செல்ல பாட்டில...” கண்ணடித்தாள்!

“பதினாலு வயசு ஆச்சு... இன்னும் குழந்தையாகவே இருக்கியே... சரி... சரிடா தங்கம், பாட்டி எடுத்துட்டு வர்றேன்...” பாசமாய்ப் புன்னகைத்தபடி அடுக் களையை நோக்கி விரைந்தாள் அபிராமி.

சற்றுநேரத்தில் பூஜாவின் முகம் ஆச்ச ரியத்தில் மலர, சத்தமாய்க் கூப்பிட் டாள்...‘பாட்டீ....‘

“இதோ வந்துட்டேன்...” இடுப்பில் செருகிய சேலையுடன், நெய் மணக்கும் சூடான தோசையுடன்... ஓட்டமும் நடையுமாய் வந்தாள் அபிராமி.

‘பாட்டி... உனக்கு ஒண்ணு தெரியுமா...? எட்டுக்கால் பூச்சிக்கு ஆறிலிருந்து எட்டுக் கண்ணு வரைக்கும் இருக்குமாம். அது சன்ரைசுலயும், சன்செட்லயும் மட்டும் தான் பூச்சிகள பிடிக்கிறதுக்கு இந்த நூலாம்படைய பின்னுமாம்! ஏன்னா... அப்பத்தான் அதிக பூச்சிகள் வருமாம்.! ‘வாவ்’... செம டேலண்ட்ல பாட்டி‘ புருவம் தூக்கி வியந்தாள்!

நூலாம்படையைப் பார்த்துவிட்டு சாதாரணமாக அனைவரும் கடந்து செல்கையில், தன் பேத்தி இதை இவ்வளவு தீவிரமாக, ஆர்வமாகப் பார்ப்பதை நினைத்துப் பெருமை அடைந்த அபிராமி., பூஜாவுக்கு தோசையை ஊட்டி விட்டபடி அந்த நூலாம்படையைப் பார்க்க...சில நினைவுகள் அந்த வலைக்குள் சிக்க முயற்சித்தன.!

பாட்டியை உற்றுப் பார்த்த பூஜா மெதுவாய்க் கேட்டாள் “கணேஷ் தாத்தா கெட்டவரா பாட்டி...?”

ஒரு நொடி திடுக்கிட்ட அபிராமி, கண்கலங்க... “அவர் ரொம்ப நல்லவருடா கண்ணு... என் பிள்ளை மாதிரி.” என்றாள்.

“கணேஷ் தாத்தா பத்தி கொஞ்சம் சொல்லேன் பாட்டி...'' பாட்டியின் தோளில் சாய்ந்து கொண்டாள் பூஜா.

“நான் கல்யாணம் பண்ணி இந்த வீட்டுக்கு வந்தப்ப அவன் அஞ்சு வயசு குழந்தை; நாந்தான் அவன வளத்தேன்...கல்யாணம் பண்ணி வச்சோம். எங்க மேல அவனுக்கு ரொம்ப பாசம்..!” வார்த்தைகள் விம்மின.!

“அப்புறம் ஏன் பாட்டி நம்ம தாத்தாவும் கணேஷ் தாத்தாவும் சண்டை போட்டுக்கிறாங்க....?”

சிறிது நேரம் தயங்கியவள்... “என்ன சொல்றதுடா குட்டிமா... ஏதோ போதாத காலம்!” முந்தானையால் தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்... ‘‘சரிடா தங்கம்... பாட்டிக்கு கொஞ்சம் அடுப் படியில வேலையிருக்கு; அப்புறம் வரேன்... நீ சீக்கிரம் உன் ரூமுக்கு போய்த் தூங்கு.” என்றபடி அவசரமாய் அங்கிருந்து கிளம்பினாள்.

சிலந்தி இன்னும் வலையைப் பின்னிக் கொண்டிருந்தது..! ‘‘இது எப்பொழுது பின்னி முடிக்கும்னு தெரியலயே...?'' மேஜை மேலிருந்த கேமராவை எடுத்து அலமாரியின் மேல் இருந்த புத்தகங்களின் நடுவில், அந்த வீடியோ கேமராவைப் பொருத்தி சரி பார்த்தாள். இப்பொழுது இன்னும் தெளிவாக சிலந்தி வலை பின்னுவது தெரிய ஆரம்பித்தது.! ’சூப்பர்’ மகிழ்ச்சியுடன் தன் அறை நோக்கிச் சென்றாள் பூஜா.

........................

பொழுது புலர்ந்தது....!

நூலாம்படையில் சில பூச்சிகள் மாட்டி யிருந்தன!

சிலந்தி வலை பின்னுவதை நிறுத்தி யிருந்தது...!

சற்று நேரத்தில் அந்த ஐந்து ஊர் பஞ்சாயத்துத் தலைவர்களும், அந்த ஊர் மக்களில் பலரும், ராகவனின் வீட்டின் முன்பு கூடியிருந்தனர்!

வீட்டிற்குள்ளிருந்து வெளியில் வந்த ராகவன், சற்றே குழப்பத்துடன் புன்ன கைத்தார்! ‘வாங்க..வாங்க... என்ன எல்லாரும் காலையில நம்ம வீடு தேடி வந்திருக்கீக....?‘

“நீங்கதானுங்..கய்யா... வரச் சொன்னதா நம்ம பொன்னுச்சாமியும், சாந்தியும் சொன்னாக...!?'' ஒருவரை யொருவர் குழப்பத்துடன் பார்த்துக் கொண்டனர்.

“நான் தான் வரச் சொன்னேன்!‘ என்று தெளிவான குரலில் கூறியபடி வந்தான் பிரபு. ‘நம்ம பூஜா எடுத்த ஒரு படத்தை போட்டுக் காட்டலாம்னு.”

அங்கிருந்தவர்களின் குழப்பத்திற்கும், சலசலப்புக்கும் நடுவில்... ஒரு நாற்காலி மீது அந்தக் கணினியை வைத்தாள் பூஜா.

ராகவனின் புருவம் கேள்விக்கணை யானது.!

பிரபு பூஜாவைப் பார்க்க, பூஜா ஒரு பட்டனைத் தட்ட... கணினியின் திரையில் படம் ஓடியது.

அதில்... அந்தச் சிலந்தி அழகாய், மிகப் பெரியதாய் வலை பின்னிக் கொண்டிருந்தது! மிக நுணுக்கமாக அது வலையைப் பின்னிய விதமும், பூச்சிகள்

சிக்கும் மட்டும் தவமிருக்கும் அதன் கண்களும், சட்டென்று இரையைக் கவ்விப் பிடிக்கும் அதன் லாவகமும்... அனைத்தும் நிசப்தமான படத்தில் அற்புதமாய் இருந்தது!

அபிராமி பெருமை பொங்கும் முகத்துடன் பேத்தியை அணைத்துக் கொண்டாள்.

அனைவரும் அதை ஆச்சரியத்துடன் பார்த்தாலும், கூட்டத்தில் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு முணுமுணுத்தனர்... ‘‘இதப் பாக்கவா காலங்காத்தால நம்மள வரச் சொன்னாங்க...?’’

“படம் நல்லா இருக்குங்களா?” கூட்டத்தினரைப் பார்த்து பிரபு கேட்க,

பஞ்சாயத்துத் தலைவர் அப்புசாமி சற்றே தயங்கித் தயங்கி கூறினார்... “நம்ம பூஜா குழந்தை எடுத்ததுங்களா...! ரொம்ப நல்லா இருக்குங்க! ஆனா.... இதுக்காகவா வரச் சொன்...னீங்க..?”

கூட்டத்தினரின் சலசலப்பைப் பார்த்து, கையெடுத்துக் கும்பிட்டவாறு பிரபு சொன்னான். “ஒரு நிமிஷம்... எல்லாரும் எங்கள மன்னிக்கணும்! எனக்காக இந்தப் படத்தை, நீங்கள்லாம் இன்னொரு முறை சப்தத்தோட பார்க்கணும்! உங்களின் பல வருட கேள்விகளுக்கான பதில்கள் இதுல இருக்கு” என்றவன், தன் மகளைப் பார்த்து நிதானமாய்ச் சொன்னான், “பூஜா தங்கம்... ஆடியோவையும் ஆன் பண்ணு!”

இப்பொழுது சிலந்தி வலையைப் பின்னப் பின்ன, ராகவனின் குரல் கணினியில் ஒலித்தது.

‘‘பள்ளிக்கூட காண்ட்ராக்டரை மிரட்டும் குரலும், உயர்நிலைப் பள்ளியின் கட்டுமானத்தில் தான் செய்த ஊழலும், கணேசை எப்படி வஞ்சகமாய் ஊர்க்காரர்களிடம் மாட்டி விட்டேன் என கொக்கரிக்கும் குரலும், இனி மேல்நிலைப் பள்ளியைக் கட்டும் திட்டத்தில் தான் சுருட்ட நினைக்கும் தொகையையும், இந்த ஊர்க்கார முட்டாள்கள் இனி தன்னை எந்தக் கேள்வியும் கேட்க மாட்டார்கள் என குதூகலிக்கும் குரலும், இறுதியில் ஒரு ஓங்காரச் சிரிப்புடன் ‘‘யார் தலையில் இடிந்து விழுந்தால் எனக்கென்ன? போய்யா...’’ என்ற அலட்சியமான தொனியும்....!!!

ராகவனின் குரல் மிகத் தெளிவான சத்தத்துடன் ஒலித்துக் கொண்டிருக்கையில், அந்தச் சிலந்தி வலையில் மாட்டிக் கொண்ட பூச்சி தப்பிக்க வழி தேடித் துடித்தது.!

‘‘அப்பா... நம் உயிரையே பறித்து விடும் சில சிலந்திகளும் உண்டாம்..!’’ பூஜா சத்தமாய்ச் சொன்னாள்.

பூஜாவின் வார்த்தைகளாலும், பிரபு தன் அப்பாவைப் பார்த்த அந்த இழிவான பார்வையாலும், ராகவனின் இதயம் எதிலெதிலோ சிக்கிக் கொண்டு மிகச் சத்தமாய்த் துடித்தது!

ராகவனின் பார்வையில் நூலாம்படை படர...

ஊர்க்காரர்களின் கண்களில் பல சிலந்திகள் தெரிய ஆரம்பிக்க...

கணினியின் திரையில், உணர்விழைகள் இல்லா சிலந்தி தன் எட்டுக் கண்களுடனும், எட்டுக் கால்களுடனும் பூச்சியை மெதுவாய் நெருங்கிக் கொண்டிருந்தது!

(முற்றும் )

# MUTUR JMI PUBLICATION

MUTUR

## Offset Printing & Photocopy , Print Services

**MINIMUM QUANTITY 100**

**Book Publication & Printing Center**

**Island Wide Free Delivery Available**

Book Binding | Teachers Guide | Past Papers | Certificate | Assignment | Syllabus Notes & Books | Tution Class Tutes | Offset Work | Photo Printing | Album Printing | Advertisement & Leaflet |

FREE DELIVERY










### Offset Printing

- Four Color to One Color
- 70 - 250 GSM Papers
- A5, A4, A3, Offset Printing
- Photocopy & Duplo
- Typing & Layouts
- Cover Design
- Visiting Card

### Book Binding

- Perfect & Hard Binding
- Book Publication
- Glossy & Mett Lamination
- 50 - 120 Gsm Papers
- Magazine, Book, Project
- Publications Sponsorship
- Instalment Payment Available

### Color Printing

- Four Color (Inject & Laser)
- 70 - 300 GSM Board & Papers
- A5, A4, A3, B5, Color Printing
- Certificate & Photos
- Layouts & Designing
- Visiting Cards, Invitation and All Types of Wedding Cards
- Art Paper, Photo Board, Sticker, Ivory Board, and Etc

**Mutur JMI**
Contact Now
**077 1020030**
**0262238593**

**Our Office**
Bazar Mosque Road
Mutur - 04. 31200
Trincomalee. Sri Lanka

**More Information**
www.mutur-jmi.com
muturjmi@gmail.com
https://g.co/kgs/wBo6ob

பல்சுவை
# தமிழ்நெஞ்சம்
tamilnenjam.com
மார்ச் 2024

## காலம் கடத்தாய் என்நெஞ்சே

கண்கலால் பழகும் காதல்
  கால்களால் தொடரும் மோகம்
எண்ணறு கனவில் தூக்கம்
  இயல்பற நடக்கும் நாட்கள்
விண்மதி வெப்பம் ஏற்றும்
  விடுப்பினை இதயம் கேட்கும்
தன்னிகர் இல்லா சொந்தம்
  தாவணி மங்கை என்று

அயற்சியில் எண்ணி எண்ணி
  அடடடா கண்கள் கண்ணி
துயரமே உருவாய் மாறி
  தூதென மலர்கள் ஓடி
தயக்கிடா மனத்தால் காதல்
  தகும்படி சொல்ல வந்தும்
மயக்கமொன் றேதோ செய்ய
  மடிகிறேன் நாளும் நாளும்

அச்சமே அன்றி நெஞ்சின்
  ஆசையைச் சொல்லு தற்கும்
மிச்சமே இல்லா வண்ணம்
  மிகைந்திடைக் கிள்ளு தற்கும்
உச்சமாய் முடிவை முன்பே
  உணர்த்திட விதியே வாவா
இச்செகந் தன்னில் அந்த
  எழிலுறு பெண்ணைத் தாதா

தமிழ்நெஞ்சம் அமின்
(ஆசிரியர்)